கோட ஆசார்யர்
[illegible]
மணவாள மாமுனி
உடையவர்
பெரிய நம்பிகள்
ஸ்ரீ ஆளவந்தார்
மணக்கால்நம்பி.

உய்யக்கொண்டார்
நாதமுனிகள்
சடகோபர்
சேனை முதலியார்
பிராட்டி
பெருமாள் [illegible]



ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஆசார்ய

ஹ்ருதயசாரசங்க்ரஹம்.

இஃது

தஞ்சாவூர்ஜில்லா

பென்ஷன்ட் ஹெட்மிரஸ்தேதாரரும்,

அஷ்டதிக்கெஜங்களுக்குள் ப்ரதமகன்யரான

ஸ்ரீ. உ. வே. ஸ்ரீமான்வாதூலதேசிகர்

கோயில்கந்தாடை அண்ணன்ஸ்வாமி

திருவடிஸம்பந்தியும்,

இராயப்பேட்டை ஸ்ரீவரவரமுநீந்த்ரரை வாழ்த்தும்

ஸபாக்ராஸநாதிபதியும்,

பகவத்பாகவத கைங்கர்யதுரந்தரரான

ஸ்ரீவைஷ்ணவோத்தமர்களுடைய

ஸ்ரீபாதரேணுவுமாகிய,

திருமங்கைமன்னன் ஸம்பந்தமாரனென்னும்

திரு - கோபாலக்ருஷ்ணப்பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீபராங்குசர் திருவவதார௵ சகூகூச-க்குச்சரியான

நந்தன௵ கார்த்திகைமீ.

1892.

விலை. ரூபா - ரூ.

(All Rights Reserved)

ஸ்ரீ

"கண்ணன்கழலிணை நண்ணுமனமுடையீர்
எண்ணுந்திருநாமந் திண்ணம்நாரணமே
நாரணனெம்மான் பாரணங்காளன
வாரணந்துலைத்த காரணன்றானே"

ஆசார்ய ஹ்ருதயசாரசங்க்ரஹத்தில்

அடங்கிய விஷயங்கள்.

		விஷயங்கள்.	பக்கம் முதல்.	பக்கம் வரையில்.
		தனியன்கள்	௧	௪
		ஆமோதபத்யங்கள்	௫	௧௮
		அவதாரிகை	௧	௪
௧	சாரசங்க்ரஹம்.	1-ம் ப்ரகரணம்	௧	௨௬
		2-ம் ஷை	௨௭	௩௮
		3-ம் ஷை	௩௯	௪௮
		4-ம் ஷை	௪௯	௫௨
௨	திருவாய்மொழிப்பாட்டுக்களின் விஷயஸங்க்ஹை.	௧-ம் பத்து	௧	௮
		௨-ம் ஷை	௯	௧௬
		௩-ம் ஷை	௧௬	௨௫
		௪-ம் ஷை	௨௫	௩௪
		௫-ம் ஷை	௩௪	௪௨
		௬-ம் ஷை	௪௩	௫௪
		௭-ம் ஷை	௫௫	௬௩
		௮-ம் ஷை	௬௪	௭௩
		௯-ம் ஷை	௭௩	௮௨
		௧௦-ம் ஷை	௮௨	௯௨
௩	ஐதிஹ்யங்கள்.	௧-ம் ஷை	௯௩	௧௦௧
		௨-ம் ஷை	௧௦௧	௧௦௩
		௩-ம் ஷை	௧௦௩	௧௦௭
		௪-ம் பத்து	௧௦௭	௧௧௫
		௫-ம் ஷை	௧௧௫	௧௨௨
		௬-ம் ஷை	௧௨௨	௧௨௯
		௭-ம் ஷை	௧௨௯	௧௩௪
		௮-ம் ஷை	௧௩௫	௧௩௭
		௯-ம் ஷை	௧௩௭	௧௪௪
		௧௦-ம ஷை	௧௪௪	௧௪௮
௪	நிர்வாஹகங்கள்.	௧-ம் ஷை	௧௪௯	௧௫௩
		௨-ம் ஷை	௧௫௩	௧௬௦
		௩-ம் ஷை	௧௬௦	௧௬௫
		௪-ம் ஷை	௧௬௫	௧௭௩
		௫-ம் ஷை	௧௭௩	௧௮௦
		௬-ம் ஷை	௧௮௦	௧௮௭
		௭-ம் ஷை	௧௮௭	௧௯௪
		௮-ம் ஷை	௧௯௪	௧௯௭
		௯-ம் ஷை	௧௯௭	௨௦௦
		௧௦-ம் ஷை	௨௦௧	௨௦௩
௫		நிஷ்க்ருஷ்ட அர்த்த விசேஷங்கள்	௨௦௪	௨௧௫
௬	அநுபந்தம்.	ப்ரமாணங்களுக்கு.	௨௧௬	௨௩௪
		ஸமஸ்க்ருத பதங்களுக்கு.	௨௩௫	௨௪௦
		பிழைதிருத்தம்	௨௪௧	௨௪௨

ஸ்ரீமத்வரவரமுநயே நம:.

ஸ்ரீ அழகியமணவாளமாமுநிகள்

தனியன்.

శ్రీశైలేశదయాపాత్రం - ధీభక్త్యాదిగుణార్ణవం।
యతీంద్రప్రవణంవన్దే - రమ్యజామాతరంమునిం॥

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் - தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம்வந்தே - ரம்யஜாமாதரமுநிம்.

கோயிற்கந்தாடை அண்ணன்கூடஸ்தர் தனியன்.

సకలవేదాన్తసారార్థపూర్ణాశయం।
విపులవాధూలగోత్రోద్భవానాంవరం।
రుచిరజామాతృయోగీన్ద్రపాదాశ్రయం।
వరదనారాయణంమద్గురుంసంశ్రయే॥

ஸகலவேதாந்தஸாரார்த்தபூர்ணாசயம்
விபுலவாதூலகோத்ரோத்பவாநாம்வரம்
ருசிரஜாமாத்ருயோகீந்த்ரபாதாச்ரயம்
வரதநாராயணம்மத்குரும்ஸம்ச்ரயே.

ஸ்வாசார்யர் தனியன்.

శ్రీమద్వాధూలకులవారిధిపూర్ణచంద్రం।
శ్రీమద్వరప్రదగురోత్తమపుత్రరత్నం।
స్మృత్యన్తయుగ్మవిశదీకరణైకదీక్షం।
శ్రీరఙ్గదేశికమహం శరణంప్రపద్యే॥

ஸ்ரீமத்வாதூலகுலவாரிதிபூர்ணசந்த்ரம்
ஸ்ரீமத்வரப்ரதகுரோத்தமபுத்ரரத்நம்
ஸம்ருத்யந்தயுக்மவிசதீகரணைகதீக்ஷம்
ஸ்ரீரங்கதேசிகமஹம்சரணம்ப்ரபத்யே.

ஸ்ரீ. உ. வே. ஸ்ரீமான் சிறுபுலியூர் திருவாழி அண்ணன்ஸ்வாமி பரமக்ருபையினால் அருளிச்செய்தது.

శ్రీమత్కల్యరిసమ్పదాత్మజమముం గోపాలకృష్ణాహ్వయం।
శ్రీమత్సౌమ్యవరార్యవీక్షణవశాత్ వాధూలధుర్యస్య వై।
సంశ్రుత్యాశువరప్రదాహ్వయగురో పాదౌసరోజప్రభౌ।
భక్తం రఙ్గపురీశ్వరః పదనతం విష్ణుశ్చిరం రక్షతాత్॥

ஸ்ரீமத்கல்யரிஸம்பதாத்மஜமமும்கோபாலக்ருஷ்ணாஹ்வயம்।
ஸ்ரீமத்ஸௌம்யவரார்யவீக்ஷணவசாத்வாதூலதுர்யஸ்யவை।
ஸம்ச்ருத்யாசு-வரப்ரதாஹ்வயகுரோப்பாதௌஸரோஜப்ரபௌ।
பக்தம்ரங்கபுரீச்வர:பதநதம்விஷ்ணுச்சிரம்ரக்ஷதாத்॥

அந்தரங்கர்கள்சாதித்தவை.

శ్రీబృందారణ్యగీతాగురువరకరుణా వీక్షణప్రాప్తబోధః।
శ్రీరఙ్గాచార్యపాదామ్బుజమధుకర గోపాలకృష్ణాఖ్యసూరిః।
ఆచార్యస్వాన్తసారం వ్యలిఖదమితధీః సఙ్గ్రహేణప్రబన్ధం।
దృష్ట్వాతం శ్లాఘయన్తస్సకలబుధజనాః మామకోద్దేశ్యభూతాః॥ (౧)

ஸ்ரீப்ருந்தாரண்யகீதாகுருவரகருணாவீக்ஷணப்ராப்தபோத:।
ஸ்ரீரங்காசார்யபாதாம்புஜமதுகரகோபாலக்ருஷ்ணாக்யஸூரி:।
ஆசார்யஸ்வாந்தஸாரம்வ்யலிகதமிததீ:ஸங்க்ரஹேணப்ரபந்தம்।
த்ருஷ்ட்வாதம்ச்லாகயந்தஸ்ஸகலபுதஜநா:மாமகோத்தேச்யபூதா:॥

వృశ్చికే చిత్రాసమ్భూత।
శ్రీరఙ్గార్యపదాశ్రితం।
ఆచార్యస్వాన్తసారార్థ।
వక్తారం కృష్ణమాశ్రయే॥ (౨)

வ்ருச்சிகேசித்தாஸம்பூத
ஸ்ரீரங்கார்யபதாச்ரிதம்।
ஆசார்யஸ்வாந்தஸாரார்த்த
வக்தாரம்க்ருஷ்ணமாச்ரயே॥

நேரிசைவெண்பா.

போற்றுங்கந்தாடையண்ணன்பொன்னடிக்கேபூப்புனைந்து
சாற்றுங்கோபாலகிருஷ்ணன்தாளிணையை—ஏற்றுவேன்
எங்குமாசார்யவிருதயசாரசங்கிரகம்
பொங்குமாறுள்ளம்புகழ்ந்து. (௩)

நூற்பயன்.

எழுசீர்க்கழிநெடில்.

இன்னமுதெனநன்றிசைக்குமாசாரயவிருதயசாரசங்கிரகம்
தன்னைமெய்யுணர்வாலிடைவிடாதநுசந்தானமேசெய்பவரிங்கு
மன்னியசெல்வம்போகபோக்கியமுமகப்பெறுமகிழ்ச்சிவாணாளும
பின்னையவ்வுலகிற்போகமுமழியாப்பெரும்பதமதனையும்பெறுவார். (௪)

வாழித்திருநாமங்கள்.

திருவளர்மா மணிமாடன சீரருளா லாதி
சேடாம்ச பூதனெனுஞ் சிறப்புற்றோன் வாழி
உருவளர்நம் பூர்வாசா ரியர்களே வீடிங்
குறுதிபெறத் தருமதிகா ரிகளெனற்றோன வாழி
மருவளர்பைந் துளவணியல் வனைந்தருளம் பெருமாள்
மலரடிகட் கெப்பொழுது மனதுவைத்தோன் வாழி
அருவளர்பே ரருள்வடிவா யெழுந்தருளு மாசார
யவிதயசார சங்கரகம் வெளியிட்டோன் வாழி. (௫)

பெருகியநான் மறையெனுநா லாயிரமாந் திவ்ய
ப்ரபந்தமே திருமந்த்ர மென்றருள்வோன் வாழி
மருவியவந நான்கினையு நான்குப்ர கரணமாய்
வகுத்ததொரு க்ரந்தமென மகிழ்ந்தருள்வோன் வாழி
திருமிகுகார்த்திகைமாதஞ் சிறந்திடுசித் திரையாம்
திருநக்ஷத் திரததிலுதித் தருள்வள்ளல் வாழி
குருவருளே மிகவளரும் மங்கைமன்னன் சம்பத்
குமாரன் கோபாலகிருஷ்ணன திருவடிகள் வாழி. (௬)

நாள்பாசுரங்கள்.

எண்சீர்க்கழிநெடில்.

திருவரங்க நாதனருட் பாத்திரபூதன் சொற்
செழித்துவளர் மணவாள மாமுனிதன் னருளால்
மருவிய சதாசார சம்பந்த முற்றோன்
வாதூல தேசிகன்கண் மனங்களிக்கச் செய்தோன்
பெருகுவிசிட் டாத்வைத சித்தாந்தம் பரவப்
பேசினனோ நந்தகோ பாலகுல மதனிற்
கருணைவளர் கோபால கிருஷ்ணனுதித் திடுநாள்
கருதியநற் கார்த்திகையிற் சித்திரைநா ளதுவே. (௭)

வாழித்திருநாமம்.

பொருவரிய வரவரமா முனிவாசபாத தியடசன
பூாவாசா ரியருளாதத பொருளவிளஙகச செயதோயம்
திருநகரி யணணனெனபோன ஆயபபாடி வளாவோன
திருமஙகை மனனனருட சமபத குமாரன
அருமைவளா பாகவதோத தமாமகிழப பெறறோன
ஆசாாய விருதயசார சஙகிரக மளிததோன
கருணைவளா கோபால கிருஷணனுதித திருநாள
கருதியநற காாததிகையிற சிததிரைநா ளதுவே. (௮)

வெணபா

வாழியா சாாய விருதயசார சஙகிரகம
வாழியகோ பாலகிருஷண மாதவநதோன—வாழியவே
தனனிகரின மஙகைமனனன சமபதகுமாரனென
இனனுமொரு நூறறாணடிருமம. (௯)

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஆசார்ய

ஹ்ருதயசாரசங்க்ரஹம்.

ஸம்ஸ்கிருத த்ராவிடவித்துவான்கள் மனமகிழ்ந்துசாதித்த

ஆமோத பத்யங்கள்.

திருக்குறுங்குடி மடாதிபதி பேரருளாள
ராமாநுஜஜீயர்ஸ்வாமி.

ఆచార్యస్వాన్తరఙ్గస్థితరసఘటనాత్ ప్రాప్తతన్నామధేయం।
గ్రన్థంగోపాలకృష్ణద్రమిడకవివరేణాదరాత్ సంప్రణీతం।
దృష్ట్వాశ్రీహృత్స్వగేహస్థలవరయతిరాడ్యామునాద్యార్యవర్యైః।
ప్రోక్తార్థ్యగ్రన్థశైలీమనభిగతమనాః సర్వదావిస్మితోఽస్మి॥ (౧)

ஆசாரயஸ்வாந்தரங்கஸ்திதரஸகடநாத்ப்ராப்ததந்நாமதேயம்।
க்ரந்தம்கோபாலகிருஷ்ண த்ரமிடகவிவரேணாதராத்ஸம்ப்ரணீதம்।
த்ருஷ்ட்வாஸ்ரீஹ்ருஸ்வகேஹஸ்தலவரயதிராட்யாமுநாத்யாரயவாயை:।
ப்ரோக்தார்யக்ரந்தசைலீமநபிகதமநா:ஸர்வதா விஸ்மிதோஸ்மி॥

பெருமாள்கோயில் அழகியமணவாளஜீயர் ஸ்வாமி.

శ్రీమద్రంగేందుపాదాంబుజపరిచరణే సర్వదా సక్తియుక్తాత్।
వాధూలార్యాద్గృహీత్వాశఠరిపుహృదయం పంచసంస్కారపూర్వం।
శ్రీమద్గోపాలకృష్ణస్వగురుని యమనాదద్భుతంసాధుసేవ్యం।
ఆచార్యస్వాంతసారంవ్యతనుతస చిరం వర్ధతాంశౌరిదృష్టేః॥ (౨)

ஸ்ரீமத்ரங்கேந்துபாதாம்புஜபரிசரணேஸாவதா ஸக்தியுக்தாத்।
வாதூலாரயாத்க்ருஹீத்வாசடரிபுஹருதயம்பஞ்சஸம்ஸ்காரபூர்வம்।
ஸ்ரீமத்கோபாலக்ருஷ்ணஸ்வகுருநியமநாதத்புதம்ஸாதுஸேவ்யம்।
ஆசாரயஸ்வாந்தஸாரம்வ்யதநுதஸசிரம்வாத்ததாம்சௌரித்ருஷ்டே:।

கோமடம்பேரருளாளராமாநுஜஜீயர் ஸ்வாமி.

వాధూలవంశకలశాంబుధి పూర్ణచంద్ర।
శ్రీరంగ దేశికపదాంబుజ చంచరీకః।
గోపాలకృష్ణకవిరాట్ గురుసంగ్రహీతం।
ఆచార్యమానసవరం వ్యలిఖత్ ప్రబంధం॥ (3)

வாதூலவம்சகலசாம்புதிபூர்ணசந்த்ர।
ஸ்ரீரங்கதேசிகபதாம்புஜசஞ்சரீக:।
கோபாலக்ருஷ்ணகவிராட்குருஸங்க்ரஹீதம்।
ஆசார்யமாநஸவரம்வ்யலிகத்ப்ரபந்தம்॥

கோயில்கந்தாடை வாதூலதேசிகராகிய அண்ணன்ஸ்வாமி.

వాధూలాన్వయవార్ధికౌస్తుభమణిః శ్రీరఙ్గసూరేః పదే।
సక్తంతచ్ఛ్రుతమంత్రలబ్ధధిషణం గోపాలకృష్ణాభిధం।
శ్రీమద్రంగధురీణ పాదవిలసత్స్వాన్తం సదారంగరాట్।
పాయాద్రామవరానుజస్యకృపయా సంలబ్ధబోధోదయం॥ (౪)

வாதூலாந்வயவார்திகௌஸ்துபமணே:ஸ்ரீரங்கஸூரே:பதே।
ஸக்தம்தச்ச்ருதமந்த்ரலப்ததிஷணம்கோபாலக்ருஷ்ணாபிதம்।
ஸ்ரீமத்ரங்கதுரீணபாதவிலஸத்ஸ்வாந்தம்ஸதாரங்கராட்।
பாயாத்ராமவராநுஜஸ்யக்ருபயாஸம்லப்தபோதோதயம்॥

பெருமாள்கோயில் - கோயில்கந்தாடை
அண்ணாவில்லப்பன்குமார
வெங்கடாசார்ய ஸ்வாமி.

శ్రీవాధూలకులాబ్ధిశీతకిరణ శ్రీవేఙ్కటార్యాత్మజాత్।
వాధూలంవరదంగురుం శ్రితవతశ్శ్రీరంగరాజాద్గురోః।
సంప్రాప్తాఖిలతత్త్వబోధలసితో గోపాలకృష్ణస్సుధీః।
ఆచార్యాంతరసారసంగ్రహం మధాన్ముద్రాపితంగ్రంథతః॥ ౫॥

ஸ்ரீவாதூலகுலாப்திசீதகிரண ஸ்ரீவேங்கடார்யாத்மஜாத்।
வாதூலம்வரதம்குரும்ஸ்ரிதவத ஸ்ரீரங்கராஜாத்குரோ:।
ஸம்ப்ராப்தாகிலதத்வபோதலஸிதோகோபாலக்ருஷ்ணஸ்ஸுதீ:।
ஆசார்யாந்தரஸாரஸங்க்ரஹமதாந்முத்ராபிதம்க்ரந்தத:॥

கோயில்கோமாண்டூர்

இளையவல்லி தொட்டையாசார்யர் ஸ்வாமி.

యోఽయంతోత్రధరోలసత్ శుభరథే పార్థాయగీతార్థదః।
తస్మైఽజాన్వయసంభవః కవివరో గోపాలకృష్ణాభిధః।

సోయంసద్గురుసూక్తిబోధనపటోః లబ్ధాత్మబోధోగురోః।
ఆచార్యాంతరసారసంగ్రహమముం శిష్టాగ్రగణ్యోఽభణత్॥ ౬॥

யோயம்தோத்ரதரோலஸங்பூ-பரதேபாாத்தாயகீதாாத்ததஃ।
தந்நைஜாந்வயஸம்பவஃகவிவரோகோபாலக்ருஷ்ணபிதஃ।
ஸோயம்ஸத்குருஸூக்திபோதநபடோஃலப்தாத்மபோதோகுரோஃ।
ஆசாாயாந்தரஸாரஸங்க்ரஹமமும்ஶிஷ்டாக்ரகண்யோபணத்॥

ఆచార్యహృదయనామక।
లోకాచార్యానుజోక్తినిర్మథనాత్।
తత్సారసంగ్రహామృతం।
ఉద్ధృతవాన్గోపాలకృష్ణాఖ్యః॥ ౭॥

ஆசாாயஹ்ருதயநாமக।
லோகாசாாயாநுஜோக்திநிாமதநாத்।
தத்ஸாரஸங்க்ரஹாம்ருதம்।
உத்ருதவாந்கோபாலக்ருஷ்ணக்யஃ॥

జీయ్యాదార్కనిశాకరంకృతిరియం మహ్యంసదాసాధవో।
మోదంతాంకృతిమీక్ష్యసారకృతి నానూయాఃక్వచిద్దుర్జనాః।
ఆశాసేకృతయేశుభం వరకృతేరుత్పన్నమాధ్వీర్ఝరీ।
మగ్నాస్తత్వధియఃకృతేస్సుసదృశీనాన్యాకృతౌసార్థతా॥ ౮॥

ஜீய்யாதாாக்கஶிஶாகரம்க்ருதிரியம்மஹ்யம்ஸதாஸாதவோ।
மோதந்தாம்க்ருதிமீக்ஷ்யஸாரக்ருதிநாஸூயாஃக்வசித்துர்ஜ்ஜநாஃ।
ஆஶாஸேக்ருதயேஶுபம்வரக்ருதேருத்பந்நமாத்வீஜரீ।
மக்நாஸ்தத்வதியஃக்ருதேஸ்ஸுஸத்ருஶீநாந்யாக்ருதௌஸார்த்ததா॥.

రచితంరచనాత్రితయం।
సమ్మతిరూపేణతస్యరచనాయాః।
వరవరమునిసత్కరుణా।
పాత్రశ్రీబాలధన్విఘనగురుణా॥ ౯॥

ரசிதம்ரசநாத்ரிதயம்।
ஸம்மதிரூபேண தஸ்யரசநாயாஃ।
வரவரமுநிஸத்கருணா।
பாதரஶ்ரீபாலதந்விகநகுருணா॥

దద్యాత్కుశలంభూయోయం।
తాపార్థస్వగీతదస్సతతం।

ఆయ్పాడిధామ్నివసతే।
తస్మైగోపాలకృష్ణాయ॥ ౧౦॥

ததயாதகுலமபூயோயம।
தாபாாததஸவகீததஸ்ஸததம।
ஆயபபாடிதாமநிவஸதே।
தஸமைகோபாலகருஷணாய॥

శ్రీరఙ్గనాథకరుణా।
సంగతలోకద్వయాధిపత్యోయం।
వాచంవిభూతిమిశ్రో।
దేయాత్ శ్రీభాష్యకృత్తస్మై॥ ౧౧॥

ஸ்ரீரஙகநாதகருணா।
ஸஙகதலோகதவயாதிபதயோயம।
வாசமவிபூதிமிஸரோ।
தேயாதஸ்ரீபாஷயகருததஸமை॥

சோளசிமஹபுரமகோயில

கந்தாடை - தொடடையாசார்யரெனகிற அப்பன்

சிஙகராசார்யர் ஸவாமி

గోపాలకృష్ణసుకవిః।
స్వాచార్యముఖకమలనిర్గతంమధురం।
ఆచార్యహృదయసారం।
సంగృహ్యగ్రంథరూపతోలిఖత్॥ ౧౨॥

கோபாலகருஷணஸுகவிஃ।
ஸவாசாாயமுககமலநிாகதம்மதுரம।
ஆசாாயஹருதயஸாரம।
ஸஙகருஹயகரநதருபதோலிகத॥

திருமணிகோயில கநதாடைஅப்பன்

ஸ்ரீநிவாஸாசாாயர்ஸ்வாமி

అచార్యస్వాంతశాస్త్రం నిజగురుకృపయాసార్థమన్వైర్దురాపం।
లబ్ధ్వాతత్పాదపద్మప్రవణధిషణ యాసారభూతార్థజాతం।
మంతారంమానయంతు ప్రథితగుణకలిధ్వంససపత్కుమారం।
శిష్టానిత్యంవరిష్టప్రవణగుణగుణం గుప్తగోపాలకృష్ణం॥ ౧౩॥

ஆசார்யஸ்வாந்தஶாஸ்ரம்நிஜகுருக்ருபயாஸாத்தமந்யைர்துராபம்।
லப்த்வாதத்பாதபத்மப்ரவணதிஷணயாஸாரபூதார்த்தஜாதம்।
மந்தாரம்மாநயந்துப்ரதிதகுணகலிதவம்ஸஸம்பத்குமாரம்।
ஶிஷ்டாநித்யம்வரிஷ்டப்ரவணகுணகணம்குப்தகோபாலக்ருஷ்ணம்॥

திருமணிகோயில் கந்தாடை அப்பன்கொமாரர் வெங்கடாசார்யர் ஸ்வாமி.

వాధూలాన్వయవార్ధికౌస్తుభమణే శ్రీరఙ్గసూరేః పదే।
సంలబ్ధాఖిలతత్త్వబోధమనఘం గోపాలకృష్ణాభిదం।
శ్రీమద్భూతపురీనివాసరసికో రామానుజార్యో మునిః।
పాయాద్రంగధురీణ పాదయుగళేన్యస్తాత్మభారం సదా॥ ౧౪॥

வாதூலாந்வயவாரிதிகௌஸ்துபமணேஶ்ரீரங்கஸூரே:பதே।
ஸம்லப்தாகிலதத்வபோதமநகம்கோபாலக்ருஷ்ணாபிதம்।
ஶ்ரீமத்பூதபுரீநிவாஸரஸிகோ ராமாநுஜார்யோமுநி:।
பாயாத்ரங்கதுரீணபாதயுகளேந்யஸ்தாத்மபாரம்ஸதா॥

ஶ்ரீபெரும்பூதூர் ஆசூரி எம்பெருமானார் ஸ்வாமி.

శ్రీరంగరాజపదపంకజమత్తభృంగః।
శ్రీదేవరాజగురువర్యకృపాత్తబోధః।
గోపాలకృష్ణ ఇతి దాసవరస్సుమేధాః।
చక్రేహితంకమపిసారతరంప్రబంధం॥ ౧౫॥

ஶ்ரீரங்கராஜபதபங்கஜமத்தப்ருங்க:।
ஶ்ரீதேவராஜகுருவர்யக்ருபாத்தபோத:।
கோபாலக்ருஷ்ண இதிதாஸவரஸ்ஸுமேதா:।
சக்ரேஹிதம்கமபிஸாரதரம்ப்ரபந்தம்॥

திருவெவ்வளூர் ஆசூரி அப்பளாசார்யர் ஸ்வாமி.

శ్రీమద్వాధూలవంశాంబుధి హిమకిరణాద్దేవరాజార్యవర్యాత్।
శ్రీమద్గోపాలకృష్ణాహ్వయవిబుధవరైః ప్రాప్తమర్థం ప్రబంధం।
ఆచార్యస్వాంతసారాభిధమిహ విబుధైస్సమ్యగాలోక్యమోదం।
ప్రాప్తం పర్వణ్యఖర్వే హిమకరకిరణం యాతి వృద్ధిం యదాబ్ధిః॥ ౧౬॥

ஶ்ரீமத்வாதூலவம்ஶாம்புதிஹிமகிரணாத்தேவராஜார்யவர்யாத்।
ஶ்ரீமத்கோபாலக்ருஷ்ணாஹ்வயவிபுதவரை:ப்ராப்தமாத்தம்ப்ரபந்தம்।
ஆசார்யஸ்வாந்தஸாராபிதமிஹவிபுதைஸ்ஸம்யகாலோக்யமோதம்।
ப்ராப்தம்பர்வண்யகர்வேஹிமகரகிரணம்யாதிவ்ருத்திம்யதாப்தி:॥

அத்தங்கி திருமலகுமார தாதாசார்யர்ஸ்வாமி.

వాధూలరఙ్గార్యపదామ్బుజాత।
బృఙ్గాయమానేన నిగుమ్భితైషా।
గోపాలకృష్ణేన సదార్యభావ।
సారాహ్వయాస్మన్ముదమాతనోతి॥ ౧౭॥

శ్రీశైలవంశాదుదితాః కుమార తాతార్యవిద్వత్కవయో ముదైవం।
వ్యలీలిఖన్ ద్రామిడవాఙ్మరన్దనిష్యన్ద సంపాదితవీర్యభూమ్నా॥ ౧౮॥

வாதூலரங்காரியபதாம்புஜாத।
ப்ருங்காயமானேந நிகும்பிதைஷா।
கோபாலக்ருஷ்ணேந ஸதாரியபாவ।
ஸாராஹ்வயாஸ்மன்முதமாதநோதி॥

ஸ்ரீசைலவம்சாதுதிதா: குமார தாதாரியவித்வத்கவயோ முதைவம்।
வ்யலீலிகந் த்ராமிடவாங்மரந்தநிஷ்யந்தஸம்பாதிதவீர்யபூம்நா॥

சித்தாத்திக்காடு
வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

వాధూలాన్వయవార్ధిశీతకిరణ శ్రీరఙ్గసద్దేశిక।
శ్రీమత్పాదసరోజసత్తమధుపో గోపాలవంశోదయః।
స్వాచార్యశ్రుతవేదమౌలివివృతిర్గోపాలకృష్ణో విభుః।
సంక్షేపాత్ శఠవైరిభావవివృతిం చక్రే ప్రబన్ధాత్మనా॥ ౧౯॥

வாதூலாந்வயவார்த்திசீதகிரண ஸ்ரீரங்கஸத்தேசிக।
ஸ்ரீமத்பாதஸரோஜஸத்தமதுபோ கோபாலவம்சோதய:।
ஸ்வாசார்யச்ருதவேதமௌலிவிவ்ருதிர்கோபாலக்ருஷ்ணோ விபு:।
ஸங்க்ஷேபாத்சடவைரிபாவவிவ்ருதிம் சக்ரே ப்ரபந்தாத்மநா॥

வைத்தமாநிதி முடும்பை ஸ்ரீநிவாஸ அப்பங்கார்ஸ்வாமி.

శ్రీశ్యాలిశ్రీనగరీశలబ్ధకలిజిత్సమ్పత్కుమారాహ్వయః।
శ్రీమత్సౌమ్యవరార్యవీక్షణవశాత్ స్వప్నాచ్చలద్ధ్యానకాన్।
శ్రీమద్దాశరథీయవంశ విలసచ్ఛ్రీరఙ్గరాజాత్మజః।
శ్రీమాన్ గోపకులాగ్రణీర్విజయతాద్గోపాలకృష్ణస్సుధీః॥ ౨౦॥

ஸ்ரீச்யாலிஸ்ரீநகரீசலப்தகலிஜித்ஸம்பத்குமாராஹ்வய:।
ஸ்ரீமத்ஸௌம்யவராரியவீக்ஷணவசாத்ஸ்வப்நாச்சதுதலேசகாந்।
ஸ்ரீமத்தாசரதீயவம்சவிலஸச்ஸ்ரீரங்கராஜாத்மஜ:।
ஸ்ரீமாந்கோபகுலாக்ரணீர்விஜயதாத்கோபாலக்ருஷ்ணஸ்ஸுதீ:॥

తేనస్వాచార్యవర్యాణాం।
ముఖాంభోజవినిస్సృతః।
ఆచార్యస్వాంతతాత్పర్య।
సంగ్రహోలిఖితోధునా॥ ௨௦॥

தேநஸ்வாசார்யவர்யாணாம்।
முகாம்போஜவிநிஸ்ருதஃ।
ஆசார்யஸ்வாந்ததாத்பர்ய।
ஸங்க்ரஹோலிகிதோதுநா॥

சித்திரகூடம்
சுதர்சனம் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி.

శ్రీరంగరాజచరణాం।
బుజమధుకరగోపాలకృష్ణాఖ్యః।
ఆచార్యహృదయజలధేః।
సారంసఙ్గృహ్యముద్రితంవిదధే॥ ௨௧॥

ஸ்ரீரங்கராஜசரணாம்
புஜமதுகரகோபாலக்ருஷ்ணாக்யஃ
ஆசார்யஹ்ருதயஜலதேஃ
ஸாரம்ஸங்க்ருஹ்யமுத்ரிதம்விததே॥

குன்றபாக்கம் கொமாண்டூர் இளயவல்லி ஸ்ரீநிவாஸ
அய்யங்கார் ஸ்வாமி.

వాధూలచంద్రశ్రీరంగ।
దేశికానాంకృపాజుషా।
గోపాలకృష్ణగుప్తేన।
యాదవాభిజనేందునా॥ ௨௩॥

வாதூலசந்த்ரஸ்ரீரங்க
தேசிகாநாம்க்ருபாஜுஷா
கோபாலக்ருஷ்ணகுப்தேந
யாதவாபிஜநேந்துநா॥

ఆచార్యహృదయస్యార్థం।
జ్ఞాత్వాస్వాచార్యసన్నిధౌ।
లిఖితస్తస్యతాత్పర్య।
సంగ్రహోగ్రంథరూపతః॥ ௨௪

ஆசார்யஹ்ருதயஸ்யார்த்தம்।
ஜ்ஞாத்வா ஸ்வாசார்யஸந்நிதௌ।
லிகிதஸ்தஸ்ய தாதயாய।
ஸங்க்ரஹோக்ரந்தரூபத:॥

சிந்தாத்ரிபேட்டை

மலையாங்குளம் கந்தாடை ஸ்ரீராமாயணம் பாஷ்யாபிஷேகம் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி

శ్రీరంగరాజపదపంకజచంచరీకో।
గోపాలకృష్ణకవిరాట్సకలాంమనీషాం।
మోదంవ్యవర్ధయితుమార్యహృదాహ్వయస్య।
సారార్థసంగ్రహమిమివ్యలిఖత్ప్రబంధం॥ ౧౫॥

ஸ்ரீரங்கராஜபதபங்கஜசஞ்சரீகோ।
கோபாலக்ருஷ்ணகவிராட்ஸகலாமமநீஷாம்।
மோதம்வ்யவர்த்தயிதுமார்யஹ்ருதாஹ்வயஸ்ய।
ஸாரார்த்தஸங்க்ரஹமிமிவ்யலிகத்ப்ரபந்தம்॥

చింతాద్రిపురవాస్తవ్య।
శ్రీనివాసబుధేందునా।
రచితాసంమ్మతిరూపా।
వాగ్రామపాదభక్తేన॥ ౧౬॥

சிந்தாத்ரிபுரவாஸ்தவ்ய।
ஸ்ரீநிவாஸபுதேந்துநா।
ரசிதாஸம்மதிரூபா।
வாக்ராமபாதபக்தேந॥

கூடலூர்

வங்கிபுரம் க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி

శ్రీమద్వాధూలవంశామృతజలధినిశానాధరఙ్గార్యవర్య।
శ్రీపాదాంభోజభృఙ్గాయిత హృదయవతాగోపవంశోద్భవేన।
క్లృప్తాగోపాలకృష్ణాభిధ శుభమతినాపణ్డితానాంముదేస్యా।
దాచార్యస్వాన్తసారాహ్వయకృతిరని శంసంప్రదాయానురూపా॥ ౧౭॥

ஸ்ரீமத்வாதூலவம்சாம்ருதஜலதிநிசாநாதரங்கார்யவர்ய।
ஸ்ரீபாதாம்போஜப்ருங்காயிதஹ்ருதயவதாகோபவம்சோத்பவேந।
க்லுப்தாகோபாலக்ருஷ்ணாபிதசுபமதிநாபண்டிதாநாம்முதேஸ்யா।
தாசார்யஸ்வாந்தஸாராஹ்வயக்ருதிரநிசம்ஸம்ப்ரதாயாநுரூபா॥

భారద్వాజకులాంభోధి విధునా కృష్ణసూరిణా।
వఙ్గీపురకులాఖ్యేన సమ్యగామోదితా హి సా॥ ௨௮ ||

பாரத்வாஜகுலாம்போதிவிதுநா க்ருஷ்ணஸூரிணா|
வங்கீபுரகுலாக்யேநஸம்யகாமோதிதாஹிஸா||

பரித்தியூர் க்ருஷ்ணஶாஸ்த்ரியாரவர்கள்.

శ్రీమద్గోపాలకృష్ణప్రభువరకవిరాట్ దుగ్ధవారాశిగర్భా।
దుద్భూతః పూతపేయో భవసరణిగతి వ్యగ్రవిశ్రాన్తిదాయీ।
శ్రీరఙ్గాచార్యవర్యప్రపదశరణతాలబ్ధవిజ్ఞానపూర్ణాత్।
గ్రన్థోయం హన్త చారుర్జయతి గురుమనస్సారపీయూషపూరః॥ ௨௯ ||

ஸ்ரீமத்கோபாலக்ருஷ்ணப்ரபுவரகவிராட் துக்தவாராஶிகர்பா|
துத்பூதஃபூதபேயோபவஸரணிகதிவ்யக்ரவிஶ்ராந்திதாயீ|
ஸ்ரீரங்காசார்யவர்யப்ரபதஶரணதாலப்தவிஜ்ஞாநபூர்ணாத்|
க்ரந்தோயம்ஹந்தசாருர்ஜயதிகுருமநஸ்ஸாரபீயூஷபூரஃ||

గురుహృదయసారమేతం।
కలితం గోపాలకృష్ణవిబుధేన।
సమ్మనుతే సరసతయా।
పరిత్తియూర్కృష్ణశాస్త్రినామతరః॥ 30 ||

குருஹ்ருதயஸாரமேதம்|
கலிதம்கோபாலக்ருஷ்ணவிபுதேந|
ஸம்மநுதேஸரஸதயா|
பரித்தியூக்ருஷ்ணஶாஸ்த்ரிநாமதரஃ||

ஸ்ரீ

பெருமாள்கோயில்

அழகிய மணவாளஜீயர் ஸ்வாமி.

கட்டளைக்கலித்துறை.

கோதற்றஞானக்குருகூரின்மாறன்றமிழ்மறையை
ஓதுற்றவாரியருள்ளந்தெளிந்துவிரித்துரைத்தான
போதுற்றகோயிற்கந்தாடையண்ணன்பதம்போற்றவுறுஞ்
சீருற்றவன்பனெங்கோபாலகிட்டணமெய்த்தோகவியே. (௩௧)

நேரிசைவெண்பா.

ஆசாரியவிதயமாம்பொருளின்சாரத்தை
ஆசோவநீயுரையென்றண்ணர்சொலக்—கூசாமல்
ஆபாலரும்தேறவாய்ந்துரைத்தான்வாழியவே
கோபாலகிர்ட்ணனெனுங்கோ. (௩௨)

அரங்கநருள்கோயிலண்ணனழைத்தே
இரங்கிக்குருநெஞ்சியம்ப—நெருங்கியே
யுள்ளத்துணர்ந்துரைத்தான்கோபாலகிர்ட்ண னென்று
பிள்ளைப்பெருவாழ்வான்பெற்று. (௩௩)

ஆருமறிந்துய்யவாசாரியவிதய
சாரந்தெரிந்துரைத்தான்சங்க்ரகமாய்ப்—பாரின்கண்
வாதூலதேசிகனுல்வாழ்வுற்றுவண்டமிழ்தேர
கோபாலகிர்ட்ணக்கொழுந்து. (௩௪)

திருவல்லிக்கேணி அங்கிளோவர்னக்யுலர் பாடசாலை தமிழ்ப் பண்டிதர் காரப்பங்காடு கோபாலாசாரியர்ஸ்வாமி.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சந்தாரும்பூம்பொழில்சூழ்ந்தழகாயமறைநான்குந்தகைசால்கோயிற்
கந்தாடையண்ணனெழிற்சீரங்கவாரியன்றாட்கமலந்தன்னில்
நந்தாததொண்டமைந்தோன்ஞானபத்திவைராக்யநல்கப்பெற்றோன்
அந்தாமத்தருளமைந்தவடியார்மாட்டன்பகத்தினகலாந்தூயன்.
இன்னகுணக்கோபாலகிருஷ்ணனெனுமியற்பெயராலிலங்குங்கீர்த்தி
மன்னவன்றானன்னகுருமுன்னுணர்ந்ததமிழ்மறையும்வண்மையேய்ந்த
தன்னிகரிலாசார்யவிதயமுமாமிவற்றின்மிகுசாரந்தன்னைப்
பன்னயமுந்தோன்றவச்சிற்றந்தவுதவிக்கியற்றப்பயன்காணேனே. (௩௫)

சென்னைகவரன்மெண்டு சகலசாஸ்த்ரசாலைத் தமிழ்ப்பண்டிதர் புன்னைமாடபூசி ஸ்ரீநிவாசாசார்யர்ஸ்வாமி.

நல்லாரரியவிதயப்பயவிரிவின்மையைநாமிங்
கெல்லாருமுவந்தோதிடவெளிதின்னிசைதந்தான்
பல்லார்புகழ்கோபாலகிருஷ்ணப்பிள்ளைமதியோன
அல்லாரரியலர்தாளிணையகலாமனநிலையோன். (௩௬)

தஞ்சை கலெக்டராபீஸ் கஜான்ஜீ திருவான்மியூர்
விஜயராகவப்பிள்ளை என்கிற
விஜயராகவ ராமாநுஜதாசரவர்கள்.

விருத்தம்.

தாரணியிலாசார்யவிதயசார
சங்கிரகமென்னும்புத்தருக்குநெய்யைத
தாரணியோாமனமுருகத்தநதானவீரா
சாமியெனுமொருநந்தகோபருக்குந்
தாரணியில்வேதவல்லித்தாயாரொன்னுந்
தாய்சோதைக்குஞ்சேயாயாய்ப்பாடிக்கண்
தாரணியிற்சேடாம்சபூதனுகிச்
சாாநதுதித்தகோபாலகிருஷ்ணமாலே. (௩௭)

தஞ்சாவூர் வீரராகவப்பிள்ளை ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர்
சதாவதானம் - சுப்பிரமணிய ஐயரவர்கள்.
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பொன்பூத்தவாய்ப்பாடிவசித்துப்பொய்யெனுஞ்சகட்டைப்
பொருதுதைத்து
மன்பூத்தசீவரொனுமபசுக்கள்வினையெனுமழையால்
வருந்தாவண்ண
மின்பூத்தஞானமெனுங்குன்றுற்றூாத்தாசார்ய
விதயமென்னு
நன்பூத்தநவநீதநல்கினன்கோபாலகிருஷண
நாமத்தானே. (௩௮)

நேரிசையாசிரியப்பா.

திருவளாகமலச் செழுந்தடமுடுத்து
மருவளாபொழில்புடை மருவெவ்வுளூரிற்
கோபுரத்திருப்பணி குயிறறிமேலுயா
கோபுரத்துறைசீ ராமனுஜகுலத்திற
கருவானபொழிவளக் கழனிபொன்விளக்கும்
திருவான்மியூாநனி திகழ்தரவுதித்தோன்
வீராசாமியாம் விதததகறகும்பவம்
வாராவேத வல்லித்தாயாாக்கு
முந்தரந்தவச்சேய் மொழிதருங்கோயிற
கந்தாடையண்ணன் கனவினம்பெருமா
டுன்னியேசேடனைத் தொட்டுக்காட்டி
இன்னவனணையா மிவனம்சபூத

னவனசமபநத மடைகநீயெனறுங
குவநதுரைததருளிய வுண்மைககிசைய
தனபாறகனவிற சாரநதுவரமுனி
யனபாறகநதாடை யணணனடிதொழுகென
றஙகையினைபபிடித தழைததுககொடுபோய
மஙகுறவழதிரு மாளிகைகாட்டப
பினனரஙகனமே பெருமகிழவெயதி
நனனாநனனரொன றநநகரடைநது
கணணனறிருவருள காபபெனககொளளவ்
வண்ணனறிருவடி யாசரியிததவன
சோதிருவாலி திருநகரொனனு
மூாதனிறபைஙகுனி யுததிரநாளின
மஙகளாசாசனம வழுததுஙகாலை
நஙகளவாழவெனுந்திரு நாராயணபுரத
திருநதுவநதவோா சீவைணவேநதிர
ரிருநதுகோடடியி லெழுந்தெதிராச
சமபதகுமார னெனவபிதான
மிமபாசசெல்வப் பிளளைககிடடென
வமபுண்டாாததிரு மஙகைமனனன்
சமபதகுமார னெனனததரணியி
னுமக்குநாம் றுவலபபெருமா
ளெமககுநியமன மிடடனரொன்றே
மாசறுமுளள மகிழந்துமஙகளா
சாசனமபணணச சாரநதவப்பெயரா
னறறிருவாலி திருநகாநாருசின
முறறியகாலை முநதொருநாளிற
பாரியலிநதனூாப பரகாலராகவா
சாரியசீயா தாநதிருநகரி
யணணலோவெனன வணைததாலிஙகனம்
பணணபபெறற கோபாலகிருடடின
சததுவசீலனு சாரியவிதயமு
மெயததிருவாயமொழி விடயசூசிகையு
மைதீகஙகளு மாதிருவாகமுஞ
செயதீாமானந தோவசனங்களுந
தேசாாபிரமாணத திரட்டுஞ்சோததே
யாசாரியவிதய சாரசஙகிரகமென
றொருநூறிரடடி யுதவின
னுருவாருயிாக ளுயததறபொருட்டே. (௫௧)

பெருமாள்கோயில் ஈச்சம்பாடி. க்ருஷ்ணமாசார்யர்ஸ்வாமி.

వాధూలాహ్వయవంశవారిధి విధోః శ్రీరఙ్గసూరేఃకృపా
సంజాతాఖిల మన్త్రరత్ననిచయో గోపాల కృష్ణాహ్వయః।
పూర్వాచార్యకృతార్థ తత్త్వనిచయవ్యాఖ్యా మహోద్రావిడీం
చక్రే పాపమనోవికార హారిణీంగుర్వర్థ సారాభిధాం॥ ౪౦॥

வாதூலாஹ்வயவம்ஶவாரிதிவிதோஶ்ரீரங்கஸூரோ:க்ருபா
ஸம்ஜாதாகிலமந்த்ரரத்நநிசயோகோபாலக்ருஷ்ணாஹ்வய:।
பூர்வாசார்யக்ருதார்த்ததத்வநிசயவ்யாக்யாமஹோத்ராவிடீம்
சக்ரோபாபமனோவிகாரஹாரிணீம்குர்வார்த்தஸாராபிதாம்।।

மோட்டுபெல்லி அத்தங்கி தாதாசார்யர்ஸ்வாமி.

గోపాలకృష్ణేన నికుంభితేయ
మాభీరవంశ ప్రభవేనహృద్యా
ఆచార్యచేతో వివృతేస్తుటీకా
చేతాంసికర్షత్యధు నాబుధానాం॥ ౪౧॥

கோபாலக்ருஷ்ணேநநிகும்பிதேய
மாபீரவம்ஶப்ரபவேநஹ்ருத்யா।
ஆசாயசேதோவிவ்ருதேஸ்துடீகா
சேதாம்ஸிகர்ஷத்யதுநாபுதாநாம்।।

శ్రీశైలవంశప్రభవైః పురాణవా
ణీశిరస్తుంఘ విచారదక్షైః।
శ్రీతాతయాచార్య బుధావతంసై
ర్వ్యలిఖ్యతైవం గుణకృష్ణచిత్తైః॥ ౪౨॥

ஸ்ரீஶைலவம்ஶப்ரபவை:புராணவா
ணீஶிரஸ்துங்கவிசாரதக்ஷை:।
ஸ்ரீதாதயாசாயபுதாவதம்ஸை
ர்வ்யலிக்யதைவம்குணக்ருஷ்ணசித்தை:।।

பத்ராசலம் திருமல ராகவாசார்யுலவாரு.

శ్రీలలనామణీహృదయ శీతమయూఖుని రంగరాడ్విభుం।
బాలగభక్తిగొల్చు భువి పూతచరిత్రులు ఆర్యవర్యవా।
ధూలకులాబ్ధిరంగ గురుతుల్యపదాంబుజ భృంగుడైనగో।
పాలకకృష్ణనామకుడు భవ్యుడు పామరవర్గమెల్లమే।

త్రైలని మెచ్చునట్లు గను మేకొని యార్య హృదాఖ్యగ్రంథసా।
రాళిని విస్తరించె నదియంతయు పండిత మోదనీయమై॥ 43॥

ஸ்ரீலலனாமணீஹ்ருதயஸீதமயூகுகிரங்கராட்விபும்।
போலகபகதிகொல்சுபுவிபூதசரிதருலு ஆர்யவர்யவர।
தூலகுலாபதிரங்ககுருதுல்யபதாம்புஜபங்குடைந கோ।
பாலக்ருஷ்ணநாமகுடுபவ்யுடுபாமரவாகமெல்லமே।
லமேலகிமெச்சுநட்லுகநுமேகொகியார்யஹ்ருதாக்யக்ரந்தஸா।
ராளினிவிஸ்தரிஞ்செநதியந்தயுபண்டிதமோதநீயமை.

இந்தக்கிரந்தவிஷயமாக சிறுபுலியூர் கந்தாடைதிருவாழி அண்ணன் ஸ்வாமி அருளிச்செய்த திருவுள்ளக்கருத்து.

"ம-ா-ா-ஸ்ரீ திருமங்கை மன்னன் ஸம்பந்த குமாரனென்னும் கோபால க்ருஷ்ணபிள்ளையவர்கள் ஆசார்ய ஹ்ருதயஸார ஸங்க்ரஹமென்கிற ப்ரபந்தத்தை யியற்றி அதற்கு ஆமோதபத்யம் வேண்டுமென்று அபேக்ஷிக்கிறார். ஆசார்ய ஹ்ருதய வ்யாக்யானத்தில் ஸ்ரீஸ்வாமி மணவாளமாமுனிகள், இவரையும் (ஆழ்வாரையும்) ருஷி, முநி, கவியென்றும் என்கிறவிடத்தில், இவர்கள் (ருஷிகள்) விஷயத்திலும், கவிசப்தப்ர யோகமுண்டாகிலவந்த ஸ்தலங்களிலே கண்டுகொள்வது என்றும், இனம், யாப்பு, பா, துறை என்கிற விடத்தில், துறையென்கிற விதுவும் இனத்தின் வகையிலொன்றுகையாலே புநருக்தமாம், ஆத்தாந்தர முண்டாகில் கண்டுகொள்வது, என்றும், பலவிடங்களிலு மருளிச்செய்த ஸ்ரீஸூக்திகளை அநுஸந்தித்து ஸாதாரண கவிகளுக்கு மாத்துக்கவியுண்டு, இந்த திவ்யப்ரபந்த விசேஷார்த்த விவரணம் ஸ்வயமேவ விளங்குகிறபடியால் ஆமோதபத்ய மபேக்ஷிதமோவென்று சிந்தையால், விளம்பம். "புஷ்பமாலா நுஷங்கேண ஸூத்ரம் சிரஸிதார்யதே" என்னுமாப்போலே இப்போது ப்ரவர்த்திப்பித்த ஆசார்ய ஹ்ருதயஸார ஸங்க்ரஹப்ரபந்தமும் ஆதரணீயமாகிறது. இந்த ப்ரபந்தத்தை பரிபூர்ணமாக்கி சீக்ரத்தில் சிறுபுலியூருக்கு அனுப்பிவைக்கவும்."

☞ மேல்கண்ட திருவுள்ளக்கருத்து க்ரந்தத்திலடங்கிய அர்த்த விசேஷங்களுக்குத் தகுதியாக விருந்ததேயாகிலும் இவ் வ்யாஜ புயிஷ்டமான ப்ரபஞ்சத்தில் ப்ராம்ஹண ரல்லாத ஓர் ஸ்ரீ வைஷ்ணவன் இத்யாதி விசேஷார்த்தங்களை க்ரந்தரூபமாய் வெளியிட்டால் அல்பஜ்ஞர்கள் அவனை தூஷித்து அந்த க்ரந்தத்தையும் இகழ்வது இயல்பாக விருப்பதால், அவர்கள் அதினால் நசிப்பதைத் தடுக்கும் பொருட்டு ஆமோதபத்யம் அபேக்ஷித்ததாக விருக்கிறது.

திரு. கோ.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நமः

அவதாரிகை.

ஆசார்யஹ்ருதயமென்கிற திவ்ய ப்ரபந்தமானது, பரமகாருணிகரும் ப்ரபந்ந ஜநாக்ரேஸரருமான ஸ்ரீஅழகிய மணவாளப்பெருமாள் நாயனாரால் அருளிச்செய்யப்பட்டது.

இதில் (“𑌆𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌃 𑌕𑍁𑌲𑌪𑌤𑍇𑌃”) “ஆத்யஸ்ய நः குலபதேः” என்கிறபடியே வைதிகஸாந்தானிகர்களுக்கு ப்ரதமாசார்யரான ஆழ்வார் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களில் அவருடைய திருவுள்ளக் கருத்துக்களை அருளிச்செய்கையாலே, இப்ப்ரபந்தத்துக்கு ஆசார்யஹ்ருதயமென்று நிரூபகமாயிற்று.

பகவான் நிர்ஹேதுக கடாக்ஷ விசேஷ லப்த திவ்யக்யான பக்திகரான ஆழ்வார், தத்ஸ்வரூபகுண விபூதிகளை விசத, விசததர, விசததமமாக அநுபவித்து, அவ்வநுபவ பரிவாஹரூபேண பேசுகிற பாசுரமானது, சோக வேக ஜநிதமான (“𑌮𑌾 𑌨𑌿𑌷𑌾𑌦𑍇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿”) “மாநிஷாதேத்யாதி” ச்லோகம் ப்ரஹ்மாவின்ப்ரஸாதத்தாலே லக்ஷணோபேதமானாற்போல, பகவத் ப்ரஸாதமடியாக ஸர்வலக்ஷணோபேதமான ப்ரபந்தமாய்த் தலைக்கட்டிற்று.

இது தானும் த்ராவிடவேத தயாவிஸ்தீர்ணமாய், அநேகார்த்த ப்ரதிபாதகமாய் இருக்கையாலே, இதில் தாத்பர்யார்த்தம் ஸர்வர்க்கும் ப்ரதிபத்தி விஷயமாகை அரிதென்று திருவுள்ளம்பற்றி, இதில் அர்த்த விசேஷங்களையும், இவற்றில் ஆழ்வார் திருவுள்ளக் கருத்தின் ப்ரகாரத்தையும், இவ்வாசார்ய ருசிபரிக்ருஹீதமான அர்த்தமே யெல்லார்க்கும் தஞ்சமென்னு மத்தையும், அருளிச்செயல் சந்தைகளைச்சேர்த்து ௨௩௪-சூர்ணைகளால், நான்கு ப்ரகரணங்களாகச் செய்தருளினார்.

இப்ப்ரபந்தத்தில், ஸர்வேஶ்வரன் தன்க்ருபையாலே அஜ்ஞரான சேதனர் தத்வஜ்ஞராய், ஸாராஸார விவேகம் பண்ணுகைக்கு, சாஸ்த்ர ப்ரதானம் பண்ணினபடியையும்.

அந்த ஶாஸ்த்ரமுகேன தத்வஜ்ஞான மளவில் உண்டான அருமையை நினைத்து, தாத்பர்யமான திருமந்திரத்தைத் தன்பரமக்ருபையாலே வெளியிட்டபடியையும்.

அந்தஶாஸ்த்ர தாத்பர்யங்களில் விஷய பேதாதிகளையும், தததுபய நிஷ்டரான அதிகாரிகளுடைய ப்ரகாரங்களையும்.

அந்த வ்யாஜத்தாலே ப்ரஸ்துதமான திருவாய் மொழியினுடைய வைபவத்தையும்.

அதுக்கு வக்தாக்களான வாழ்வார்களுடைய ப்ரபாவத்தையும்

அந்தப்ரபாவத்துக்கு மூலமான பகவன் நிர்ஹேதுக கடாக்ஷத்தையும்

அதடியாக இவர்க்குண்டான ஜ்ஞானபக்திகளையும், அந்த ஜ்ஞான பக்திதசைகளில் இவர்பேசும் பேச்சுக்களையும்.

அந்த பக்திதசையில் பகவத் ப்ரேமயுக்த ரெல்லாரோடு இவர்க்குண்டான ஸாம்யத்தையும்.

அந்த பக்திதசையில் பேசும் அன்யாப தேஶங்களுக்கு ஸ்வாபதேஶங்களையும்.

அந்த பக்திவிஷயமான திவ்யதேசங்களில் நிற்கிற ஈஶ்வரனுடைய குணவிஶேஷங்களையும்.

அந்த குண விஶிஷ்டவஸ்துவிலுண்டான அநுபவ ஜநித ப்ரீதி ப்ரேரிதராய்க்கொண்டு இப்ப்ரபந்தங்கள் அவதரித்தபடியையும்.

ப்ரதிபாத்யார்த்த ஸாம்யத்தாலே, ஸ்ரீகீதையோடு திருவாய்மொழிக்குண்டான ஸாம்யத்தையும், தத் வ்யாவ்ருத்தியையும், இதில் இவர் உபதேசிக்கிற விஷய பேதத்தையும், அவ்வோவிஷயங்கள்தோறும் உபதேசிக்கிற அர்த்தவிசேஷங்களையும்.

அந்த வ்யாஜத்தாலே உபதேச விஷயமான சிஷ்ய லக்ஷணத்தையும்,

அந்த லக்ஷண மில்லாதார்க்கு இவர் உபதேசிக்கைக்கு ஹேதுக்களையும்.

க்யாதி லாபாதி நிரபேக்ஷராய் பகவத் கைங்கர்ய புத்யா உபதேசிகையாலே உபதேசம் ஸபலமானபடியையும்.

உபதேசிக்கிற இப்ப்ரபந்தங்கள் தான் ரஹஸ்ய த்ரயார்த்தமென்பதையும்.

அந்த ரஹஸ்யத்ரயத்திலும் ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்த பஞ்சகமு மிப் ப்ரபந்தங்களிலே ஸங்க்ரஹ, விவரண ரூபேண சொல்லப்படுகிற ப்ரகாரத்தையும்.

ப்ரபந் தாரம்பங்களில் அபேக்ஷிதமான மங்களா சரணங்கள் இப்ப்ரபந்தாதியில் உண்டான படியையும்.

ஸாது பரித்ராணாதிகளாலே ஜகத்ரக்ஷணார்த்தமாக ஸர்வேஶ்வரன் அவதார மானாப்போலே, இப்ப்ரபந்தம் அவதாரமென்னு மத்தையும், இதில பத்துப்பத்தாலும் ப்ரதிபாதிக்கப்பட்ட ஈஶ்வரனுடைய பரத்வாதி குணங்களையும்.

அக்குண விசிஷ்டனான அவன், இப்பத்துப் பத்தாலும் இவ்வாழ்வாருக்கு தத்வஜ்ஞானம் முதலாக ப்ராப்தி பாயந்தமாக, பிறப்பித்த தஶாவிஶேஷங்களையும்.

பத்துத்தோறும் இவர் தாம், பிறர்க்கு உபதேஶித்த ப்ரகாரங்களையும்.

இவர்க்கு ப்ரதமத்தில் ஆர்த்தி பிறந்திருக்கச்செய்தே, ஈஶ்வரன் இவரை இந்த லீலாவிபூதியில் வைக்கைக்கு ப்ரதாநாப்ரதாந ஹேதுக்களையும்.

இவர்க்குப் பிறப்பித்த பரபக்தி, பரஜ்ஞானம், பரமபக்திகளாகிற, தஶா விஶேஷ ஸ்தலங்களையும்.

அக்யான நிவர்த்தக க்யானபூர்த்தி ப்ரத பகவத் ப்ரஸாதமே, அநிஷ்டமான ஸம்ஸாரத்தை அறுத்து, அபீஷ்டமான மோக்ஷலாபத்தை உண்டாக்கு மென்பதையும், விஶதமாக அருளிச்செய்து தலைக்கட்டினார்.

இப் ப்ரபந்தத்திற்கு ஸ்ரீமணவாள மஹாமுனிகள் விஸ்தரேண வ்யாக்யானஞ் செய்தருளினார். ஆனால் மூல க்ரந்தம் ப்ரமாணத் திரட்டாகவும், அதற்கு வ்யாக்யானம் பஹுவாயுமிருப்பதால், அஸ்மதாதிகளைப் போன்றவர்களுக்கு, இவைகளில் எளிதில் ருசிஜனிக்கை அரிதாயிருப்பதால், ஸர்வரும் ஸுலபமாய் க்ரந்த தாத்பர்யத்தை முந்துற யறிந்துகொண்டு, இவ்வாசார்ய ஹ்ருதயத்தை அதிகரித்து, ஆழ்வார் அபிமானத்திலே ஒதுங்கி, அவருடைய திவ்ய ஸூக்திகளில் ப்ரவணராய், அநந்யபரரா யிருந்து அநுஸந்தித்து வாழும்படி, இக் க்ரந்தம் செய்யப்பட்டது.

இந்த வாசார்ய ஹ்ருதயஸார ஸங்க்ரஹத்தை ஸம்ஶய விபர்யயமற அறிந்துகொள்ளும் பொருட்டு, திருவாய்மொழியின் ஆயிரம்பாட்டுக்களுக்கு விஷய ஸங்கதியையும், அப்பாட்டுகளின் வ்யாக்யானங்களில் வரும் ஐதிஹ்யங்களையும், பாட்டுகளில் ஸம்பந்தங்களுக்கு பூர்வாசார்யர்கள் ஸாதித்தருளிய நிர்வாஹங்களையும், பகவத் விஷயத்தில் கண்டிருக்கிற நிஷ்க்ருஷ்ட அர்த்த விஶேஷங்களையும், க்ரந்தத்தி லுதஹரித்த ப்ரமாணங்களுக்கும், ஸம்ஸ்க்ருத பதங்களுக்கும், த்ராவிட ரூபமான அர்த்தங்களையும், இக் க்ரந்தத்திற்கு அநுபந்தங்களாகச் சேர்க்கப்பட்டன.

ஆய்ப்பாடி.
இராயப்பேட்டை.
நந்தன ஹு
கார்த்திகைமீ உ0வ.

திரு. கோபாலக்ருஷ்ணன்.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஆசார்ய ஹ்ருதய சார சங்க்ரஹம்.

தனியன்கள்.

க. பக்தாம்ருதம்விஶ்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம்ஸ்ரீஶடகோபவாங்மயம்
ஸஹஸ்ரஶாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம்த்ராவிடவேதஸாகரம்.

உ. ஆசார்யஸ்வாந்தவக்தாரம்
அபிராமவராபிதம்
ஸ்ரீக்ருஷ்ணதநயம்வந்தே
ஜகத்குருவராநுஜம்.

ங. பணவாளரவணைப்பள்ளிபயில்பவற்கெவ்வுயிரும்
குணபோகமென்றுகுருகைக்கதிபனுரைத்ததுய்ய
உணர்பாவினுட்பொருளொன்றுமறியாவுலகறிய
மணவாளன்மாறன்மனமுரைத்தான்வண்முடும்பைவந்தே.

ச. மாதவத்தோன்மாறன்மனங்கூறுமணவாளன்
தோதவத்தித்தூய்மறையோரானபெற்றார்—நீதியினா
லாங்கவர்தாள்சேர்பெற்றாராயிமணவாளமுநி
பூங்கமலத்தாள்கள்நெஞ்சேபோற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆசார்ய

ஹ்ருதயசார சங்க்ரஹம்.

க-ம் ப்ரகரணம்.

(க) சர்வேச்வரன், அஞ்ஞரான சம்சாரிசேதநர் க்யாநப்ரகாசத்தை உடையராய், அந்த அக்யாநம் நீங்கித் தன்னைக்கண்டு ஸதஸத்விவேகம் பண்ணுகைக்கு உறுப்பாகச், சாஸ்த்ர ப்ரதாநம் பண்ணினான்.

(உ) விவேகத்துக்குபலம், தியாஜ்ஜியங்களை விடுகையும், உபாதேயங்களைப் பற்றுகையும்.

(ந) சர்வருக்கும் துக்கம் தியாஜ்ஜியம் ; சுகம் உபாதேயம்.

(ச) அனந்த க்லேசபாஜனமான சம்சாரம், துக்கம்; அனவரத பகவதநுபவத்தாலே ஆநந்த நிர்பரனாயிருக்கை, சுகம்.

(ரு) துக்கத்திற்கு (அ) அதாவது சம்சார பந்தத்திற்கு, ஹேது அர்த்தபஞ்சக க்யானமில்லாமை; அதுள்ளமை சுகத்திற்கு அதாவது (ஆ) மோக்ஷத்திற்கு, ஹேது.

(அ) సంసారసాగరం ఘోరమనంతక్లేశభాజనం॥

(ஆ) జ్ఞానాన్మోక్షః। అజ్ఞానాత్సంసారం॥

(௬) இவற்றுக்குக் காரணம், அந்யதா ஜ்ஞான விபரீத ஜ்ஞான ஹேது, ரஜஸ்ஸு தமஸ்ஸுக்கள்; யதா ஜ்ஞான ஹேது, சத்வம்.

(௭) ரஜஸ்தமஸ்ஸுக்களுக்கு நிதாநம், சம்சாரத்தில் ஜன்மம்; சத்வத்திற்கு நிதாநம், (அ) ஜாயமாந கடாக்ஷம்.

(௮) ஜன்மத்திற்கு மூலம், புண்ணியபாபங்கள்; ஜாயமாந கடாக்ஷத்திற்கு மூலம், அவனுடைய சுவாபாவிக க்ருபையாகிற சுக்ருதம்.

(௯) கர்மத்திற்கு பீஜம், (ஆ) "பொய்ந்நின்ற ஞாநம்" என்கிற அவித்யை: க்ருபைக்கு பீஜம், (இ) "அருள்புரிந்தசிந்தை" என்கிற (ஈ) சௌஹார்தம்.

(௰) அவித்யைக்கு அடி, அநாதியான அசித்சம்பந்தம்; சௌஹார்தத்துக்கு அடி, அயநசம்பந்தம், அதாவது நாராயணசம்பந்தம்.

(க) அசித்சம்பந்தத்தினால்
(உ) அவித்யை, அதினால்
(ங) புண்ணியபாபங்கள், அதினால்
(ச) ஜன்மம், அதினால்
(ரு) ரஜசுதமசு, அதினால்
(௬) அர்த்தபஞ்சகக் ஜ்ஞானஅபாவம், அதினால்
(௭) சம்சாரதுக்கமுண்டாம்.

(க) அயநசம்பந்தத்தினால்
(உ) சௌஹார்தம், அதினால்
(ங) க்ருபை, அதினால்
(ச) ஜாயமான கடாக்ஷம், அதினால்
(ரு) சத்வவிருத்தி, அதினால்

(அ) జాయమానం హి పురుషం యం పశ్యేన్మధుసూదనః।
సాత్త్వికస్సతు విజ్ఞేయస్స వై మోక్షార్థచింతకః॥
(ஆ) பொய்ந்நின்ற ஞானமும். (இயற்பா, திருவிருத்தம், பாட்டு-க.)
(இ) அருள்புரிந்தசிந்தை. (இயற்பா, உ-ம் திருவந்தாதி, பாட்டு-ருகூ.)
(ஈ) ఈశ్వరస్య చ సౌహార్దం॥

(௬) அர்த்த பஞ்சகக் க்யானம், (அ) அதினால்
(எ) மோக்ஷமுண்டாம்.

(கக) அசித் சம்பந்தம், தன்னோடுசேர்ந்த மாணிக்யத்தை ஒளியறத்தின்று உருவழித்துத் தன்னைப்போலே ஆக்கும் கிட்டம் போலே, சத்தாஹாநியைப் பண்ணும். அயநசம்பந்தம், பொருளல்லாத அவஸ்துவாச்சியமாய்க் கிடக்கிற சீர்மை பாராதே, வேட்டு வேளானைப்போலே, விபுத்துவ சாம்யம் பெறும்படி, தன்னிறமாக ஆநிவார்வாகிற சத்தையை, உண்டாக்கும்.

(கஉ) அசித் சம்பந்தம் அநித்யம், வந்தேறி; அயந சம்பந்தம் நித்தியம், அநாதி.

(அ) க. ప్రాప్యస్యబ్రహ్మణోరూపం ప్రాప్తుశ్చప్రత్యగాత్మనః।
ప్రాప్త్యుపాయంఫలంప్రాప్తే స్తథాప్రాప్తివిరోధిచ।
వదన్తిసకలావేదాస్సేతిహాసపురాణకాః।
మునయశ్చమహాత్మానో వేదవేదార్థవేదినః॥

உ. அர்த்தபஞ்சகமாவது.

(க) ஸ்வஸ்வரூபம், அதாவது ஆத்மஸ்வரூபம்.

நித்தியர், (க)
முக்தர், (உ)
பத்தர், (௩)
கேவலர், (ச)
முமுக்ஷுக்கள். (ரு)

(உ) பரஸ்வரூபம்.

பரத்வம், (க)
வியூஹம், (உ)
விபவம், (௩)
அந்தர்யாமித்வம், (ச)
அர்ச்சாவதாரம். (ரு)

(௩) புருஷார்த்த ஸ்வரூபம், அதாவது புருஷனாலே அர்த்திக்கப் படுமது.

தர்மம், (க)
அர்த்தம், (உ)
காமம், (௩)
ஆத்மாநுபவம், (ச)
பகவதநுபவம். (ரு)

(ச) உபாயஸ்வரூபம்.

கர்மம், (க)
க்யானம், (உ)
பக்தி, (௩)
ப்ரபத்தி, (ச)
ஆசார்யாபிமானம். (ரு)

(ரு) விரோதிஸ்வரூபம்.

ஸ்வருபவிரோதி, (க)
பரத்வவிரோதி, (உ)
புருஷார்த்தவிரோதி (௩)
உபாயவிரோதி, (ச)
ப்ராப்திவிரோதி. (ரு)

(௧௩) இவ்வயநசம்பந்தமே, வேதங்களை (அ) ப்ரகாசிப்பிக்கைக்கு ஹேது.

(௧௪) சகல ஆத்மாக்களளவிலும், மாத்ருவத் வத்ஸலனான ஈச்வரன், சேதநருடைய ருசிக்கீடாகப் பந்தங்களையும் தர்சிப்பித்துப், பின்னை பந்தநிவர்த்தக பேஷஜமானதையும் தர்சிப்பிக்கிறான்.

(௧௫) அதுதானும் க்ரமத்திலே அவர்களை உஜ்ஜீவிப்பிக்கைக்கு இட்டவழி.

(௧௬) சாஸ்த்ரங்கள்தான் அநேகங்கள், அவைகளில் தாத்பர்யம் கைப்படும்படி அதிகரிக்கை துர்லபமாகையால்; ஈச்வரன் தன் க்ருபையாலே சம்சாரி சேதநனை உஜ்ஜீவிப்பிக்கைக்காக, (ஆ) ஸ்ரீபதரி காச்ரமத்திலே, (இ) நர நாராயண ரூபேண, தானே சிஷ்யனுமாய், ஆசார்யனுமாய், அவதரித்து, (ஈ) சாஸ்த்ர தாத்பர்யமான (உ) திருமந்திரத்தை வெளியிட்டருளினான்.

(அ) త్రైగుణ్యవిషయా వేదాః।

(ஆ) గాయన్తి దేవాః కిల గీతకాని। ధన్యాస్తు యే భారతభూమిభాగే।
స్వర్గాపవర్గాస్పదమార్గభూతే। భవన్తి భూయః పురుషాః సురత్వాత్॥

(இ) க. దుర్లభో మానుషో దేహో। దేహినాం క్షణభఙ్గురః॥

உ. అత్ర జన్మసహస్రాణాం సహస్రైరపి సత్తమ।
కదాచిల్లభతే జన్తుర్మానుష్యం పుణ్యసఞ్చయాత్॥

ங. తస్మాద్బాల్యే వివేకాత్మా యతేత శ్రేయసే సదా।

ச. శతాయుర్వై పురుషః॥

ரு. అనన్తపారం బహు వేదివ్యమల్పశ్చ కాలో బహవశ్చ విఘ్నాః॥

௬. శ్రేయాంసి బహువిఘ్నాని భవన్తి మహతామపి॥

எ. చఞ్చలం హి మనః కృష్ణ ప్రమాథి బలవద్దృఢం

அ. వేదసారోపనిషత్।

(ஈ) అసారమల్పసారం చ సారం సారతరం త్యజేత్।
భజేత్సారతమం శాస్త్రం రత్నాకర ఇవామృతం॥

(உ) ఋచో యజూంషి సామాని తథైవాథర్వణాని చ। సర్వమష్టాక్షరాన్తస్థం॥

(கஎ) சாஸ்த்ரத்துக்கு (அ) தேஹத்திலே நோக்கு; சாஸ்த்ர (ஆ) தாத்பர்யத்துக்கு ஸ்வரூபத்திலே நோக்கு.

(கஅ) சாஸ்த்ரம், அதிக்ருதாதிகாரம்; சாஸ்த்ர தாத்பர்யம், (இ) ஸர்வாதிகாரம்.

(கசு) சாஸ்த்ரக்ஞர், (ஈ) ஸ்வயத்நமும் தத்ஸாத்ய (உ) பகவத் க்ருபையுமாகிற இரண்டையும், அவலம்பித்துக்கொண்டு பிறவிக்கடலை நீந்துவர்; சாரக்ஞர், அவைகளைவிட்டு க்கேவலம் பகவத் க்ருபையையே (ஊ) உத்தாரகமென்று அத்யவஸிப்பர்.

(உ0) சாஸ்த்ரக்ஞர், ஸ்வ யத்நத்தால் சம்சார நிஸ்தரணம் பண்ணத் தேடுவர்; சாரக்ஞர், ஸ்வ யத்ந ரஹிதராயிருப்பர்.

(உக) சாஸ்த்ரமுகத்தாலே, பகவத் சேஷத்வமும் பகவதநுபவ போக்த்ருத்வமும் பிரகாசிக்கும்; திருமந்திரத்தால், பாரதந்த்ரிய போக்யதா ரூபமான ஸ்வரூப யாதாத்மியம் பிரகாசிக்கும்.

(உஉ) ஸ்வரூபவிரோதி யுதய ஸஹங்களான சேஷத்வ போக்த்ருத்வங்கள்போலன்று, அதை ஸஹியாதபடியிருக்கும் பாரதந்த்ர்ய போக்கியதைகள்.

(அ) కృష్ణద్వైపాయనంవ్యాసం విద్ధినారాయణంప్రభుం।
కోహ్యన్యః పుణ్డరీకాక్షా న్మహాభారతకృద్భవేత్॥

(ஆ) வதரியாச்சிராமத்துள்ளானைக் கருங்கடல் முன்னீர்வண்ணனை,
(பெரியதிருமொழி, முதற்பத்து, ச-ம் திருமொழி, க0-ம் பாட்டு)

(இ) க. శ్రద్ధైవకారణంపుంసా మష్టాక్షరపరిగ్రహే॥

உ. கண்ணன்கழலிணை நண்ணும்மனமுடையீர். (க0-ம் பத்து, ரு-ம் திருவாய்மொழி, முதற் பாட்டு.)

ங. பழுதிலாவொழுகலாற்று (முதலாயிரம்-திருமாலை-சஉ-ம் பாட்டு.)

(ஈ) ఆత్మావారేద్రష్టవ్యశ్శ్రోతవ్యోమన్తవ్యోనిదిధ్యాసితవ్యః।
ఆత్మేత్యేవోపాసీత ఓమిత్యాత్మానంధ్యాయథ॥

(உ) అమృతస్యైష సేతుః । ఫలమత ఉపపత్తేః॥

(ஊ) க. கூவிக்கொள்ளுங் காலமின்னங் குறுகாதோ (சு - ம் பத்து கூ - ம் திருவாய்மொழி, கூ - பாட்டு.)

உ. ஆக்கைவிடும் பொழுதெண்ணே (முதற பத்து, உ - ம் திருவாய்மொழி, கூ - ம் பாட்டு.)

(உங) ஸ்வரூபத்தை, நிறம்பெறச்செய்யும் பாரதந்த்ரிய போக்த்ரு யதைகள், சேஷத்வ போக்த்ருத்வங்களை, நிவ்ருத்திபண்ணிக் கும்

(உச) போகதாவானவன், போக்யஸித்திக்கு யத்நம் பண்ணவேண்டாவோ வென்னும் நினைவாலே, போக்யபூத பகவத் விஷய லாபார்த்தமான உபாய ப்ரவ்ருத்தியிலே மூளுவர் சாஸ்த்ரிகள், அப்படி அன்றிக்கே, போகதாவான ஈஸ்வரனன்றோ, ஸ்வபோக்யமான இவ்வஸ்துவைப் பெறுகைக்கு யத்னம் பண்ணுவான், தத்போக்யமான இவ்வஸ்துவுக்கு தன்லாபத்துக்கு யத்நிக்க ப்ராப்தியில்லையென்னும் நினைவாலே, உபாய ப்ரவ்ருத்தியிலநின்றும் மீளுவர் சாரக்ஞர்.

(உரு) அவைதான், சாஸ்த்ரிகளுக்கு உபாஸன ப்ரதமபாவியான கர்மத்துச்சு, உத்பத்தியிலே ஸஹகரிக்கும், சாரக்ஞருக்கு இவ்வாத்மா செய்யக்கடவது ஒன்றுமில்லை, எம்பெருமானே நிர்வாஹகன் என்று சிந்தித்து, உபாயரூப ப்ரவ்ருத்தியில நிவ்ருத்தரான ப்ரபந்நருடைய கைங்கர்யரூப ப்ரவ்ருத்தியில, அவன் உகப்பைப்பின் செல்லுவதொழிய, தங்கள் நிர்ப்பந்தத்தைத் தவிர்க்கும்

(உசா) கர்மம், அசத்தியமுமாய அனித்தியமுமான வர்ணத்துக்கு அநுகுணமாயிருக்கும், கைங்கர்யம், சத்தியமுமாய நித்தியமுமான தாஸ்யத்துக்கு அநுகுணமாயிருக்கும்

(உஎ) சாஸ்த்ரவிதி, (அ) காமத்திற்குப்ரேரகம், ராகம், கைங்கரியத்துக்கு ப்ரேரகம்

(உஅ) காமத்திறகுக்காத்தா, உபாசகர், கைங்கரியத்துக்குக்காத்தா ப்ரபந்நர்

(உகூ) காமத்திறகு விஷயம், (ஆ) தேவதாந்தர் யாமியாய் நின்ற இடம், கைங்கர்யத்துக்கு விஷயம், அர்ச்சாவதாரம்

(அ) க ಯಜೇತ॥

உ ಜುಹುಯಾತ್॥

இர ங. உறங்கேனுகந்துபணிசெய்து (கo-ம பத்து, அ-ம திருவாய்மொழி, கo-ம பாட்டு.)

காரத் (ஆ) க அவரவர் விதிவழி யடைய நின்றனர். (முதற்பத்து, முதல் திருவாய்மொழி, ரு-ம பாட்டு.)

உ. கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று, மண்டினார் (திருக்குறுந்தாண்டகம், ககூ-ம பாட்டு.)

(௩௦) கர்மத்தைச் சாதாரணமென்றும், கைங்கரியத்தை அசாதாரணமென்றும் சொல்லுவர்கள்.

(௩௧) அசாதாரணத்திலே அந்வயித்தவர்களுக்குச், சாதாரணமான அதில் அந்வயம், உறங்குவான் கைப்பண்டம்போலே தன்னடையே நழுவும்.

(௩௨) கர்மநிஷ்டர்களை, (அ) வர்ண தர்மிகளென்றும், கைங்கரிய நிஷ்டர்களைத் தாஸவ்ருத்திகளென்றும், வரம்பறுத்துத் துறை வேறிட்டுக் கிடக்கும்: இவ்விடத்தில் ஸ்ரீ வில்லிபுத்தூர் பகவர் வார்த்தையை ஸ்மரிப்பது.

(௩௩) கர்மநிஷ்டர்க்குக் (ஆ) காயத்ரீ உபதேசத்தாலே பிறக்குமது, ஸ்ரேஷ்டஜன்மம்; கைங்கரியநிஷ்டர்களுக்குத் (இ) திருமந்த்ர உபதேசத்தாலே பிறக்குமது, ஸ்ரேஷ்டஜன்மம்.

(௩௪) கர்மநிஷ்டரான அந்தணர்க்குச், சரீரத்வாரா வந்தவர்ணமும், தத்ப்ரயுக்தமான வைதிகத்வமும் நிருபகம்; கைங்கரியநிஷ்டரான திருமாலடியார்க்கு, ஆத்மவஸ்துவுக்கு ஷ்யாநாநங் தங்களிலும் காட்டில், அந்தரங்கமான சேஷத்வம், நிருபகம்.

(௩௫) கர்மநிஷ்டர்க்குச், சரீராநுபந்திகளான கிராம குலாதிகளையிட்டு, அந்த வ்யபதேசத்தை வ்யபதேசிப்பர்கள்; கைங்கரிய நிஷ்டர்க்குச், சேஷத்வ விரோதியான அஹங்காரா

(அ) ௧. బ్రాహ్మణస్య । అధ్యయనాధ్యాపనం । యజనయాజనం । దానప్రతిగ్రహణం । దాయాద్యంశిలోఞ్ఛాన్యచ్చాపరిగృహీతం ।। ఏతాన్యేవక్షత్రియస్య । అధ్యాపనయాజనప్రతిగ్రహణానీతి । పరిహార్యం । దణ్డయుద్ధాదికాని । క్షత్రియవద్వైశ్యస్య । దణ్డయుద్ధవర్జం కృషిగోరక్షణవాణిజ్యాదికం ।।

௨. విష్ణుదాసావయం యూయం బ్రాహ్మణావర్ణధర్మిణః ।
అస్మాకం దాసవృత్తీనాం యుష్మాకం నాస్తి సఙ్గతిః ।।

(ஆ) గాయత్రీచ్ఛన్దసాం మాతా ।

(இ) ఋచోయజూంషి సామాని । తథైవాథర్వణాని చ ।
సర్వమష్టాక్షరాన్తస్థం । యచ్చాన్యదపి వాఙ్మయం ।।

திகள் இல்லாமையாலே, நிர்த்தோஷமாயிருக்கும்; இக்கு லத்திற்குக் **கோயில்வாழும்வைஷ்ணவர்** என்று, பரவந் அன் வயமுள்ள தேசசம்பந்தத்தையிட்டு, விவஹரிப்பார்கள

(௩௬) அந்தணருக்குக்கோத்ர (அ) சூத்ர (ஆ) சரண (இ) கூடஸ் தர், **பராசர பாராசர்ய போதாயநாதிகள்.** ப்ரபந்ந (ஈ) ஜன கூடஸ்தர், **பராங்குச பரகால யதிவராதிகள்** கோத்ரமாவது அபத்யசந்ததி சரணங்களாவன வேதசாகைகள் சூத்ர மாவது காமாநுஷ்டான ப்ரதிபாதகமான கல்பம் கூடஸ தர் - மூலபூதர்

(௩௭) அத்யயன (உ) கர்மாநுஷ்டானங்களாலே **ப்ராம்ஹண்ய** சித்தியாமாப்போலே, சந்தோரூபமாய் சஹஸ்ர சாகை யாயிருக்கிற திருவாய்மொழியை அறியக்கற்று வல்லார்க் கு, **வைஷ்ணவத்வ** சித்தியாம்

(௩௮) **அந்தணருக்கு** இந்த வேதாத்யயநாதிகள் இல்லாத வளவில், வைஷ்ணவத்வாசித்தியொழிய (ஊ) **ப்ராம்ஹண்ணியஹாநி** யில்லை; வேதங்களை யோதியும் **உத்க்ருஷ்டரான வேதாந்திக**

(அ) సన్తతిర్గోత్రజననకులాన్యభిజనాన్వయాః।

(ஆ) శిక్షాయాం వర్ణశిక్షా॥

(இ) చరణశబ్దః కారకశాఖాపాది శాఖావిశేషేషుముఖ్యః।
తదధ్యాయిషు పురుషేషుగౌణః॥

(ஈ) పత్యుః శ్రియః ప్రసాదేనప్రాప్త సార్వజ్ఞసమ్పదం।
ప్రపన్నజనకూటస్థంప్రపద్యే శ్రీపరాఙ్కుశం॥

(உ) ௧. స్వాధ్యాయోఽధ్యేతవ్యః॥

௨. అధ్యేతవ్యంద్విజశ్రేష్ఠై ర్వేదరూపమిదంకృతం॥

௩. அறியக்கற்றுவல்லார் (௫-ம பத்து, ௫ - ம் திருவாய்மொழி, ௧௧-ம் பாட்டு.)

(ஊ) ௧. மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள். (முதலாயிரம, கண்ணிநுண் சிறுத்தாம்பு ௯ - ம பாட்டு.)

௨. அறுசதுப்பேதிமார். (முதலாயிரம், திருமாலை ௩௯ - ம பாட்டு.)

ளாகாதாரை, ப்ராம்ஹண ரல்லரென்று உத்பத்தி ஆராயப் படும். (அ)

(௩௯) வேதமானது, அத்யேதாக்களுடைய பேதத்தாலும், லோக பேதத்தாலும், பஹுவிதமாயிருக்கும்.

(௪0) வேதராசி யொன்ருயிருக்க கீர்வாணவேதம், ருகாதி ருபே ண பலபடியாகப் பிரிந்தாற்போலே, பாஷாபேதேந சம் ஸ்க்ருதமும், த்ராவிடமுமாய்ப் பிரிந்திருக்கும்.

(௪க) த்ராவிடம், சம்ஸ்க்ருதத்தோடே சஹபடிதமும், ப்ரஸோபா த்கதமுமாயிருக்கையாலே, இரண்டும் அநாதி.

(௪௨) வடமொழிமறை என்கிறது, த்ராவிடவேதமும் உண்டென்று (ஆ) நினைத்து.

(௪௩) கீர்வாணவேதம் - ௪, அதாவது, ரிக், யஜுர், சாமம், அதர் வணம். அங்கம் - ௬, அதாவது, சிக்ஷா, வியாகரணம், நிருக்தம், சந்தஸ், கலபம், ஜோதிஷம். உபஅங்கங்கள் - ௪, அதாவது, மீமாம்சை, நியாயம், புராணம், தர்மசாஸ்த்ரம். அதுபோல த்ராவிடவேதம் - ௪, திருவிருத்தம், திருவா சிரியம், திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி. அங்கம்-௬, பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தா ண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெ ரியதிருமடல. உபஅங்கங்கள் - ௪, மற்றை ஆழ்வார்கள் எண்மருடைய ப்ரபந்தங்கள்.

(௪௪) சகல வித் (இ) யாதிகவேதம்போலே, இதுவும் திவ்யப்ரபந்த ப்ரதானம்.

(அ) க. విష్ణుభక్తి విహీనోయస్సర్వ శాస్త్రార్థవేద్యపి।
బ్రాహ్మణ్యంతస్యనభవేత్తస్యోత్పత్తిర్నిరూప్యతాం॥

உ. యఃపుత్రఃపితరంద్వేష్టి । తంవిద్యాదన్యరేతసం।
యోవిష్ణుంసతతంద్వేష్టి । తంవిద్యాదన్యరేతసం॥

(ஆ) செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி (திருநெடுந்தாண்டகம், ௪ - ம் பாட்டு.)

(இ) అఙ్గానివేదాశ్చత్వారో । మీమాంసా న్యాయవిస్తరః।
పురాణంధర్మశాస్త్రంచ । విద్యాహ్యేతాశ్చతుర్దశ॥

(௪௫) கீர்வாண வேதத்திற்குள்ள வைபவம், த்ராவிடவேதத்திற்கும (அ) உண்டு, அதெப்படியெனனில அத்தை "வேத சாஸதிரம" என்ருறபோல இத்தை "இருந்தமிழ்நூல" என்றும, அத்தை "ஶ்ருதி ஸ்ம்ருதிர்மமை வாஜ்ஞா", என்ருறபோல இத்தை "ஆணை ஆயிரம" என்றும் ...தை "வசையில நானமறை" என்ருறபோ... அத் "ஏதமில ஆயிரம்" என்றும அத்தை "ஶ்ரு... இத்தை என்ருறபோல இத்தை "செவிக்கி... டா மிகுசுருதி" என்றும, அத்தை "வேதநூல ஓதுகி... ...ய செஞ்சொல" ...றபோல இத்தை "பொயயில ...றதுண்மை" என்ரு "பணடைநான்மறை" "... பாடல" என்றும, அத்தை போல இத்தை "முந் ...நிறகும நானமறை" என்ரு ரம" என்றும, செ ...ந்தையாயிரம" "அழிவில்லாவாயி ...ாலலபபடுகிறது

(௪௬) பரமஹாவின் (...(ஆ) வாக்கிலநின்று ஆவிர்பவித்த மாதுரய

(அ) ௧. இருந்தமிழ் ...நூல (பெரியதிருமொழி முதறபத்து, எ - ம திருமொழி ...ம பாட்டு)

௨. ...ணையாயிரம (௬-மபத்து ௩-ம திருவாயமொழி ௧௧-ம் பாட்டு)

௩. வசையில நானமறை (பெரியதிருமொழி, ௫-ம பத்து, ௩ - ம திருமொழி ௨-ம பாட்டு)

௪. ஏதமில் ஆயிரம (முதறபத்து, ௬-ம திருவாயமொழி, ௧௧-ம் பாட்டு)

௫. சுடா மிகுசுருதி (முதறபத்து, முதல்திருவாயமொழி, எ-ம் பாட்டு)

௬. செவிக்கினிய செஞ்சொல (௧0 - ம பத்து, ௬ - ம் திருவாய்மொழி ௧௧-ம் பாட்டு)

எ. வேதநூல ஓதுகினறதுண்மை (முதலாயிரம, திருச்சந்தவிருத்தம ௭௨-ம பாட்டு)

அ. பொயயிலபாடல (௪-ம பத்து, ௩-ம் திருவாயமொழி, ௧௧-ம் பாட்டு)

௯. பணடைநானமறை (பெரியதிருமொழி, ௫ - ம் பத்து, எ - ம திருமொழி, முதறபாட்டு)

௧0. நிறகும நானமறை (௬-ம பத்து, ௫-ம் திருவாய்மொழி ௪-ம் பாட்டு)

௧௧ முநதையாயிரம (௬-ம பத்து, ௫-ம திருவாயமொழி ௧௧-ம பாட்டு)

௧௨. அழிவில்லாவாயிரம (௯ - ம பத்து, எ - ம் திருவாய்மொழி, ௧௧-ம் பாட்டு)

(ஆ) ௧. అనాదినిధనా హ్యేషా వాగుత్సృష్టా స్వయమ్భువా॥

௨. முனனம திசைமுகனைததான படைக்க மறறவனும் முன்னம் படைத்தனன நானமறைகள (இயறபா பெரியதிருமடல, ௧0 - வாக்கியம)

௩. అష్టాదశ పురాణానాం కర్తా సత్యవతీసుతః॥

கொண்டு வேதத்திற்குச் சொன்ன கர்த்ருத்வம் போலே, ஆழ்வாருக்கு (அ) இத்ரவிட வேதத்தில கர்த்ருத்வம்.

(சஎ) "நால் வேதங்கண்ட புராணருஷி" என்று ஸ்ரீ வேதவ்யாச பகவானைச் சொல்லுவதுபோல், முன் புண்டான சந்தர்ப் பத்தைத் தரிசித்துப் பேசின ஆழ்வாரையும் "ருஷி" யென்றும் "முனி" யென்றும் "கவி" யென்றுஞ் சொல் லுகிறது.

(சஅ) சிர்ஷ்டிதோறும் சந்த்ர (ஆ) சூர்யாதி சகல பதார்த்தங்க ளும், யதாபூர்வ கல்பநமாய் வருமாப்போலே, த்ராவிடவே தமான இப்ரபந்தமும், சிர்ஷ்டிதோறும் யதாபூர்வ கல்பந மாய் வரும்.

(சகூ) ஸம்ஸ்கார கதமாய்க்கிடந்த நாலு வேதங்களையும், சர்வேஸ் வரன் (இ) சதுர்முகனுக்கு ஓதுவித்து, அச்சதுர்முகன் தன் ஜேஷ்டபுத்திரனை (ஈ) ருத்ரன் முதலானார்க்கும் ஓதுவித் தாற்போலே, காரணபூதனை உபகாரகன், (உ) தானே ஆசாரியனாய் (ஊ)முன் உருச்சொல்ல, (எ) ஓதின ஆழ்வா ரும், (ஏ) மதுரகவிகள் போல்வாரை, இத்தை அப்யசியுங்க ளென்று (ஐ) ஓதுவித்தார்: கீர்வாணவேதம் ஓதுவாரைப்

(அ) ఋషిం జుషామహే కృష్ణ తృష్ణాతత్త్వమివోదితం।
సహస్రశాఖాం యోద్రాక్షీ ద్ద్రావిడీం బ్రహ్మసంహితాం॥

(ஆ) సూర్యాచన్ద్రమసౌ ధాతా యథాపూర్వమకల్పయత్॥

(இ) యో వై వేదాంశ్చ ప్రహిణోతి తస్మై॥

(ஈ) బ్రహ్మణః పుత్రాయ జ్యేష్ఠాయ॥

(உ) பீதகவாடைப் பிரானூா பிரம குருவாகி. (முதலாயிரம், பெரியாழ்வார் ரு-ம பத்து, உ-ம் திருமொழி, அ-ம் பாட்டு.)

(ஊ) என்முன் சொல்லும். (எ-ம் பத்து, கூ-ம் திருவாய்மொழி, உ-ம் பாட்டு)

(எ) திருநாமச் சொற்கற்றனமே. (இயற்பா திருவிருத்தம் கூச-ம் பாட்டு.)

(ஏ) கன்மின்க ளென்றும்மையான். (கூ - ம் பத்து, அ - ம் திருவாய்மொழி, கூ-ம் பாட்டு.)

(ஐ) சொற்பயிற்றிய. (கூ-ம் பத்து, ரு-ம் திருவாயமொழி, அ-ம் பாட்டு.)

பற்றி, அதர்வணம், தைத்திரீயம், காண்வம், என்று பெயர் பெற்றாற்போலே, ஆழ்வார் இதுக்கு ப்ரதமாத்யேதா வா னதுகொண்டு, இதுவும் சடகோபன் சொல் என்று பெயர் பெற்றது.

(ருo) திருவிருத்தம், திருவாசிரியம், திருவந்தாதி, இவைகள் அடைவே ருக், எஜுர், அதர்வணங்கள். திருவாய்மொழி பண்ணும் இசையும், உடைத்தான சாமவேதம்.

(ருக) சாமசங்கிரஹமான ருக்கானது, தனக்கு ரசமாயிருந்துள்ள கானரூபமான சாமத்தாலே ஸஸ்ஷிதமாவதுபோலே, ருக் வேதஸ்தானேயா யிருக்கிற திருவிருத்தம், இசையிலே கூட்டினவாறே சாமவேத ஸ்தானேயாய் (அ) "அமர்சுவையாயி ரம்" என்கிறபடியே, சரஸமாயிருந்துள்ள ஆயிரம் பாட்டாகப் பரவியது.

(ருஉ) சாமத்துக்கு ரசமாகச் சொல்லப்படுமதாய், ப்ரணவ பூர் வகமாகக் கானம் பண்ணப்படுமதாயிருப்பது, உத்கீதம். ஆகையால் அந்த உத்கீத அவயவமான ப்ரணவத்தைச், சாந்தோக்கியந் தன்னில் ப்ரதமத்தில் யெடுத்தாற்போலே, இங்கும் ப்ரதமத்திலே எடுக்கிறவளவில், "ஓம்" என்று எடுத்தால் அதிக்ருதாதிகார மாமென்று, அக்ஷரத்ரயத் தையும் மூன்று பாதாதிகளில் எடா நிற்கச்செய்தே, உகா ரம் முதலாக வெடுக்கை, அக்ஷரக்கிரமத்தை மாறடினபடி யென்கை. இதற்குக்காரணம், சாந்தோக்கிய மத்தியே சொ ன்ன வர்ச்சிராதியான சாமகதியைச், (ஆ) "சூழ்விசும் பணி முகிலிலே" பேசுகையாலே.

(ருஙு) இப்படிச்சொன்ன ஆகாரங்களைக்கொண்டு, இத்தைச் சாந் தோக்யசாமத்தில் உபநிஷத் பாகமான சாந்தோக்யத்துக்கு, சமமென்கை.

(ருச) இந்த த்ராவிடவேதத்திற்கு, வேதோப ப்ரம்ஹண ஸாம்யமும் உண்டு.

(அ) அமர்சுவையாயிரம் (முதற்பத்து ரும் திருவாய்மொழி கக-ம் பாட்டு.

(ஆ) சூழ்விசும் பணிமுகில் (கo-ம் பத்து கூம் திருவாய்மொழி க-ம் பாட்டு.)

(ருரு) ஆழ்வார் ப்ரபந்தங்களுக் குள்ள வேற்றம், வேதோப ப்ரம்ஹ ணங்களுக்கில்லை. இவை ஆர்ஷமூலங்கள்; அவை பகவத் ப்ர சாதமூலங்கள்.

(ருசு) மேலில்லை என்னும்படியான சுத்தசத்வ யுக்தனும், வாத் சல்யாதி சயத்தாலே வேதமார்க்கத்தை விசாரித்து அருள் செய்யு மவனுமாயும், பரிபூர்ண க்யாநத்தை நிரூபகமா கவுடைய சர்வாதிகனை ஸ்ரீயஃபதியாலே, "அருளப்பட்ட சடகோபன்" என்கிறபடியே "மயர்வற மதிநல" மருளப் பெற்றவராய்ப், பகவத் ப்ரசாதத்தை மூலமாகக்கொண்டு, இப்ரபந்தங்களைப் பாடினார்.

(ருஎ) சொல்லும் தன்னது, சொன்னனும் தான், சொல்லிற்றும் தன்னை, என்பது நிச்சயம்.

(ருஅ) இப்படி இப்ரபந்தங்களுக்கு மூலவை லக்ஷண்யத்தாலே வந்த வேற்றத்தளவு மன்றி, வக்த்ரு வைலக்ஷண்யத்தால் வந்த வேற்றமு முண்டு. தாம் தாம் அநுஷ்டித்த தபோரூப மான தர்மத்தினுடைய சக்தியாலே ஜனித்த, க்யானத்தா லே ஹர்ஷ யுக்தராய், அந்த (அ) ஹர்ஷத்தாலே சப்தங் களைத் தொடுக்கும் ரிஷிகளைப்போலல்லாமல், நிர்ஹேதுக பகவத் ப்ரசாதத்தாலேவந்த, க்யான விபாக ரூபையான பக்தியாலே, தெளிவுக்கும் ஹர்ஷத்திற்கும் வ்யதிரித்தட் டாம்படி, அநுபவா லாப க்லேசத்தாலே அவன் படிகளைப் பலகாலுஞ்சொல்லி, (ஆ) மனச் சைதல்யத்தாலே தத்க தஸ்வரூபமான சப்தங்களாலே நிர்மிக்கப்பட்டன.

(ருகூ) பகவத் ப்ரேமத்தாலே ருஷிகளைக்காட்டில் வ்யாவ்ருத்த ரான ஆழ்வார், இதரவிஷய வைராக்யத்தாலும், வ்யாவ்ருத் தர். அதெங்ஙனேயெனில், ஸ்வாத்யாய யோகங்களாகிற

(அ) హసితంభాషితంచైవగతిర్యాయచ్చచేష్టితం।
తత్సర్వంధర్మవీర్యేణయథావత్సమ్ప్రపశ్యతి॥

(ஆ) வண்டமிழ் நூற்கநோற்றேன் (௪-ம் பத்து ரு-ம் திருவாய்மொழி க0-ம் பாட்டு.)

இரண்டு திருஷ்டிகளாலுமொழிய, (அ) மாம்ஸக்கண்க ளால பரமாத்மாவைக் காணப் போகாமையாலே, வேதத் தையும், அஷ்டாங்க யோகத்தையும் அப்பியஸித்து, பரமா த்மாவை அறிந்து, ஸ்வயத்நத்தால் கண்ட காட்சியில் ஓதி உணர்ந்து, சம்சாரிக போக விஷயங்களான ஆசாபாசங்க ளாலே (ஆ) பந்திக்கப்பட்டிருப்பர் ருஷிகள். அப்படி அன்றிக்கே, அவன்கொடுத்த திவ்ய (இ) ஞானசக்ஷுக்களாலே தங்களையொழிய, வேறொருவருக்கும் அறியப்போகாதென் றிருக்கும் ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கும், காண அரியனான அவன், தானேகாட்டுகையாலே, விசதமாகக்கண்ட போதே, அவித்யாதிகளை விடுவித்தருள வேணுமென்று அவனைக் காலைக்கட்டும்படி ஆழ்வார்க்குச் ஸ்வயத்ந நிவ்ருத்திய மல்லாத படி, ப்ரபலமான பாஹ்ய (ஈ) பாசங்கள் நீங்கித், தத்ப்ரசா தத்தாலே ஸவாஸனமாக விட்டு அகன்றது.

(சுO) ருஷிகளுக்கு ஆஹாரம், பலமூலபத்ர வாயுதோயங்கள். ஆழ் வாருக்கு (உ) "உண்ணுஞ் சோறும் பருகுநீரும் தின் னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்."

(சுக) ருஷிகள், ப்ராக்ருத விஷய சங்கமுடைகையாலே, அவ்விஷ யங்களுடைய விரஹத்திலே படுவர்கள். ஸ்ரீவசிஷ்டபகவா னும் ஸ்ரீவேதவ்யாசபகவானும் புத்ர வியோக க்லேசத்தா லே, மலையேறிவிழுவது, கழுத்திலே கல்லைக் கட்டிக்கொ ண்டு கடலிலே விழுவது, புத்ரனேயென்று கூப்பிட்டு அழுவது, இப்படி நடுங்கினார்கள். ஆழ்வாரோவென்றால், பகவதேக பாராயத்த விரஹத்தில் மூழ்கினார்.

(அ) స్వాధ్యాయాద్యోగమాసీత యోగాత్స్వాధ్యాయమామనేత్।
స్వాధ్యాయయోగసమ్పత్త్యా పరమాత్మా ప్రకాశతే।
తదీక్షణాయ స్వాధ్యాయ శ్చక్షుర్యోగ స్తథాపరం।
న మాంసచక్షుషా ద్రష్టుం బ్రహ్మభూతస్స శక్యతే॥

(ஆ) ఆశాపాశశతైర్బద్ధాః॥

(இ) கண்டேன் கமலமலர்ப்பாதம் (கO-ம் பத்து ச-ம் திருவாய்மொழி கூ-ம் பாட்டு.)

(ஈ) மற்றவன் பாசங்கள் (அ-ம் பத்து உ-ம் திருவாய்மொழி கக-ம் பாட்டு.)

(உ) உண்ணுஞ்சோறு (சு-ம் பத்து எ-ம் திருவாய்மொழி க-ம் பாட்டு.)

(கூஉ) ருஷிகள், பகவத்ப்ராப்தியே பலமாகவும், கர்மக்யாநங்களே உபாயமாகவும், இந்த்ராதி தேவதாந்தர்யாமியான ஈச்வரனே உத்தேச்யனுகையாலே, இந்த்ராதி தேவதைகளை அநுவர்த்த நீயராகவும் (அ) சொல்லுவர்கள். ஆழ்வார், கைங்கரியமே புருஷார்த்தமென்றும், தத்ஸாதனம் ப்ரபத்தியென்றும், தேவதாந்தரங்கள் அநுவர்த்த நீயர் அல்லவென்றும் (ஆ) அருளிச்செயதார் இவ்விடத்தில் திருமந்த்ரா(இ)ர்த்தத்தை ஸ்மரிப்பது.

(அ) నిరస్తాతిశయాహ్లాద సుఖభావైకలక్షణా।
భేషజమ్భగవత్ప్రాప్తి రేకాన్తాత్యన్తికీమతా।
తస్మాత్తత్ప్రాప్తయేయత్నః కర్తవ్యఃపణ్డితైర్నరైః।
తత్ప్రాప్తిహేతుర్జ్ఞానఞ్చ కర్మచోక్తంమహామునే॥

(ஆ) க. தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே (உ-ம் பத்து கூ-ம் திருவாய்மொழி சா-ம் பாட்டு.)

உ. வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம் (ங-ம் பத்து ங-ம் திருவாய்மொழி க-ம் பாட்டு.)

(இ) திருமந்த்ரம் எட்டுத்திருவக்ஷரமாய் மூன்றுபதமா யிருக்கும்.

க. ஏகாக்ஷரமான ப்ரணவம். அ. உ. ம.

உ. நம:. ந. ம:.

ங. நாராயணுய. நார. அயந. ஆய.

அகாரார்த்தம்.

க. ஸர்வரக்ஷகத்வம். உ. ஸமஸ்தகல்யாணகுணுத்மகத்வம். ங. ஸர்வசேஷித்வம். சா. ஶ்ரிய:பதித்வம்.	} பிதா - புத்ரசம்பந்தம். தாதுவினுல், ரக்ஷ்யரக்ஷக சமபந்தம், சதுர்த்தியாலே, சேஷிசேஷ சம்பந்தம்.

உகாரார்த்தம்.

க. அந்யசேஷத்வநிவ்ருத்தி. உ. பகவதநந்யார்ஹசேஷத்வம்.	} பர்த்ருபார்யா சம்பந்தம்.

மகாரார்த்தம்.

க. ஆத்மாவினுடைய க்யாநுநந்தத்வம். உ. க்யானகுணகத்வம். ங. நித்யத்வம். சா. அணுத்வம். ரு. ஏகரூபத்வம். கூ. ஸ்வஸ்மைஸ்வயம்ப்ரகாசத்வம். எ. ப்ரக்ருதே:பரத்வம்.	} ஜ்ஞாத்ருஜ்ஞேய சம்பந்தம்.

(சூங) நாராயண கதையென்று, ராமாயணஞ்சொன்ன ஸ்ரீவால்மீகி பகவானுக்குக் கங்காசம்பவம், சுப்ரமண்ய உத்பத்தி, புஷ்பக வர்ணநம், முதலான அஸத்கீர் தனத்தால் வாக்சுத்தி செய்யவேண்டி வந்தது. அப்படியே பாரதகதையைச் சொன்ன ஸ்ரீ வேதவ்யாஸ பகவானுக்கும், காங்கேயரான ஸ்ரீ பீஷ்மருடைய கதாப்ர சங்கத்தினால் (அ) வாக்சுத்தி செய்யவேண்டி வந்தது. இப்படிக் கன்றி ஆழ்வாருடைய

நமஃசப்தார்த்தம்.

க.	ஸ்வாஹங்கார மமகாரநிவ்ருத்தி.	ஸ்வஸ்வாமி சம்பந்தம்.
உ.	நிவ்ருத்தமான ஸ்வரூபத்தினுடைய அத்யந்த பாரதந்த்ரியம்.	
ங.	பாரதந்த்ரிய பரகாஷ்டையான ததீய சேஷத்வம்.	
ச.	பரதந்த்ரனுக்கு அநுரூபமான உபாயம்.	

நாரசப்தார்த்தம்.

க.	சேதநா சேதநங்களுடைய நித்யத்வம்.	சரீரி சரீரசம்பந்தம்.
உ.	அவற்றினுடைய சமூஹத்வம்.	
ங.	சமூஹா சங்க்யாதத்வம்.	

அயநசப்தார்த்தம்.

க.	ஈச்வரனுடைய தாரகத்வம்.	ஆதார ஆதேய சம்பந்தம்.
உ.	வ்யாபகத்வம்.	
ங.	நியந்த்ருத்வம்.	
ச.	ஸர்வவித பந்துத்வம்.	
ரு.	ப்ராப்யத்வம்.	
சு.	ப்ராபகத்வம்.	
எ.	ஸகலஜகத்காரணத்வம்.	

ஆயசப்தார்த்தம்.

க.	கைங்கர்ய ப்ரார்த்தனை.	போக்த்ருத்வ போக்யத்வசம்பந்தம்.

(அ) అసత్కీర్తనకాన్తార పరివర్తనపాంసులాం।
వాచాం శౌరికథాలాప గఙ్గయైవ పునీమహే॥

(அ) பாசுரங்கள் அநந்ய பரமான சப்தங்களைத் தெரிந்தெடுத்து, விஷயங்களுக்குத் தகுதியான சொல்லாலே சொல்லப்பட்டதாய், சசகலார்த்த சாரமாய் இருக்கும்.

(௯௪) ப்ரதிபாத்ய வஸ்துவை உள்ளபடி ப்ரதி பாதிக்கவல்ல சாமார்த்யத்தை உடைத்தான, ஏககண்டமா யிருக்கும், ஆழ்வாருடைய பாசுரங்கள், (ஆ) மநுவிபரீதமான ச்ருதிகள்போலே கழிக்கவொண்ணாது.

(௯௫) சூத்ரவாக்யங்களில், சந்திக்தங்களான அர்த்தங்களெல்லாம், இப்ரபந்தத்தில் சூக்திகொண்டு நிர்ணயித்து ஒருங்கவிட்டருளுவர், ஸ்ரீபாஷ்யகாரர்.

௨. அங்குப்போனால் சொல்லும் பாசுரத்தைச் சிலகுயில்களுக்குச் சொன் னாள்.

௩. நான் பண்ணினபாபமேயோ மாளாததென்று சொல்லுங்களென்று சிலவன்னங்களை யிரந்தாள்.

௪. சிலவனறில்களைப் பார்த்து என்தசையை அங்கே சென்று சொல்ல வல்லீர்களோ மாட்டீர்களோ வென்றாள்.

௫. சிலகுருகுகளைப் பார்த்துத் தன்னுடைய நாராயணத்வம் ஒருவாய்ப் போகாமே நோக்கிக்கொள்ளச் சொல்லுங்களென்றாள்.

௬. ஒருவண்டை குறித்துத் தம்முடைய நாராயணத்வத்துக்கு ஒரு ஹாநி வாராமே யெங்கள் சததையுங் கிடக்கும் படி இததெருவே யெழுந்தருளச் சொல்லென்றாள்.

௭. ஒரு கிளியைக்குறித்து இத்தலையில் அபராதத்தையே பார்க்குமத்த னையோ; தம்முடைய வபராதஸஹத்வத்தையு மொருக்கால் பார க்கச் சொல்லென்றாள்.

அ. தானுருவினவாறேமுன் கையிலிருந்த பூவையும் முருவ நாளோ மூடி யாநின்றேன் நீயுனக்கு ரக்ஷகனைத் தேடிக்கொள்ளென்றாள்.

கூ. ஒருவனுடையைக் குறித்து என்தசையை அங்கே சென்றறிவித்தால் அவன் "நமக்கவள் வேண்டா" என்றானாகில் என்னை வந்து முடிக்கவேணு மென்றிரந்தாள்.

கO. தன்னெஞ்சைக் குறித்து நங்கார்ய மோராறுதி பிறக்குமளவும் நீயவனை விடாதே கொள்ளென்று போகவிட்டாள்.

கக. நிகமத்தில், இத் திருவாய்மொழியை அப்யஸித்தார்க்குப் பலஞ்சொல் லித் தலைக்கட்டினார்.

சு - ம். திருவாய்மொழி—அஞ்சிறை.

(ஸ்வாபதேசம்.)

க. ஆசாரியனுடைய த்யாகவைபவத்தை அருளிச்செய்தார்.

உ. மதுரபாஷியா யிருக்குமென்றார்.

ரு. சாராசார விவேகஜ்ஞனென்றார்.

ச. விக்ரஹசவுந்தரியத்தை யநுசந்தித்தார்.

ரு. நினைத்தது கிட்டுமளவும்சலியாத சுத்தஸ்பாவ னென்றார்.

சு. பகவதேகபோகனுமிருக்கும் ரூபவானுமாய் க்ருபாவானுமாய்க் கம்பீர ஸ்வபாவனுமா யிருக்குமென்றார்; மதுகரமிறே.

எ. தான் ஸர்வஜ்ஞனாகிலும் ஆசார்யர்கள் பக்கல்கேட்ட வார்த்தையல்லது அருளிச்செய்யானென்று அவனுடைய ஆப்திலை அநுசந்தித்தார்.

அ. ஆசார்யனுடைய தேஹயாத்ரையே யிவனுக்கு ஆத்மயாத்திரை யென்றார்.

கூ. ஆசார்யசம்பந்தமாத்ரமே சத்தாதாரகம், இதர ஸ்பர்சம் சத்தாபாதக மென்கிறார்.

கO. இப்படி த்யாகவானுமாய் மதுரபாஷியுமாய்ச் சாராசார விவேகஜ்ஞனு மாய் தர்சநீயனுமாய்ச் சுத்த ஸ்வபாவனுமாய் க்ருபாகாம்பீர்யங் களையு முடையவனுய்ச் சிரோபாசித சத்வ்ருத்த சேவ்யனுமாய் ஸச்சிஷ்ய னுகையாலே; யேவம்பூதனான ஆசார்யனுடைய தேஹ யாத்ரையே தனக்கு ஆத்மயாத்ரையாய் இதரஸ்பரிசமும் தனக் குப் பாதகமாய் இப்படிச் சதாசார்ய சேவை பண்ணுகையாலே பகவத் கைங்கரியத்திலே ப்ரவணமாய் "நின்னிடையே னல்லே னென்று நீங்கி ஓர்கோலநீல நன்னெடுங்குன்றம் வருவதொப்பா னுன்மலர்ப்பாதம்" அடைந்தது தன் திருவுள்ளமென்று தலைக் கட்டினார்.

ரு - ம் திருவாய்மொழி—வளவேழ்.

ஈஶ்வரன் தன்னுடைய சீலகுணத்தாலே, ஆழ்வாரு டைய விச்லேஷத்தை ஸஹிக்கமாட்டாமல் சேர்த் துக் கொண்டதை யருளிச்செய்தார்.

க. "அயோக்கியன்" என்றகன்றூ.

உ. அகலுகைக்குத்தானு மதிகாரியல்லே னென்றூ.

ங. சீலகுணத்தைக்காட்டித் துவக்கத் துவக்குண்டாா.

ச. அகலவோட்டுவாகளோ உடையவர்கள் என்றூ.

ரு. உடைய உன்திருவடிகளைக் கிட்டும்படி பாாத்தருள வேணுமென்றூ.

சு. அவன் அனைக்ஷணம் தாழ்க்கமுடியப்புகா நின்றே னென்றூ.

எ. அவ்வளவிலவன் வரக்கொள்ள, அயோக்கியனென் றகன்றூ.

அ. திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி யும்மோட்டை ஸம்ஶ்லேஷம் தாரகமென் றனவன்.

கூ. அப்படியல்ல இது நஞ்சென்ன, நஞ்சுதானே நமக்குத் தாரகமென்றூ.

க0. தம்மை இசைவித்துப் பரமபதத்தைக் கொடுக்கத்தொடங்கினு னென் றூர்.

கக. நிகமத்தில், கறறூர்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினூ.

சு-ம். திருவாய்மொழி—பரிவதில்.

ஈஶ்வரனிடத்தி லிப்படிப்பட்ட குணமிருப்பதை யறியாமல், ஆத் மாக்கள் நரகத்தையடைவத நியாயமென்று, ஈஶ்வரன் துராராத்யனன்று, எல்லாரு மாஶ்ரயித்து உஜ்ஜீவியுங்க ளென்றூர்.

க. ஆஶ்ரயிக்குமவனுக்கு த்ரவ்யநியதியில்லையென்றூ.

உ. அதிகாரிநியதியில்லை யென்றூ.

ங. தம்முடைய கரணத்ரயமும் பகவத்விஷயத்திலே ப்ரவணமானபடி யை அருளிச்செய்தாா.

ச. நித்யஸூரிகளைப்போலே அதுதானே யாத்ரையாயிற் றென்றூர்.

ரு. தன்னையே ப்ரயோஜனமாகப்பற்றினூக்கு, அவன்நிரதி சயபோக்ய னென்றூர்.

சு. இப்படி போக்யபூதனுனவனை விட்டு ப்ரயோஜனத்தைக்கொண் டகலு வதே! யென்று ப்ரயோஜனும் தரபரனை நிகாஹித்தாா.

எ. இவனையே ப்ரயோஜனமாகப் பற்றினூக்குக் காலக்ஷேப மின்னதென் றூர்.

அ. பராபதிவிரோதிகளையு மவனருனே போகருமெனருா.

க. இதுகூடுமோ! வெனறு ஶங்கையாக, வெறுமவனபடியையோ பாரப பது, அருகிருக்கிறுாபடியையும பாரககவேணடாவோ வெனருா.

க0. இவாகள எததனைகாலமகூடி விரோதிகளைபபோககுவதெனன, க்ஷண காலததிலே யெனருா

கக. நிகமததில், இததிருவாய்மொழியை அபயசிக்கவே ஸமஸரிக்கவேண டாவெனருா

எ-ம். திருவாய்மொழி—பிறவி

ஸ்ராராதயனுன ஈஶவரனுடைய ஆராதனம ஸ௨ரூப மாயிருககு மெனறருளிச் செயதா॥

க. கேவலனை நிநதிததாா.

உ. அநநயபரயோஜநா திறததிலிருககுமபடியைச் சொனனுா.

ந. இவவிரணடுகோடியிலும் நீராரொனன, உன்னை அனுபவியாநிற்க விரோ திகழிநதவன, நானெனருா.

ச. எனனை இவவளவாகப புகிரநிறுததினவனை, எனன ஹேதுவாலே விடு வதெனருா.

ரு. திருவாயபபாடியில் பெண்கள கிருஷ்ணனை விடுமனறனரே! நானவ னை விடுவதெனருா

சா. அவனதான விடிலோவெனன, அவன்போக்கை யிசையேனெனருா.

எ. நீதாம் விடிலோ வெனன, அவனெனனைப போகவொட்டா னென் ருா.

அ. இநநாளவரைபோக விட்டிலரேவெனன, நபபினனைப பிராட்டிபுருஷ காரமாகபபறறின வெனனை, இனியவனுலும விடவொணணுதெ னருா.

க. இப்ரஸங்கந்தானெனன, ஒரு நீராகக்கலந்ததனை யொருவராலும பிரிக கவொண்ணு தெனருா.

க0. அவனுடைய கல்யாணகுணஙகளை ஸாவகாலமு மநுபவிதது ஶரய முடையே னல்லேனென்ருா.

கக. நிகமததில, இததிருவாயமொழியை அபயசித்தாாக்குப பலஞ்சொல லித தலைக்கட்டினுா

அ - ம் திருவாய்மொழி—ஒடும்.

ஸுகரூபமான ஆஶ்ரயணமுடைய ஈஶ்வரன், கரண த்ரயத்தாலும் கிட்டமாட்டாத சேதநரிடத்தில, ஆர்ஜவகுணத்தோடே ஆஶ்ரித ஸம்ஶ்லேஷம் பண்ணிக்கொண்டிருப்பரென்று அரு ளிச்செய்தார்.

க. நித்ய விபூதியிலுள்ளாரோடு செவ்வையனுய்ப் பரிமாறும்படியை அரு ளிச் செய்தார.

உ. லீலாவிபூதியிலுள்ளாருடன் செவ்வையனுய்ப் பரிமாறும் படியை அரு ளிச் செய்தார.

ந. இரண்டு விபூதியிலுள்ளாரக்கும் முகங்கொடுக்கைக் காகத்திருமலை யிலே நிற்கிறபடியை அருளிச்செய்தார.

ச. அவ்வாரஜவகுணம் தம்மளவிலே பலித்தபடியை யருளிச்செய்தார.

ரு. நானவன் குணங்களை விரும்புமாப்போல அவனு மென்தேஹத்தை விரும்பா நின்ருனென்ருர.

சு. என்னுடைய தேஹத்தினளவன்றி என்னுடைய வாத்மாவையும் கைக் கொண்டானென்ருர.

எ. அவ்வளவுமல்ல நித்யவிபூதியில் பண்ணுமாதரத்தை யென்பக்கலிலே பண்ணிஞனென்ருர.

அ. என்னைச் சுட்டி அவன்பிறந்த பிறவிகளுக்கு முடிவில்லை யென்ருர.

கூ. இப்படிப் பிறந்த பிறவிகள்தோறுந் தன்னை ஸுவாயத்தோடே வந்தவ தரித்தானெனருர.

க0. அவனுடைய ஆராஜவகுணத்தைப் பேசும்போது வேதமே பேசவேண்டு மென்ருர.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி ஸம்ஸாரிகளுக்கெப்போது மொக்கவநு சந்திக்கப்படு மென்ருர.

கூ - ம். திருவாய்மொழி—இவையும்.

ஆர்ஜவகுணநுஸந்தானம் பண்ணின தம்மிடத்தில், ஈஶ்வரன் ஸாத்மிக்க ஸாத்மிக்க, ஸர்வாவயவஸம்ச்லே ஷம்பண்ணின அநுபவர ஸத்தை யருளிச் செய்தார்.

க. என்னுடைய பாயந்தத்திலேவந்து நின்ருனென்ருர.

உ. அதுஸாத்மித்தவாறே அருகேநின்ருனென்ருர.

ங. தம்முடனேகூட நின்றானென்றார்
ச. ஒக்கலையிலே வந்திருந்தானென்றார்.
ரு. நெஞ்சிலேவந்து புகுந்தானென்றார்.
சு. தோளிலேவந்து இருந்தானென்றார்.
எ. நாவிலேவந்து புகுந்தானென்றார்.
அ கண்ணுள்ளே நின்றானென்றார்.
கூ. நெற்றியிலே நின்றானென்றார்.
க0. திருமுடியிலே நின்றானென்றார்.
கக. நிகமத்தில், ஆக இத்தால் தம்முடனே சாத்மிக்கும்படி க்ஷணக்கையாலே அவனை விஸ்ரஸாவஹித்தார், பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

க0-ம். திருவாய்மொழி—பொருமா.

ஸர்வேஶ்வரன பண்ணின ஸர்வாங்க ஸம்ஶ்லேஷத்துக்கு ஹேது வேதாகிலும் தம்மிடத்திலே யுண்டோவென்று விசாரித்து, ஒரு ஹேதுவு மில்லாமையாலே ஈஶ்வரனுடைய நிர்ஹேதுக உபகாரகத்வத்தையு மருளிச்செய்தார்.

க. மேல்பரக்க அருளிச்செய்யப் புகுகிறவர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்தார்.
உ. பரம்பக்திக்கும் பரிகணனைக்கு மொக்கமுகங் காட்டுமென்றார்.
ங. கண்டாயே அவன்ஸ்வரூப மிருந்தபடி நீயுமுன் ஸ்வரூபத்துக்குச் சேர நிற்கப் பாராயென்றார்.
ச. ஸ்வரூபாநுரூபமாக நெஞ்சுதொழுதவாறே நெஞ்சைக் கொண்டாடினார்.
ரு. கீழ் "எண்ணிலுமவரும்" என்றது பலத்தோடே வ்யாப்தமானபடியை நெஞ்சுக்கருளிச் செய்தார்.
சு. நாமிருவரும் இப்படியேநிற்கப்பெறில் நமக்கொரு அநர்த்தமும் வாராதென்றார்.
எ. கீழ்இவரஞ்சினபடியே விடிந்தபடிச் சொன்னார்.
அ. திருநாமஶ்ரவணத்தாலே தம்முடைய கரணங்களுக்குப் பிறந்த விக்ருதியைச் சொன்னார்
கூ. விக்ருதராகாதே மறந்தாலோவென்ன, மறக்கவொண்ணாதென்றார்.
க0. வருந்தியாகிலும் மறந்தாலோ வென்ன, என்ஹ்ருதயத்திலே இருக்கிறவனை மறக்கப்போமோ வென்றார்.
கக. நிகமத்தில், கற்றார்க்குப் பலஞ்சொன்னார்.

உ - ம் பத்து.

கைங்கர்யத்தில் களையறுக்கிறார்.

க-ம். திருவாய்மொழி—வாயுந்திரை.

பரத்வ ஸௌலப்ய ஸௌந்தர்யங்களை அநுபவித்து, அந்த வஸ்து பாஹ்ய ஸம்ச்லேஷயோகமாக வேண்டுமென்று ஆசைப்பட்டு, அது அகப்படாமையால் ஆர்த்திமிகுந்து, ஆழ்வார் நாமொருபிராட்டி அவஸ்தையை யடைந்து, அசேதநங்களையும் திர்யக்குகளையும் நம்மோடே சமதுக்கிகளாக வெண்ணித்தந் நிமித்தமாகப் ப்ரலாபித்ததை யருளிச்செய்தார்.

க. நாரையைக்குறித்து அநுசோகிக்கிறார.

உ. அன்றிலைக்குறித்து அநுசோகிக்கிறார்.

ந. கடலைக்குறித்து அநுசோகிக்கிறார.

ச. காற்றைகுறித்து அநுசோகிக்கிறார.

ரு. மேகத்தைக்குறித்து அநுசோகிக்கிறார.

சு. சந்திரனைக்குறித்து அநுசோகிக்கிறார.

எ. இருளைக்குறித்து அநுசோகிக்கிறார.

அ. கழியைக்குறித்து அநுசோகிக்கிறார.

கூ. விளக்கைக்குறித்து அநுசோகிக்கிறார.

கo. மிகவுந்தளாந்தவஸ்திலே அவன் வந்து முகங்காட்ட, இனியென்னை விடாதொழிய வேண்டும் என்கிறார.

கக. நிகமத்தில், இத்திருவாய் மொழிகற்றார்க்குப் பலத்தை சொல்லித்தலைக் கட்டினார.

உ-ம். திருவாய்மொழி—திண்ணன்.

இந்தஆர்த்தி போக்குகைக்கு ஈஶ்வரன் ஸாந்நித்யம்பண்ணி நிற்கையாலே, அந்த ஆர்த்தியெல்லாம்போய் ஸகல கல்யாணகுண ஸமர்த்திஹேதுவான பரத்வம், அவதாரத்தி லுண்டென்று பரோபதேசம் பண்ணினதை யருளிச்செய்தார்.

க. மேல்பரக்க வருளிச்செய்கிற இத்திருவாய்மொழியில் ஆதரத்தைச் சங்ரஹேண வருளிச்செய்தார.

௨. துக்கநிவர்த்தகனுகையாலும், சீலவானுகையாலும், ஸுகுமாரனுகையா
௩. லும், புண்டரீகாக்ஷனுகையாலும், ஆபத்ஸகனுகையாலும், அக
௪. டிதகடநாஸமர்த்தனுகையாலும், சிருஷ்டிஸ்திதிகளைப் பண்ணு
௬. கையாலும், ஸம்ஹாரமாகிற செயலைச் செய்கையாலும், ஈச்வரா
௭. பிமானிகளா யிருக்கிறவர்களுடைய ஸ்தோத்ராதிகளாலும், இப
௮. படி பஹுப்ரகாரங்களாலே அவனுடைய பரத்வத்தை அருளிச்
௯. ௧0. செய்கிறார்.

௧௧. நிகமத்தில், இது கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டுகிறார்

௩-ம். திருவாய்மொழி—ஊனில்.

ஈச்வரன் ஸாந்நித்யம் பண்ணுகையில் ப்ரகாசமாகப் பரத்வத்தையும் அருளிச்செய்து, இந்த பகவதநுபவத்துக்கு ஸம்ஸாரிகள் ஸஹாயரன்றென்று, இதற்கு ஸஹாயபூதரான நித்ய ஸூரிகளோடே எப்போது கூடப்போகிறேனென்கிற ப்ரார்த்தனையை யருளிச்செய்தார்.

௧. திருவுள்ளத்தைக்கொண்டாடினார்.

௨. அத்தையும் இசைவித்த ஸர்வேச்வரனைக் கொண்டாடினார்.

௩. தம்நெஞ்சிற் பட்டதொரு உபகாரத்தைச் சொன்னார்.

௪. அதற்குப் ப்ரத்யுபகாரமாகவாத்ம ஸமர்ப்பணம் பண்ணி அது தனக்கனுசயித்தார்.

௫. எனக்கு ப்ரதமசுக்ருதமும் நீயேயானபின்பு உன் திருவடிகளைக் கிட்டினேனேயன்றோ வென்றார்.

௬. இன்றோ கிட்டிற்று தேவரெனக்கு விசேஷகடாக்ஷம் பண்ணினவன்றே பெற்றேனே யல்லேனோ வென்றார்.

௭. அவனுடைய போக்யதையை அநுஸந்தித்து உன்னைப்பிரியில் தரியேனென்றார்.

௮. இப்படி நிரதிசயபோக்யனானவனை யெளியதொரு விரகாலே லபிக்கப்பெற்றேனென்றாதல், அன்றியே அநேககாலங்கூடிப்பண்ணி லபிக்கக்கடவ தப்பப்பலத்தை அவனைப் பின்சென்று எளிதாக லபித்தேனென்னுதல்.

௯. என்னுடைய சகல க்லேசங்களும் போம்படி அநுபவித்துக் களித்தேனென்றார்.

க0. இப்படி இவனை அநுபவித்துக்களிப்பார் திரளிலே போய்ப் புகப்பெறு வதெப்போ தென்றார்.

கக. நிகமத்தில், இத் திருவாய்மொழியைச் சாபிப்பிராயமாக வப்யஸித்து நாலுநாளும் நால்வரிருவர் உள்ளார் கூடியிருந்து அநுபவிக்கப் பாருங்கோளென்றார்.

சு-ம். திருவாய்மொழி—ஆடியாடி.

பிரார்த்தனை ஸித்தியாதபடியினாலே, இந்த ஆழ்வார் ஒருபிராட்டி அவஸ்தையை யடைந்து மோஹித்திருக்கையில், அந்த நாயகியினுடைய அவஸ்தையைத் தாய்சொல்லுகிறதாக வருளிச்செய்கிறார்.

க. ஆஶ்ரிதா ஆபத்தேச் செப்பேடாக உதவும் ஸ்வபாவனானவன் இவருடைய ஆபத்துக்கு வந்து தவுகிறில னென்றாள்.

உ. "விரோதியுண்டே" என்று நினைவாகவாணனுடைய பாஹுவனத்திலும வலிதோ இவள் விரோதி யென்றாள்.

ங. இப்படிச்செய்ய நினைத்த நீர முன்பச்செயலை யென்றிய செய்தீரென்றாள்.

ச. அது பொறுக்கமாட்டாமல் அது தன்னையே உபகாரமாகச் சொல்லாநின்றா ளென்றாள்.

ரு. அவ்வளவிலும் வாராமையாலே நிர்தய னென்றாள் திருத்தாயார்.

சா. அது பொறுக்கமாட்டாமல் கெடுவாய் ஆகரத்தில் தகவு மறுக்குமோ அது நங்குறை காணென்கிறாளென்கிறாள்.

எ. அவன குணஹானிதன்னையே குணமாகக் கொள்ளும்படி இவளை வஞ்சித்தா னென்றாள்,

அ. உம்மை அபாஶ்ரயமாகப் பற்றின விவள்படும் பாடேயிது வென்றாள்.

கூ. இவள் பேற்றில் நீர் செய்தருள நினைத்திருக்கிறதென் என்றாள்.

க0. சேஷித்தது நோக் கொன்றுமே யாயிற்று, இதொன்றையும் நோக்கிக் கொள்ளீரென்றாள்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸித்தார்க்குப் பலஞ் சொல்லித்தலைக் கட்டினார்.

ரு-ம். திருவாய்மொழி—அந்தாமத்து.

இவ்வார்த்தி போகக்குகைக்கு ஈஶ்வரன் ஸம்ச்லேஷிக்கையா
லே, அந்தத்தாபம் நிவர்த்தமாய், ஈஶ்வரனுடைய திவ்ய
பூஷண திவ்யாயுத திவ்யாவயவ ஸௌந்தர்யத்தை
யும் நித்ய ஸூரிசேவையையும் அநுஸந்தித்த
தை யருளிச்செய்கிறார்.

க. இவராசைப்பட்டபடியே அடியார்கள் குழாங்களோடேவந்து கலந்த படி சொன்னார்.

உ. தம்மோடே கலந்தபின்பு அவன் திருமேனியும் திவ்யா வயவங்களும் நிறம்பெற்றதென்றார்.

௩. தம்மோடேகலந்து தனசத்தைப்பெறுதல் இல்லையாகில் விலலையாம்படியாய்வந்து கலந்தானென்றார்.

௪. கீழ்இவனுக்கு த்ருஷ்டாந்தமாகச் சொன்னவை நேரில்லாமையாலே அவற்றைச் சிக்ஷித்துச்சோத தநுபவித்தார்.

ரு. அதுதானும் உபமானமாக நேரில்லாமையாலே அவற்றைக் கழித்து உபமேயந்தன்னையே அநுபவித்தார்.

௬. இப்படி விலக்ஷணனானவன் முக்தன் தன்னை அநுபவிக்குமாறுபோலே தானென்னை அநுபவித்தா னென்றார்.

௭. தமக்காக ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணினானென்றார்.

௮ அவனை யென்னாற்பேச முடியாதென்றார்.

௯. துணைதேடிக்கொண்டு திரியவும் பேசுகையிலே உபக்ரமித்தார்.

க0. "இப்பட்டிகளா லென்னோடேகலந்த விமமஹாகுணமொன்றையும் பேச" என்றால சாலமிறுக்குடைத்தென்றார்.

கக. நிகமத்தில், இது கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

௬-ம். திருவாய்மொழி—வைகுந்தா.

ஸாந்நித்யம் பண்ணின எம்பெருமானிடத்திலே ஆழ்வார்
அதிசங்கையுஞ் செய்ய, அதைப்பார்த்து ஆழ்வார் தம்
மை விட்டுப் பிரிவரோ வென்று ஈஶ்வரனதிசங்
கை பண்ண, ஆழ்வார் உம்மை ஒருக்காலும்
விடத்தக்கதில்லை யென்ற பின்பு, ஈஶ்வ
ரனுக் கதிசங்கை நீங்கினதை யரு
ளிச்செய்கிறார்

க. எம்பெருமான் "இவர் நம்மை விட்டுச் செய்வதென்" என்கிற அதிசங்கையைப் போக்கினார்.

உ. அது போனபின்பு அவனுக்குப்பிறந்த புதுக்கணிப்பைச் சொன்னூர்.

ந. தமக்கவன் பண்ணின வௌதாயத்தை அநுசந்தித்து வித்தரானூர்.

ச. அவன் உமக்குப்பண்ணின வௌதாயமேதென்ன, இதர விஷய வைராக்ய மென்றூர்.

ரு. இதரவிஷய வைராக்ய பூர்வகமாக ஆத்மாந்த தாஸ்யத்திலே அதிக ரித்த நான் இனியொருநாளும் விடேனென்றூர்.

சு. ஆஸ்ரிதருக்கு உதவு வாயானபின்பு எனக்கொரு குறையுண்டோ வென்றூர்.

எ. என்னுடைய சம்பந்தி சம்பந்திகளுக்கு மொருகுறையில்லையென்றூர்.

அ. இதற்குத்தா மநுஷ்டித்த உபாயமின்ன தென்றூர்.

கூ. "இவரகவாயறிய வேண்டும்" என்றேரடி பேரநிறக, இனிப்போக வொண்ணுதென்றூர்.

கo. நாம் போகாதொழிகிறேம் நீர் தாம் போகாதொழிய வேண்டுமே யென்னக், காலத்ரயத்திலும் ஸாவவித பந்துவுமான உன்னை விடச்சம் பாவனையில்லை யென்றூர்.

கக. நிகமத்தில், இது கறூர்க்குப் பலஞ் சொல்லித் தலைக்கட்டினூர்.

எ-ம் திருவாய்மொழி—கேசவன்.

ஈஸ்வரனுக்குத் தம்முடைய விஷயத்தி லுண்டான ப்ரீதி யானது, தன்னுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளிலும் உண் டானதுகண்டு மிகவும் ப்ரீதராய், த்வாதச நாமப் ரதிபாத்யனை ஸர்வேஸ்வர னுடைய ஸம்பந் தத்தாலே, தம்முடைய ஏழேழு தலை முறையோரும் க்ருதார்த்தரானூர்க ளென்கிறூர்.

க. தம்மோடு சம்பந்தி சம்பந்திகளுமெல்லாரும் தம்மைப்போலே விஷ யீக்ருத ரானூரகளென்றூர்.

உ. அதற்கடி நாராயணனுகையாலே என்றும் அந்நாராயண சப்தார்த்தத் தையு மருளிச்செய்தார்.

ந. இப்படி விஷயீகரிக்கைக்கு ஹேதுசொன்னூர்.

ச. ஸாவகாலமும் தன்னையே அநுபவிக்கும்படி பண்ணினுனென்றூர்.

ரு. இப்படி தம்மை அநுபவிப்பித்ததாலே அவன்வடிவில் புகரைச்சொன் னூர்.

சு. இப்படி யென்னை விஷயீகரிக்கைக்கு அடியிரஹேதுககருபையென்றார்.

எ. தன்னையே ஸர்வகாலமும் அநுபவிக்கும்படியான நெஞ்சைத் தந்தா னென்றார்.

அ. தந்தவளவின்றி விரோதியான நெஞ்சையும் போக்கினனென்றார்.

கூ. தன்னுடைய கல்யாணகுணங்களையே நான அநுபவிக்கும்படி என ஹ்ருதயத்திலே புகுந்தா னென்றார்.

க0. அநுபவவிரோதியான இந்திரியங்களையும் தனவழி யாக்கிக்கொண்டா னென்றார்.

கக. ஏவம்பூதனானவன என்னையல்ல தறியானென்றார்.

கஉ. என்னைப்போலே காணபாரக்குக் காணலாமதொழிய ஸ்வயத்னத்தா ல அறியப்போகா தென்றார்

கங. நிகமத்தில், பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

அ-ம். திருவாய்மொழி—அணை.

ஈச்வரன் தன ஸம்பந்தி ஸம்பந்திகளிலும வ்யாமோஹம பண்ணினதுகண்டு, ஸம்ஸாரிகளையும தன்னுடைய ஸம பந்திகளாகப் பண்ணவேணடுமென்று, அவர்க ளுக்கு மோக்ஷபரத்தவத்தை உபதேசித் தருளுகிறார்

க. இத்திருவாய்மொழியில் பரக்கச்சொல்லுகிற “வாத்தத்தைச் சங்க்ர ஹேணவருளிச் செய்யாநின்று கொண்டு ஸம்ஸாரமாகிற விக் கட்டைக் கடக்கவேணும்” என்றிருப்பாரக்குக் கடத்திக் கொடுக்கு மென்றார்.

உ. அவன்வேண்டுமோ அவனோடேடைச் சம்பந்தமே கடத்து மென்றார்.

ங. அவனுடைய வதிமாநுஷ சேஷ்டிதங்கள் பரத்யக்ஷிக்கலா மென்றார்.

ச. “அந்தமில் பேரின்பத்தைப் பெறவேண்டும” என்றிருப்பார அவனை யாச்ரயியுங்கோளென்றார்.

ரு. கீழ் “இணைவனாமெப்பொருட்கும்” என்றத்தை விவரித்தார்.

சு. இவ்வுத்கரஷ மெல்லா மவனுக்குண்டோ வென்ன நாமாராய வேண் டாதபடி அர்ஜுநன பண்டே தெரிந்து அறுதியிட்டா னென்றார்.

எ. ஒருவன் துவாத்தனங் கொண்டறியவேண்டுமோ அவனுக்கிஷ்ட ஸர்வ சேஷ்டா விஷயமாயன்றோ ஜகத்திருக்கிற தென்றார்

அ. வ்யாப்திதொடக்கமான அவனுடைய அபதானங்கள் ஒருவராலும் பரிச்சேதிக்கமுடியாதென்றார.

கூ. அவனுடைய வ்யாப்தியை இசையாதார ஹிரண்யன் பட்டது படுவரென்றார.

க0. ஏவம்பூதனானவனை நான்கண்டநுபவிக்கப் பெற்றேனென்றார.

கக. நிகமத்தில், இதுகற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார.

கூ-ம். திருவாய்மொழி—எம்மா.

ஈச்வரன் ஆழ்வாருக்கும் அவருடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கும் மோக்ஷம் ப்ரஸாதிக்கிறதற்கு உத்யோகமாயிருக்கையில், என்ப்ரீதிக்காக மோக்ஷம் ப்ரஸாதிக்கவேண்டாம், உம்முடைய ப்ரீதியினாலே மோக்ஷம் ப்ரஸாதிக்க வேண்டுமென்று கைங்கர்ய நிஷ்கர்ஷம் பண்ணினதை யருளிச்செய்கிறார்.

க. காயிகமானபேற்றை அபேக்ஷித்தார.

உ. மாநஸமானபேற்றை அபேக்ஷித்தார்.

ந. வாசிகமானபேற்றை அபேக்ஷித்தார்.

ச. ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யத்தை நிஷ்கரித்தார்.

ரு. நீராராய் இப்பேற்றை அபேக்ஷித்தீரென்ன, நானாராயிடுக உன்னை அநுபவித்து மகிழும்படி பண்ணியருளவேண்டு மென்றார.

சு. த்ரிவித கரணங்களாலு முன்னை ப்ரீதி புரஸ்ஸரமாக அநுபவிக்கும்படிபண்ணியருள வேணுமென்றார.

எ. அப்படிச் சடக்கெனச் செய்யாமையாலே இன்னாதானார.

அ. ஸவரூபாநுரூபமாக க்ஷணகாலமென்னோடே அநுபவிக்கப் பெறில் பின்புள்ளகாலமெல்லாம் வேண்டேனென்றார்.

கூ. உன்னை அநுபவிக்க இட்டுப்பிறந்து வைத்து அது கிடையாதபடி நானே யநர்த்தத்தைச் சூழ்ந்துக் கொண்டேனென்றார்.

க0. எனக் கொருநாளும், க்யானவிசேஷத்தைப் பண்ணித்தந்தோமிறே "என்று என்னை யென்கையில காட்டித்தாரா தொழியவேணு" மென்றார.

கக. நிகமத்தில், இது கற்றார்க்குப் பலஞ்சொல்லித்தலைக் கட்டினார.

௧௦-ம். திருவாய்மொழி—கிளரொளி.

முன்னிஷ்கர்ஷித்த கைங்கர்யஸித்திக்குத் திருமாலிருஞ்சோலைத் திருமலையை ஆஶ்ரயிக்க வேண்டுமென் றருளிச்செய்கிறார்.

௧. கடுக்கத்திருமலையாழ்வாரை யாஶ்ரயியுங்களென்றார்.

௨. திருமலையோடு சம்பந்தித்த ஸ்ரீபதியையாஶ்ரயிக்கச்சொன்னார்.

௩. அதந்தோடுசேர்ந்த அயன்மலை யமையுமென்றார்.

௪. "திரிதந்தாகிலும்" என்கிறபடியே திரியவும் திருமலையை யாஶ்ரயிக்கச் சொன்னார்.

௫. அதந்தோடுசேர்ந்த புறமலையை யாஶ்ரயியுங்களென்றார்.

௬. திருமலைக்குப்போம் மார்க்கசிந்தை பண்ணவமையு மென்றார்.

௭. அவ்வழியோடுசேர்ந்த திருமலையை யாஶ்ரயிக்கச்சொன்னார்.

௮. நித்யஸூரிகளுக்குங்கூட ப்ராப்யமாகையாலே திருமலையே பரமப்ராப்யமென்றார்.

௯. "திருமலையைத் தொழுக்கடவோம்" என்கிற துணிவே வேண்டுவதென்றார்.

௧௦. எல்லாப்படியாலும் திருமலையாழ்வாரை யாஶ்ரயிக்கையே புருஷார்த்தமென்று தலைக்கட்டினார்.

௧௧. நிகமத்தில், இது கற்றார்க்குப் பலமருளிச்செய்தார்.

௩-ம் பத்து

விரோதிகழிந்த கைங்கர்யவேஷம் பாகவதஶேஷத்வ பர்யந்தமான பகவத்கைங்கர்ய மென்றார்.

௧-ம். திருவாய்மொழி—முடிச்சோதி.

திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளியிருக்கிற அழகருடைய திவ்யமங்கள விக்ரஹதிவ்யாபரண திவ்ய ஸௌந்தர்யங்களை அநுபவித்ததை யருளிச்செய்கிறார்

௧. அழகருடைய திருவணி கலங்களுக்கும் திருமேனிக்கு முண்டான ஸம்யுக்தத்வத்தை அநுஸந்தித்தார்.

௨. அதற்கு நாட்டார் த்ருஷ்டாந்த மிட்டுச் சொல்லு மவையெல்லாம் உபக்கவத்யத்தை விளக்குமென்றார்.

௩. நாட்டாரை விட்டு "மயர்வற மதிநல மருளப்பெற்ற நீர் சொல்லுமென்ன" என்ற சொல்லிமுடியா தென்றார்.

௪. இப்படி விலக்ஷணனாய் நிரதிசயபோக்யனா யிருக்கிற உன்னை நாட்டார் இழந்துபோம்படி அவர்களை மதிவிப் ப்ரமங்களைப் பண்ணினா யென்றார்.

௫. நாட்டாரில் வ்யாவ்ருத்தரல்லீரோ உம்மால் பேச வொண்ணாமைக்குக் குறை யென்னென்ன, என்னை வ்யாவ்ருத்தனாக்கின வோபாதி உன்னைச் சாவதியாக்கிற் றில்லையே யென்றார்.

௬. வேதங்களும் நீருங் கூடப்பேசினாலோ வென்ன, அவையும் உன்னைப் பரிச்சேதிக்க மாட்டாதென்றார்.

௭. வேதங்கள் கிடக்கிடும் வைதிக புருஷர்களென்று சிலர் உண்டே அவர்களைத்தக் குறை யென்னென்ன, அதுவும் உனக்கு நிறக்கேடென்றார்.

௮. காம பாவனையின்றிக்கே ப்ரஹ்ம பாவனையையா யிருப்பானொரு ப்ரம்ஹாவை யுத ப்ரேக்ஷித்து அவனைத்திலும் தேவர்க்கு அவத்யமென்றார்.

௯. மேன்மை பேசவொண்ணா தென்கைக்கு நீர்மையோதான் பேசலாயிருக்கிற தென்றார்.

௧௦. உன்னாலே ஸ்ருஷ்டனான ப்ரஹ்மாவாலே ஸ்ருஜ்யரானவிவர்கள்உன்னை யேத்துகையாவது உனக் கவத்யமன்றோ வென்றார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி தானே ப்ராப்யத்தைத் தருமென்றார்.

௨-ம். திருவாய்மொழி—முன்னீர்.

அழகருடைய திவ்ய ஸௌந்தர்யத்தைப் பரிச்சேதித்து அநுபவிக்கைக்கு அசக்தராய், அந்த அசக்திக்கு ஹேது தம்முடைய கரணஸங்கோசமென்று ஆழ்வார் வ்யாமோஹப்பட்டுநிற்க, ஸர்வேச்வரன் (யதோவாசோ நிவர்த்தந்தே) என்று நித்யஸூரிகளுக்கும் அபரிச்சேத்யமான தென் ஸ்வபாவம், இதற்கு ஹேதுகரண ஸ்ங்கோசமென்று வ்யாமோஹப்படவேண்டாம். திருமலையிலே ஸர்வஸுலபனாய் நிற்கிறவென்னை யனுபவியு மென்று வ்யாமோஹந் தீர்த்தத்தை யருளிச்செய்கிறார்.

௧. நீ தந்தகரணங்களைக்கொண்டு அநார்த்தத்தை விளைத்துக்கொண்ட நான் உன்னைவந்து கிட்டுகை என்றொன் றுண்டோ வென்றார்.

௨. இப்படிச் சூழ்வித்துக்கொண்ட பாபங்களைப் போக்கித் தேவரீரை நானெப்போது வந்து கிட்டக் கடவேனென்றார்.

௩. இதுக்கு முன்பு என்னைப் பெறுகைக்குத் தந்த கரணங்களைக்கொண்டு நான் சூழ்ந்துகொண்ட பாபங்களை "நான் போக்கிவர" என்றால் அது செய்யப்போகாது, இனி நான் அறியாததாய் நீயறிந்திருப்பதொரு உபாயத்தை அருளிச்செய்ய வேண்டுமென்றார்.

௪. உன்னையொழிந்த த்வத்வ்யதிரிக்தங்களிலே என்னுடைய தாழ்ச்சியைத் தவிர்த்து, உன் திருவடிகளிலே வாழ்ச்சியே யாம்படி பண்ணவேணுமென்றார்.

௫. அப்படி செய்யப் பார்த்திலையாகில் உன் போக்யதையை எனக்கென் றறிவியா யென்றார்.

௬. இல்லாதவன் றுண்டாக்கின வருமையுண்டோ, உண்டாக்கின விஷயக் கொரு குறுதானம் பண்ணவென்றார்

௭. நம்படி அறியாதே நாமவனை வெறுக்கிறதென் னென்றார்.

௮. நீர்க்கழியச்சாத நாநுஷ்டானம் பண்ணினேனோ! நான் இங்ஙனம் கூப்பிடுகைக் கென்றார்.

௯. அந்தனை விக்ரமாபதானத்துக்குத் தப்பின நான் இனி யெங்கே இடப்போகிறே னென்றார்.

௧௦. அவ்வளவிலே வந்து அவன் முகங்காட்டித் தரிப்பிக்கத் தரித்தார்.

௧௧. நிகமத்தில், பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்

௩-ம். திருவாய்மொழி—ஒழிவில்.

திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஸகலவித கைங்கர்ய ப்ரார்த்தனையை யருளிச்செய்கிறார்.

௧. திருவேங்கட முடையான் திருவடிகளிலே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் எப்போப்பட்ட வடிமைகளுஞ் செய்யவேணுமென்று மனோரதித்தார்.

௨. அதொரு தேசவிசேஷத்திலே போனால் பெறுமதன்றோ வென்ன; அங்குள்ளாரும் இங்கேவந்து அடிமை செய்கிற தேசமன்றோ நமக்கிங்கே பெறத்தட்டில்லை யென்றார்.

௩. நிறைவாளர்க்குத் தன்னைக்கொடுத்தவன் குறைவாளர்க்குத் தன்னைத் தாரச்சொல்ல வேணுமோ வென்றார்.

௪. அவர்களுக்குத் தன்னைக் கொடுத்தானென்றதோர் ஏற்றமோ எனக்குங் கூடத் தன்னைத் தந்தவனுக்கென்றார்

௫. எனக்குத் தன்னைத் தந்தானென்றதோர் ஏற்றமோ என்னிலும் தண்ணியரைத் தேடிக் கிடையாமே நிற்கிறவனுக் கென்றார்.

௬. அவ் வடிமையிலே யிழிய விரோதிகளும் தன்னடையே போமென்றூர.

௭. இக் கைங்காயத்தை திருமலையாழ்வாா தாமே நமக்குத் தருவரென்றூா.

௮. அத்திருமலையாழ்வாா தாமே நம் விரோதிகளைப் போக்கித் தம்மையும் தருவரென்றூா.

௯. திருமலை யாழ்வாா எல்லாம் வேண்டுமோ நமக்கு ப்ராப்யத்தைத் தருகைக்கு, அவரோட்டை சம்பந்தமுடையாா அமையுமென்றூா.

௧௦. மோக்ஷிக்குத் தேஶ்யமாகையாலே மோக்ஷபூதராலு மெல்லாரும் திருமலை யாழ்வாரை ஆஶ்ரயியுங்க ளென்றூா.

௧௧. நிகமத்தில், பலஞ்சொல்லித் தலைக்கட்டினாா.

௪-ம் திருவாய்மொழி—புகழும்.

ஸகலவித கைங்கர்ய உத்யோகத்துக்கு அநுகுணமாக ஸர்வேஶ்வரன் ஸர்வாத்ம பாவத்தைக் காட்ட, அங்கே ஸர்வவித கைங்கர்யத்தையும் பண்ணு கைக்கிச்சித்து, அதற்கு அசக்தராய், ஸர்வேஶ்வரன் பண்ணினமாத்திரமே போது மென்கிற வார்த்தையாலே வாசிககைங்கர்யம் பண்ணினதை யருளிச்செய்கிறூர்.

௧. அவனுடைய குணங்களையும் விபூதிகாரணமான பூதபஞ்சகங்களையும் சேரப்பிடித்து இத்திருவாய் மொழியிலே மேல்பரக்கச் சொல்லுகிற வார்த்தத்தைச் சங்ரஹேண அருளிச்செய்கிறூா.

௨. கீழ்சொன்ன பூதபஞ்சகங்களினுடைய காாயங்களை க்ரமத்திலே பேசுகிறூா.

௩. ஜகத்சரீரனாய் நினறதோடு அசாதாரண விக்ரஹயுக்தனாய் நின்றதோடு வாசியற் றிருக்கையாலே ஜகதாகாரனாய் நின்ற நிலையோடே அஸாதாரண விக்ரஹத்தைச் சோத்தநுபவிக்கிறூா.

௪. உஜ்வலமான மாணிக்யாதி பதாாத்தங்களை விபூதியாக உடையவனென்றூா.

௫. ரஸவத் பதாாத்தங்களை விபூதியாக உடையனு யிருக்கிறபடியை அருளிச் செய்கிறூா.

௬. வேதம் துடக்கமான இயலும் இசையுமான ஶப்தராசியை விபூதியாக உடையனென்கிறூா.

௭. ஐஶ்வாயாதி புருஷாாத்தங்களை விபூதியாக உடையனென்கிறூர்.

௮. ஜகத்தில் ப்ரதானரான ப்ரம்ஹருத்திராதிகளை விபூதியாக உடையனென்கிறூா.

௯. அவனுடைய விபூதி விஸ்தாரங்கள் தனித்தனியே பேசமுடியாமையாலே காரியகாரண ரூபமான சேதநா சேதநங்க ளவற்றுக்கு விபூதி என்று ப்ரயோஜகத்திலே சொல்லலா மித்தனை என்கிறார்.

௧௦. இவற்றுக்கு மந்தராத்மாவாய் வ்யாபித்து நின்றால் தத்கத தோஷை ரஸம்ஸ்ப்ருஷ்ட னென்கிறார்.

௧௧. நிகமத்தில், இது கற்றவர்கள் நித்திய கைங்கர்யத்தைப் பெற்று அயர்வறு மமரர்களாலே விரும்பப்படுவர்க ளென்கிறார்.

௫-ம் திருவாய்மொழி—மொய்ம்மாம்.

பகவத்கைங்கர்யத்தில் ஆதரமுடைய ஆழ்வார், பகவத்கைங்கர்யம் பண்ணுகிறபேர்களைக் கொண்டாடினதும், அல்லாதபேரை நிந்தித்ததும், அருளிச்செய்கிறார்॥

௧. ஆஸ்ரிதனிட்ட பட்டமடுவின் கரையிலே கலங்காப் பெருநகரில் நின்று மனைகுலையத் தலைகுலைய வந்துவிழுந்த நீர்மையை அநுஸந்தித்தால் விக்ருதராகாதார வஸ்துக்க ளென்கிறார்.

௨. ஸ்ரீ கஜேந்திராழ்வானுக் குதவினது சூரிகளுக்குதவிற் றென்னலாம்படியன்றோ "தங்களுக் கிடருண்டு" என்றறியாத சம்சாரிகள் விரோதியைப் போக்கும் நீர்மையென்று அநுசந்தித்தால் அவிக்ருதரா யிருப்பார், மஹா பாப மநுபவிக்கப் பிறக்கிறவர்க ளென்கிறார்.

௩. உபகார மறியாத பசுக்களுக்கும், தத்பராயர்க்கும் வந்தவாபத்தை நீக்கின மஹா குணத்தை யநுசந்தித்து அவிக்ருதரா யிருக்குமவர்கள் நித்திய சம்சாரிகளாய்ப் போவர்க ளென்கிறார்.

௪. நப்பின்னைப் பிராட்டிக்காக வெருத்தேழடர்த்து அவளோடே சம்ஸ்லேஷித்த ப்ரண்யித்வ குணத்தை அநுசந்தித் தீடுபடாதவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள் நடுவே என்ன ப்ரயோஜனத்துக்காகப் பிறந்தார்க ளென்கிறார்.

௫. ஆஸ்ரித விரோதி நிரசநார்த்தமாக அசாதாரண திவ்யரூப விசிஷ்டனாய்க் கொண்டு திருவவதாரம் பண்ணின குணத்தை அநுசந்தித்தால், விக்ருதராகாதார் அவஸ்துக்க ளென்கிறார்.

௬. ஈஸ்வரபோக்யதையை அநுசந்தித்தால் விக்ருதரானவர்களாகில் அவர்கள் எல்லா அறிவின்பலமும் கைவந்தாரென்கிறார்.

௭. ஆஸ்ரித பக்ஷபாதமாகிற மஹாகுணத்திலீடுபடாதே சரீரபோஷணபரராய்த் திரிகிறவர்கள் வைஷ்ணவர்களுக் கெதுக்குறுப்பாய்ப் பிறந்தார்களென்கிறார்.

௯. திருவேங்கடமுடையானுடைய நீர்மைக் கீடுபடுவாரை நித்திய ஸூரிகள் அன்றோ கொண்டாடுவாரகளெனகிறார.

௯. கைவல்லிய புருஷார்த்தனை நிந்தித்துப, பகவதகுணங்களை அநுசந்தித்து விக்ருதராய் ஆடுவது பாடுவதாருங்கோள், இதுவேகாத்தவ்யம் என்கிறார.

௧0. அநந்ய ப்ரயோஜனராய்க் கொண்டு அவன்குணங்களை யநுசந்தித்து விக்ருதராகுங்கோள் உங்களுக்கிதுவே புருஷாரததமென்கிறார.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் பகவத்குணாநு சந்தாநம் பண்ணினால் அவிக்ருதராயிருக்கைக்கடியான மஹாபாபத்தை யிது தானே நிஸ்ஸேஷமாக போக்குமென்றார.

சு-ம். திருவாய்மொழி—செய்யதாமரை.

கைங்கர்யத்துக்கு பரவ்யூஹவிபவாந்தர்யாமிகளைக் காட்டில், அர்ச்சாவதாரமே சுலபவிஷயத்வ மென்றதை யருளிச்செய்கிறார்.

௧. ஜகத்காரணத்வ புண்டரீகாக்ஷத்வாதி குணங்களையுடையவனுர் ஸ்ரய ணீயன், அவனை ஆஸ்ரயியுங்களென்கிறார.

௨. அப்படிப்பட்டவன்தானே உங்களோடு சஜாதியனாய்ச் சக்ரவர்த்தித் திருமகனாய்வந் தவதரித்தான், அங்கே ஆஸ்ரயியுங்க ளென்கிறார்.

௩. கீழ்ச்சொன்ன ராமாவதாரம் பரத்வமென்னும்படியான கிருஷ்ணாவதாரத்திலே ஆஸ்ரயியுங்க ளென்கிறார.

௪. பிரம்ஹருத்திராதிகளுககும் தடையினறிப் புக்காஸ்ரயிக்கலாயிருக்கிற சீலவத்தையைப் பேசுகிறார.

௫. வாத்சல்லியத்தாலே யெபபோதும் ஐஸ்வர்யாதிகளோடுவந் தவதரிக்குமென்கிறார.

௬. நிரதிசய போக்கியனான நரசிம்ஹத்தை யொழிய வேறொருவனாத தாரகாதிகளாக உடையேனல்லேன் காலதத்வமுள்ளதனையு மென் கிறார.

௭. அவனை ஆஸ்ரயுங்கோள் உங்களுடைய ஸர்வதுக்கங்களும் போம்படி யென்கிறார.

௮. ஸம்சாரிகளுக்கும் ருசிபிறக்கைக்காக நான் சக்ரவாத்தித் திருமகனை அல்லது ஆபத்தனமாகப்பற்றி யிரேனென்று ஸ்வசித்தாந்தத்தை அருளிச்செய்கிறார.

௯. அவதார திருமேனியையே அப்ராக்ருததிவ்ய ஸம்ஸ்தானத்தோடொக்க விரும்பும் அர்ச்சாவதாரத்தை ஆஸ்ரயியுங்கோளென்கிறார்.

௧0. தனதுறையான கிருஷ்ணாவதாரததிலேபோய நான கணணுலேகனை டனுபவிககப பெறுவதெனறோவெனனுமநவாபதியோடே தலைக கட்டுகிறார்.

௧௧. நிகமததில், இதை அபயியசிககவே பகவதபரேம முணடாம இததை அபயியசியுஙக ளெனகிறார்.

எ - ம். திருவாய்மொழி—பயிலும்

பகவத கைஙகாயம பணணுகிற போகள நமககு ஸவாமி களெனறு பாகவத சேஷதவமருளிச செயகிறா॥

௧. வடிவழகிலும குணஙகளிலும தோறறிருககும ஸ்ரீ வைஷணவாகள எனககு ஸவாமிகள எனறு இததிருவாயமொழியின ஆநநததை ஸஙகிரஹேண அருளிசசெயகிறார்.

௨. அவனுடைய வவயவ சோபைககுத தோறறிருககுமவாகள எனககு நாதரெனகிறார்.

௩. தோளும தோளமாலையுமான வழகிலே தோறறிருககு மவாகளுக்கு சேஷபூதரானவாக ளெனக்கு ஸவாமிகளெனகிறார்.

௪. அவனுடைய வாபரண சோபையிலே தோறறிருககும ஸ்ரீ வைஷணவா களுககு சேஷபூதரானவாக ளெனக்கு ஸவாமிக ளெனகிறார்.

௫. பரயோசநாநதர பராககு மபேக்ஷித ஸமவிதானம பணணுமவனெ ௌள தாாயததிலே தோறறவாகள ஸவபாவததுககுத தோறறவாக ளெனககு ஸவாமிகளெனகிறா

௬. அவன சவுநதாயாதிகளைத திரள வநுபவிககுமவாகள எனககு ரக்ஷக ரெனகிறார்.

எ. ஆஸரித விஷயததில அவன் பணணும மஹோபகாரஙகளிலே விதத ரானவாகளுககுத தோறறிருககுமவாகள கிடீரெனககு எறறைக கும ஸவாமிக ளெனகிறார்.

௮. அவனுடைய ஸ்ரீ:பதிதவததிலே தோறறிருககுமவாகள எனககு நாத ரெனகிறா

௯. கையும் திருவாழியுமான வழகிலே தோறறிருககும ஸ்ரீ வைஷணவா களுககு சேஷபூத ரானவாகள எனககு ஸவாமிக ளெனகிறார்.

௧0. அவனுடைய அகடிதகட நாஸாமாததியததிலே தோறறிருககும ஸ்ரீவை ஷணவாகளுடைய சேஷதவததி னெலலை நிலம நான யெனகி றார்.

௧௧. நிகமததில், பாகவத சேஷதவ பரதிபாதகமான இததிருவாயமொழி யை அபயியஸிதத்வாகள இப புருஷாாததததுககு விரோதியான ஸமஸாரததைக கடபபாகள எனகிறார்.

௮ - ம். திருவாய்மொழி—முடியானே.

பாகவதசேஷத்வம் ப்ரதிபாதித்த ஆழ்வார், இந்தப் பாகவதசே ஷத்வம் பரஸ்பரபோதநத்துக்கு உபயுக்தமாகாமல, பகவத் குணஸ் மாரகமாய், அக்குணாநுபவத்தில் ஒரோரிந்திரியமே பஞ்சேந்திரிய க்ருத்யங்களை யாசைப்பட்டதென்றருளிச் செய்கிறார்.

௧. தம்முடைய திருவுள்ளத்துக் கவன் பக்கலுண்டான சாபலாதிசயத்தைச் சொல்லுகிறார்.

௨. மநஸுக் கனந்தரமான வாக்கு மநோவ்ருத்தியையும தன வருத்தியையு மாசைப்படா நின்றதெனகிறார்.

௩. கைகளானவை வாக்வ்ருத்தியையும் தன் வ்ருத்தியையும் ஆசைபபடா நின்றன வென்கிறார்.

௪. கண்களானவை கைகளின் வருததியையும் ஸ்வ்வ்ருததியையும ஆசைப் படாநின்ற தென்கிறார்.

௫. செவிகளானவை கண்ணினுடைய வருததியையும் தன்னுடைய வ்ருத தியையும் ஆசைபட்டா நின்றன வென்கிறார்.

௬. என்னுடைய ப்ராணனானது உன்னுடைய கீர்த்தியைத தன்செவியாலே கேட்க வாசைப்படாநினற தென்கிறார்.

௭. கரணங்க ளொழியத் தம்முடைய விழவு சொலலுகிறார்.

௮. உம்முடைய வபேக்ஷிதம் செய்கைக கொருகால மில்லையோ, அது வருங் கிடீரென்ன ; அதுவும் நீயிட்ட வழக்கன்றோ வெனகிறார்.

௯. ரக்ஷணோபாய ஜ்ஞனுமாய் விரோதி நிரசன சீலனுமான உன்னை நான் கிட்டுவதென்றெனகிறார்.

௧௦. உன்னைக் காணப்பெறாத வ்யஸநத்தாலே கிலேசப்படுகிற நான், இன் னம் எததனை காலங் கூப்பிடக் கடவேனென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாயமொழியில் ஶப்தமாத்ரததாலே பரமபதத தைச் செல்லப் பெறுவரொன்கிறார்.

---

௯ - ம். திருவாய்மொழி—சொன்னால்.

பகவத் குணாநுபவத்திலே ஆசையுடைத்தான ஆழ்வார், லௌகிகரைப்பார்த்து இதரஸ் தோத்ரம் பண்ணினாலெ துண்டாகிறது, என்னோடே கூட ஸ்ரிய:ப்பதியை ஸ்தோத்ரம் பண்ணினால் ஸர்வாபீஷ்டங்களு முண்டாகுமென்றதை யருளிச் செய்கிறார்.

௧. க்ஷுத்ர விஷயங்களைக் கவிபாடுகை உங்களுக்கு ஹிதமல்ல வென்று உபதேசிக்கையிலே ப்ரவருத்தரானவா அவாகளுக்கு ருசிபிறக்கைக்

காக நானிருக்கிறபடி கண்டிகோளே யென்று தம்முடைய மதத்தை அருளிச் செய்கிறார்.

உ. க்ஷுத்ரரைக் கவிபாடி என்ன ப்ரயோஜன முண்டென்கிறார்.

௩. விலக்ஷணனாய உபகாரகனாயிருக்குமவனை யொழிய க்ஷுத்ர மநுஷ்யரைக் கவிபாடி யென்ன ப்ரயோஜன முண்டென்கிறார்.

ச. மந்தாயுஸ்ஸுக்களான க்ஷுத்ரரைக் கவிபாடிப் பெறுவ தென்னென்னென்கிறார்.

ரு ஸமஸ்த கல்யாண குணத்தனுமாய ஸர்வாபேக்ஷித ப்ரதனுமான ஸர்வேஶ்வரனைக் கவிபாட வாருங்களென்கிறார்

சு. மநுஷ்யாதிகளைக் கவிபாடி ஜீவிப்பதிலும் உடம்பு நோவப் பணிசெய்து ஜீவிக்கை நன்றென்கிறார்

எ. பகவத் விஷயத்தை யொழிய வேறு சிலரைக் கவிபாடுகைக்கு நான் க்ஷமனன்றிக்கே ஒழியப் பெற்றேனென்று ப்ரீதராகிறார்.

அ. நான் பிறரைக் கவிபாடுவேனென்னிலும் என் வாக்கான தவனை யொழியப் பாடா தென்கிறார்

கூ இதரஸ் தோத்திரத்துக்கு அதிகாரி அல்லேனென்கிறார்.

க0. ஸர்வேஶ்வரன் கவியான வெனக்கு இதரஸ் தோத்ரகரண மநுரூபமன் றென்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியி னியலமாத்ரத்தை அப்யஸித்தவர்களுக்குப் பிறரைக் கவிபாட யோக்யமான நீச ஜன்மமில்லை யென்கிறார்.

க0 - ம். திருவாய்மொழி—சன்மம்.

இதர ஸ்துதிபண்ணுகிற கவிகளைப் பகவத்விஷயத்திலே ப்ரவர்த்திக்கும்படி உத்யோகித்து, அவர்கள் புத்தி திரும்பாதபடியாலே, அவர்களைப்போலன்றி, ஸகல ப்ரகாரத்தாலும் ஸர்வேஶ்வரனை ஆஶ்ரயிக்கையாலே தமக்கொரு குறையின்றி ஸர்வாதிஶயமுண்டாய்த் தென்றருளிச் செய்கிறார்.

க. இத்திருவாய் மொழியில் சொல்லுகிற அர்த்தத்தைச் சங்க்ரஹேணவருளிச் செய்கிறார்.

உ. ஆஶ்ரித விரோதிகளை அழியச்செய்த க்ருஷ்ணனுடைய புகழைப் பேசப்பெற்ற எனக் கொரு தட்டில்லை யென்கிறார்.

௩. அவனுக்கு அடிமை செய்கையிலே ப்ரவ்ருத்தனான எனக்கு க்ஷுத்ர விஷய ப்ராவண்யத்தால் வரும் ஹ்ருதய துக்கமில்லை யென்கிறார்.

ச. தேவதாந்தரங்களைப் பற்றினாக்கவர்கள் தஞ்சமல்லவென்னு மிடத்தையும் தன்னைப் பற்றினாரகளைத் தானவிட்டுக்கொடானென்னு மிடத்தையும் காட்டின இவனை பற்றின எனக்கொரு துக்கமில்லை யென்கிறா.

ரு. வைதிக புத்ராநயநததை அநுசந்தித்து இவனைப்பற்றின எனக்கொரு துக்கமுமிலலை யெனகிறா.

சா. கிருஷ்ண குணங்களை அநுபவிககப்பெற்ற வெனக்கொரு துககந்தமில்லை யென்கிறா.

எ. அகாமவஸ்ய ஞைகையாலே ஈஸ்வரனுக் கிவ் விபூதியிலுள்ளதுலீலா ரசமாத்ரமாகையாலே அததை அநுசந்திதத எனககு காம வஸ்யதையு மில்லை, இந்த லீலா விபூதியில ந்தாப்ப விக்கவும் வேண்டா வென்கிறா.

அ. ஜகதரக்ஷணம் பண்ணும் நீரமையை அநுசந்திக்கப்பெறற எனக்கொரு துக்கமில்லை யென்கிறா.

கூ. அகடிதகடநா சமாத்தனை வடதள சாயியை யநுபவிக்கப் பெற்ற எனக்கு ஒரு தளாவுமில்லை யென்கிறா.

க0. அவனைப்பற்றின எனக்கொரு கேடில்லை யென்கிறா.

கக. நிகமத்தில், இத்திருவாய் மொழியை அப்யசித்தாரை சாவலோக ப்ரசித்தமாம்படி ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயிலே நடத்தி, மேலே பரம பதத்திலேசென்றால் தன் ஐஸ்வாய மிவாகளிட்ட வழக்காகு மென்கிறார்.

ச - ம். பத்து.

கைங்கர்யத்துக்கு விரோதி, ஐஸ்வர்ய கைவல்யமென்றார்.

க-ம். திருவாய்மொழி—ஒருநாயகம்.

பகவதா ஸ்ரயணத்தாற்றமக் கொருகுறையிலலை யென்ற ஆழ்வார், அன்யருடைய குறையையுந்தீர்க்க உத்யோகித்து, இஹலோக ஐஸ்வர்யமும் ஸ்வர்க்காதி போகமும் அஸ்திரம், கைவல்யாநுபவ மல்பம், பகவதநுபவமே நிரபாயமான பரம புருஷார்த்த மென்று பரோப தேசம் பண்ணினதை அருளிச்செய்கிறார்.

க. சாாவ பௌமராய்ப் போந்த ராஜாக்கள் அநத ராஜய ஸ்ரீயை யிழந்து இரந்து ஜீவிக்க வேண்டும்படி தாகத ராவாகள். ஆனபின்பு நித்ய ஸ்ரீயான ஸாவேஸவரனைப பற்றப் பாருங்கோ ளென்கிறா.

உ. ராஜயம் பண்ணுகிறநாளில் போக்யைகளாகப் பரிகர ஹித்த ஸ்ரீகளையும் சத்துருக்களுக்குக் கொடுத்து எளிமைப்படுவ ரென்கிறா.

௩. ராஜாக்கள் தங்கள் காலிலே விழுந்து கிடந்தால் ஞுதரிந்திருக்கும் மதிப்பை யுடையவர்கள் "ஒரு சேதனன்" என்று நினையாதபடி மதிப்பறுவர்கள் என்கிறார்.

௪. போகத்தாக்களுடைய நிலையாமையாலும் அவனைப் பற்றவேண்டு மென்கிறார்.

௫. செல்வக்கிடப்போபாதி அங்கநா பரிஷ்வங்கமும் அஸ்திரமென்கிறார்.

௬. வைத்தியர்கள் பிழைத்தாரை எண்ணுமாப்போலே முடிந்தவர்களை யெண்ணுகிறதென், ஜீவித்தவர்களும் சிலர் இல்லையோ வென்ன, அதிருந்தபடி கேட்கலாகாதோ பின்னை யென்கிறார்.

௭. ஐஸ்வர்யத்துக்கு நீர் சொல்லுகிற தோஷமுண்டேயாகிலும் அன்ன பானாதிகள் தாரகமுமாய்ப் போக்கியமுமாயிருக்கிற ஆகாரமுண்டே! என்ன, அதுவும் நிலை நில்லா தென்கிறார்.

௮. ராஜ்யஸ்ரீ அவற்றின் ஸ்வபாவத்தாலே நிலை நில்லா, ஆனபின்பு அவன் றன்னையே பிரயோஜனமாக ஆஸ்ரயுங்கோ ளென்கிறார்.

௯. காயிகக்லேசாத்மகமான தபஸ்ஸைப் பண்ணி அந்தத் தப்பலம் ஸ்வர்க்கமாகக்கொண்டு சுவர்க்கத்தைப் ப்ராபிக்கும்போது பகவத் பிரசாதம் வேணும் அதுண்டாய்ப் ப்ராபித்தாலும் அது தன்னின் ஸ்வபாவத்தாலே நிலைநில்லா தென்கிறார்.

௰. இவைபோ லன்றிக்கே ஆத்மலாபம் நிலைநின்ற புருஷார்த்தமே யென்னில், கீழ்ச்சொன்னதைக் குறித்தொரு நன்மையுண்டே யாகிலும் பகவதா நந்தத்தைப்பற்ற இது ஏகதேசமா யிருக்கையாலே அதுவும் தண்ணிது, ஆனபின்பு அவனைப் பற்றப் பாருங்கோ ளென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி பத்துங்கற்றார் ஐஸ்வர்யாதி க்ஷுத்ர புருஷார்த்தத்தைத் தவிர்ந்து பகவத் கைங்கர்யைகபோகராவ ரென்கிறார்.

௨-ம். திருவாய்மொழி—பாலனாய்.

முன்சொன்ன பரோபதேசம் வ்யர்த்தமாய்ப் போகையாலே, தாம் பகவத் விஷயத்தில் மிகவும் அபிநிவேசத்தையடைந்து, முன்பு செய்த அவதாரங்களெல்லா மிப்பொழுது தமக்குக்காட்ட வேண்டு மென்கிறதை யருளிச்செய்கிறார்.

௧. வடதளசாயியினுடைய திருவடிகளில் சாத்தின திருத்துழாயைச் செவ்வியோடே யிப்போதே பெறவேணுமென்று ஆசைப்படா நின்றா ளென்கிறாள்.

௨. என் பருவத்தில் பெண்களுக் குதவின விடத்திலே எனக்குதவந் தட்டென் னென்னா நின்றா ளென்கிறாள்.

௩. ஒரு ஊருக்காக உதவினதேயன்றிக்கே ஒரு நாட்டுக்காக உதவினவன் பக்கல் உள்ளது பெறத் தட்டென்னென்று நின்றாள் என்கிறாள்.

௪. என்றுமொக்கவேகரூபமா யிருக்கிற பரமபத நிலயன் திருவடிகளில் திருத்துழாய் பெறத் தட்டென்னென்று நின்றாளென்கிறாள்.

௫. ஆனால் இங்கே என்னோட்டையா ளொருத்திக்காகத் தன்னைப் பேணாதே எருதேழடாத்த கிருஷ்ணன் திருவடிகளிற் சாத்தின திருத்துழாய்பெறத் தட்டென்னென்று நின்றாளென்கிறாள்.

௬. நப்பின்னைப் பிராட்டிக்கு உதவினாற்போலன்றிக்கே ஸ்ரீபூமிப் பிராட்டிக்காகத்தன்னை அழிய மாறியுமுதவினவனுடைய திருவடிகளின் திருத்துழாயை ஆசைப்படாநின்றாளென்கிறாள்.

௭. பெரிய பிராட்டியாரைத் திருமார்பிலே வைத்தருளினவனுடைய திருவடிகளிற் சாத்தின திருத்துழாயை ஆசைப்படாநின்றாளென்கிறாள்.

௮. ஸ்ரீஜனகராஜன் திருமகளுடைய விரோதியைப் போக்கின சக்ரவர்த்தி திருமகன் திருவடிகளிற் சாத்தின திருத்துழாயை ஆசைப்படாநின்றாளென்கிறாள்.

௯. "அவனுடைய ஆயுதாதிகளைக் காணவேணும்" என்று சொல்லப்புக்கு முடியச் சொல்லமாட்டாதே நோவுபடாநின்றாளென்கிறாள்.

௧௦. உன மகள் நீயிட்ட வழக்கன்றே அவளுக்கு ஹிதம் சொல்லி மீட்கத் தட்டென்னுனக் கென்றவர்களைக் குறித்து; நான சொல்லிற்றுக் கேளாதே அவனையே யாசைப்பட்டு மிகவும் அவசன்னையாகா நின்றாளெனகிறாள்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸிக்க வல்லார நித்ய ஸூரிகளுக்குச் சதரு ஸராவ ரென்கிறார.

௩-ம். திருவாய்மொழி—கோவைவாயாள்.

ஆழ்வார் ர்த்தித்தபடியே ஏககாலத்தில் அவதாரங்களை யெல்லாங் காட்ட ப்ரீதியடைந்ததை யருளிச்செய்கிறார்.

௧. ஆஸ்ரித விரோதிகளை நிரசிக்கிற விடங்களில் அவ்வவ் சமயங்களில் வந்து முகங்காட்டி அடிமைசெய்யப் பெற்றிலேன் நான், இங்ஙனேயிருக்கவு மென் ஹ்ருதயத்தையே யுனக்குப் போக்யமாகக் கொள்ளுவதே யென்கிறார்.

௨. என்னுடைய கரணகாயமான ஸ்மருதியாதிகளே பரிபூர்ண ஞானவனுக்குப் போகோபகரணங்கள் எல்லா மாயிற்றென்கிறார.

௩. இத்தலையை யுனக்காக்கி அத்தாலே கருத்த ருத்தியனு யிருக்கிறாயே யென்கிறார்.

௪. உன்சுகுமாரமான திருமேனிக்குச் சாத்துமமாலையெல்ல சத்தையேயாய் விடுவதே யென்கிறார்.

௫. தம்முடைய சிநேகாதிகளோடொன்றே ஆபரணாதி சர்வபரிச்சதங் களு மாயிற்றவனுக் கென்கிறார்.

௬. அவன் ப்ரணயித்வாதி சயம தம்மையும ப்ரணயியாக்கிற றென்கிறார்.

௭. என் சத்தையே உனக்கு ஜீவன ஹேதுவாவதே யென்கிறார்.

௮. ஒருவரையொழிய ஒருவர்க்குச் செல்லாதபடி பிறந்தகலவி, பேச்சுக்கு நிலமன்றென்கிறார்.

௯. உன் ப்ரணயித்வப்ரகாஷ்டம் என்னுடைய பேச்சுக்கு நிலமன்றென்கி றார்

௧௦. நானும் சமஸ்தலோகங்களும் ஸர்வேச்வரனும் ஏககண்டராய் ஏத்தினு லும் ஏத்தப்போகாத விஷயத்தை என்செல்லாமையாலே ஏத் தினேனென்கிறார்.

௧௧. நிகமத்தில், ஈச்வரனுடைய உபய விபூதியும் இத்திருவாய்மொழி அப் பியஸித்தாரிட்ட வழக்கென்கிறார்.

---

௪ - ம். திருவாய்மொழி—மண்ணையிருந்து.

அவதாரங்களைக் காட்டி மறைந்தபடியாலே, ஆழ்வார் நாயகி தன்மையை யடைந்து, மோஹித்து, ஸம்பந்தி ஸத்ருபாவஸ்துக்களைப் பார்த்துக் கதறுகிறாளென்று, தாய் சொல்லுவதாக வருளிச் செய்கிறார்.

௧. வினவ வந்தவர்களுக்குத் தன்மகள் செய்தியை அறிவியா நின்றுகொண்டு, இப்படி இவளை எம்பெருமான் பிச்சேற்றினன், நானிதுக் கென்செய்வேன் என்கிறாள்.

௨. அபராகருதருடையான விவள் செய்கிறன வொன்றும் தெரிகிறதில்லை யென்கிறாள்.

௩. இவளுடைய அதிப்ரவருத்திகளைச் சொல்லப்புக்கு அவற்றுக் கெல்லை யில்லை யென்கிறாள்.

௪. வ்யஸனசஸ்ஹை அல்லாத இவளை இப்படி நோவு படுத்துவதே யென் கிறாள்.

௫. இவளுக்கு இவ்வவஸாத மெவ்வளவாய் முடியக் கடவதென் றறிகிறிலே னென்கிறாள்.

சா. தன்மகள் பிச்சுக்கு நிதானத்தையும் அதடியாக வந்த பிச்சு தன்னையும் சொல்லுகிருள்.

எ. தேறின போதோடு தேருத போதோடு வாசியற எப்போதும் அவன் றிறமல்ல தறியாளே என்கிருள்.

அ. அத்யந்த தூதசைவாதறியா னிருலு மிவள் தத்தேகபனாயா யிருக்கு மென்கிருள.

கூ. பெறுதற்கரிய விவள் தன்னையே வாய்வெருவி மோஹிக்கும்படி பண் ணுநின்ற னெனகிருள.

க0. சதரு ரூபதாரா த்தங்களை அநுசந்திகக க்ஷமமல்லாத வ்யசனாதிசயத் தாலே இவளுக்குப் பிறந்த விக்ருதிகளைச் சொல்லி நானென் செய்வே னென்கிருள்.

கக. நிகமத்தில், இததிருவாய்மொழி கறறா சம்சார துரிதமும் போய், பகவத் விஸ்லேஷகந்த மில்லாத் திருநாட்டிலே யெல்லாருமெ சிர சாவகிக்கு மேன்மையோடே இருக்கப்பெறுவ ரென்கிருா.

ரு - ம். திருவாய்மொழி—வீற்றிருந்து.

அந்தமோஹந்தீரும்படி ஸர்வேஶ்வரன் நித்திய சூரிக ளோடே கூட ஸாந்நித்யம் பண்ணுகையில், மங்க ளாசாஸநம் பண்ணிப் ப்ரீதியடைந்ததை யரு ளிச் செய்கிருர்.

க. கிருஷ்ணனைக் கவிபாடப் பெற்ற வெனக் கொருநாளுமொரு குறை யில்லை யென்கிருா.

உ. இம்மஹைஶ்வரியததுக்கு அடியான ஶ்ரிய: பதித்வத்தை அருளிச்செ ய்கிருா.

ந. ஸாவேஶ்வரனைக் கிட்டிக்கவிபாடுகையாலே அவனுடைய வாநந்தத் தையும் விளாக்கொலை கொள்ளும் படியான வாநந்தத்தை உடை யனுனேன் என்கிருர்.

ச. நித்ய சம்சாரியான வென்பக்கல் பண்ணின மஹோபகார மென்னுல் பரிச்சேதிக்க வொண்கிறதில்லை யென்கிருா.

ரு. எனக்குத் தன் படிகளைக் காட்ட, கண்டநுபவித்து நான் என்னுடைய ப்ரதி பந்தங்களெல்லாம் போம்படி திருவாயமொழி பாடி நிரதி சயாநந்தியானே னென்கிருா.

சா. இதுக்கு முன்புப் பெருததா, இனிப்பெறவேண்டுவது ஒன்றுண்டோ வென்கிருா.

எ. "அரியதுண்டோவெனக்கு" என்கிற இப்பூர்த்தி உமக்கெத்தாலே வந்த தென்ன, பகவத் கிருபையாலே வந்த தென்கிருா

அ. எம்பெருமானை சௌகுமார்யத்துக்குத் தகுதியாகக் கவிசொல்ல வல்ல வெனக்குத் திருநாட்டிலும் நிகரில்லை யென்கிறார்

௯ ஸர்வேஸ்வரனை யெங்கும் புக்குக் கவிபாடப்பெற்ற எனக்கு ஒப்பாருண்டோ வென்கிறார்

௧௦. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆநந்தாவஹனானே னென்கிறார்

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றாரைப் பெரியபிராட்டியார் தமக்கே பரமாகக்கொண்டு சமஸ்த துக்கங்களையும் போக்குவ ரென்கிறார்

௬-ம். திருவாய்மொழி—தீர்ப்பாரை.

ஸாந்நித்யம் பண்ணின ஈஸ்வரனந்தர்ஹிதனானையாலே ஆழ்வார் மோஹிக்க, இதர தேவதாவேசமென்று க்ஷுத்ரதேவதாராதநம் பண்ணுவதைப் பரிஹரித்து, பகவந்நாம ஸங்கீர்த்தநமும், ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாததூளிகளும், இதற்குப் பரிஹாரமென்று, ஆப்தஸகி சொல்ல, வப்படியே பரிஹாரம் பண்ண, மோஹந் தீர்ந்ததை யருளிச் செய்கிறார்.

௧. தோழி இவள் நோய்க்கு நிதானத்தைச் சொல்லி நீங்கள் செய்கிறவை பரிஹார மன்றென்று விலக்குகிறாள்.

௨. க்ஷுத்ரதேவதா சாந்தியா லிந்நோய் போக்குகை அறிது பகவத் விஷயத்தைச் சொல்லி லிவளைப் பெறலாமென்கிறாள்.

௩. அயுக்தங்களைச்செய்யாதே அவன் திருவடிகளையே தொழுங்கோள் அதுவே இந்நோய்க்கும் பேஷஜ மென்கிறாள்

௪. ஆப்தஸகனான ஸர்வேஸ்வரனுடைய திருநாமத்தைச் சொல்லவல்லி கோளாகில் இவளைக் கிடைக்கு மென்கிறாள்.

௫. நோய்க்கு யோக்யமான பரிஹாரத்தைப் பண்ணுங்கோ ளென்கிறாள்.

௬. "தவளப்பொடி" என்று சொன்னது இன்னதென்று விசேஷித்து அத்தைச் செய்ய உத்தியோகிக்கவே இவள் நோய் தீருமென்கிறாள்.

௭. இவள் பிழைக்கவேண்டி யிருந்தீர்களாகில் ஸ்ரீவைஷ்ணவர்களை ஆச்ரயியுங்கோ ளென்கிறாள்.

௮. க்ஷுத்ர தேவதாஸமாச்ரயணம் உங்களுக்குக் கீழ்மையை விளைக்கு மென்கிறாள்.

௯. கிருஷ்ணன் திருவடிகளை நினைத்து வாழ்த்துங்கோள் இவள் பிழைக்க வேண்டி யிருந்தீர்களாகி லென்கிறாள்.

௧0. இவளுக்கு க்ருஷ்ணன் திருவடிகளிலுண்டான வைகாந்தியத்தை அநுசந்தித்து அவனையேதஞ்சுங்கோள இவள் உஜ்ஜீவிக்குமென்கிறாள்.
௧௧. நிகமத்தில், பலம் சொல்லித தலைக் கட்டுகிறார்.

எ-ம். திருவாய்மொழி—சீலமில்லா.

மோஹந்தெளிந்து, திவ்யமங்கள விக்ரஹத்தைக் காட்டவேண்டுமென்று அஹோராத்ரம் விழித்தமையையருளிச்செய்கிறார்.

௧. நெடுங்காலம் கூப்பிடச்செய்தேயும் விஷயீகரியாதபடியாக நான் பண்ணின பாபத்தின் மிகுதியிருக்கிறபடி யென்னென்கிறார்.

௨. பண்டுபண்ணின உபகாரங்களைச்சொல்லி; அப்படி உபகரித்துன் சுவட்டை அறிவித்து இப்போது நான் கூப்பிட, முகங்காட்டாதே யெழவாங்கி யிருக்கைபோருமோ என்கிறார்.

௩. எனக்குன்னைக் காட்டாதொழிந்தால் "நீ என்னைக் காண்கைக்குப் பாக்கியம் பண்ணிற்றில்லை" யென்றாகிலும் என்கண்முகப்பேவந்தொன்று சொல்லுகிறிலை யென்கிறார்.

௪. தாம் காணும்படியாக வரவேண்டு மென்கிறார்.

௫. ப்ரம்ஹாதிகளுக்கும் காணமுடியாதிருக்கிற உன்னுடைய வடிவழகைக் காணவேணுமென்று ஆசைப்படாநின்றேன் என் சாபலமிருந்தபடியென் னெனகிறார்.

௬. "என்பக்கலிலேசதாசந்நிஹிதனாயிருந்தே யுன்னைக்காட்டாதொழிகிறது நீ நினையாமை" என்றறிந்துவைத்தேகாண வாசைப்படா நின்றேன், அதுககடி என்னறிவுகேடென்கிறார்.

௭. எனக்கு நீர சிறிதுசெய்தமையுண்டு இவ்வம்சம் பெற்றேன், எனக்கித்தால் போராதென்கிறார்.

௮. பெற்றவம்சம் சொன்னாராய்ப் பெறாதவம்ச மிதுவென்கிறார்.

௯. உபாயங்களொன்றுமின்றிக்கே யிருக்கிற நான் "காணவேண்டும்" என்றாசைப்பட்டால் காண்கைக் குபாய முண்டோ வென்கிறார்.

௧0. காணப்பெறாவிட்டால் மறந்துபிழைக்க வொண்ணாதபடி எனக்குததக்கதொரு ஞானதிருஷ்டி எங்ஙனே உண்டாயிற் றென்கிறார்.

௧௧. நிகமத்தில, இத்திருவாயமொழி கற்றார எம்பெருமானோடே நித்திய ஸம்ச்லேஷம் பண்ணலாந் திருநாட்டிலே செல்லப்பெறுவ ரென்கிறார்.

௮-ம் திருவாய்மொழி—ஏறாளும்.

கூப்பிட்டும் வாராதபடியாலே, இந்த ஸர்வேச்வரனுக்கு உபேக்ஷா விஷயமான ஆத்மாத்மீயங்களை தமக்கு வேண்டாமென் றருளிச்செய்கிறார்

க. எம்பெருமான் விரும்பாத ச்லாக்யமான நிறங்கொண்டெனக் கொரு காரியமில்லை யென்கிறாள்

உ. அவன் விரும்பாத பவ்யமான நெஞ்சால் என்ன காரிய முண்டென்கிறாள்

௩. அவன் விரும்பாத வடக்கம் எனக்கு வேண்டா வென்கிறாள்.

௪. பெண் பிறந்தாரைப் பேணும் கிருஷ்ணன் விரும்பாத நிறமெனக்கு வேண்டா வென்கிறாள்.

௫. தசரதாத்மஜன் விரும்பாத அறிவினால் என்ன ப்ரயோஜந முண்டெ னக் கென்கிறாள்.

௬. அவன் விரும்பாத லாவண்யத்தால் என்ன காரிய முண்டென்கிறாள்.

௭. நான் ஆபரணம்பூண் டொப்பித்திருக்கிற இவ்வொப்பனை யார்க்கென் கிறாள்.

௮. அவன் என்னை யுபேக்ஷிக்குமாகில் என்னுடைய மேகலையாலென்ன ப்ரயோஜந முண்டென்கிறாள்.

௯. அவன்விரும்பாத உடம்புகொண்டு காரியமென் னென்கிறாள்.

௧௦. சீலகுணத்தையும் விரோதிநிரசநத்தையுஞ்சொல்லி அவன் விரும்பாத சத்தையாலென்ன காரியமுண்டென்று க்ரமத்தோடேசேர உபஸம் ஹரிக்கிறாள்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார்க்குப்பலம் பரமபதமென்கிறார்.

௯-ம். திருவாய்மொழி—நண்ணாதார்.

உன்விச்லேஷமானாலும் ஸஹிக்கிறோமொழிய, உன்னிடத்தில் விமுகரான ஜீவனைப்பார்க்கமாட்டோம், இந்த தேஹம் விடும்படி செய்யவேண்டுமென்று ஸ்வாமியை ப்ரார்த்தித்ததை யருளிச்செய்கிறார்.

க. நானுன் திருவடிகளிலேவந்து கிட்டும்படி எனக்கு இச்சரீர விச்லேஷத்தைப்பண்ணித் தந்தருள வேணுமென்கிறார்.

உ. இவர்கள் துக்கத்தைப் போக்காயாகில் என்னை யுன் திருவடிகளிலே அழைத்தருள வேணுமென்கிறார்.

௩. துக்ககந்தமில்லாத உன் திருவடிகளிலே அடிமை கொள்ளவேண்டுமென்கிறார்.

௪. என்னை முன்னம் சம்சாரிகள் நடுவில்நின்றும் வாங்கவேணுமென்கிறார்.

௫. ஜன்மஜரா மரணாதிகள் நடையாடாததேசத்திலே அழைத்துக்கொண்டருளவேணுமென்கிறார்

௬. ஜீவநார்த்தமாக பரஹிம்சைபண்ணுகிற ஸம்சாரிகள் நடுவினின்றுமென்னையுன் திருவடிகளிலே அழைத்தருளவேணுமென்கிறார்.

௭. சகலபதார்த்தங்களும் த்வததீநமானபின்பு நீயே யுன்னைக்கிட்டும் வழி பார்த்தருள வேணுமென்கிறார்.

௮. நாமே செய்யப்புக, நீர் "வேண்டா" என்றவாறே யன்றோ தவிர்ந்தது; இதுக்கு நம்மைக்காற் கட்டவேணுமோ வென்ன; செய்யக்கடவதாகி லதென்று செய்வதென்கிறார். "எம்மா வீட்டுத்திறமும் செப்பம்" என்றாரே.

௯. திருநாட்டிலிருந்த விருப்பைக் காட்டியருளக் கண்டனுபவிக்கப் பெற்றேனென்று த்ருப்தராகிறார்.

௧0. விட்டதிது பற்றின திதுவென்று வ்யக்தமாக வருளிச்செய்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸித்தாரை இதுதானே அவன் திருவடிகளிலே சேர்க்குமென்கிறார்.

௪0-ம். திருவாய்மொழி—ஒன்றுந்தேவும்.

பின்னும் தேவதாந்த்ரபரரான சேதனரிடத்தில் க்ருபையாலே, ஸ்ரீமந்நாராயணனே பரத்வமாகையாலே, தேவதாந்த்ரத்தைவிட்டு ஜகத்காரணபூதனான ஸர்வேஶ்வரனை, யாஶ்ரயியுங்களென்று பரோபதேசம் பண்ணினதை யருளிச்செய்கிறார்.

௧. "ஏகோஹவை நாராயண ஆஸீத்" என்கிற காரணவாக்ய ப்ரக்ரியையை அநுசந்திக்கிறார்.

௨. எல்லாரையும் உண்டாக்கினவன் நின்றருளுகையாலே ப்ராப்யமான திருநகரியை ஆஶ்ரயியுங்கோளென்கிறார்.

௩. ஜகந்நிகரணாதி திவ்யசேஷ்டிதங்களாலுமிவனே பரன், இதிசையாதாரொன்றோடு வந்து கலந்து பேசிக காணுங்கோளென்கிறார்.

௪. சகலோப நிஷத் ப்ரஸித்தனான நாராயணனே பரதத்வம் என்று நிஷ்கர்ஷிக்கிறார்.

௫ லைங்கபுராணமதுடக்கமான குதிருஷ்டி ஸ்மருதிகளையும் பாஹியாஸ்மரு திகளையும் ப்ரமாணமாகக் கொண்டு வந்தவர்களை நிஷேதிக்கிறார்.

௬. எம்பெருமானைச் சமாஶ்ரயித்து அவன் வஞ்சனத்தைத் தப்புங்கோ ளென்கிறார்.

௭. தேவதாந்தரசமாஶ்ரயணம் செய்து கண்டீர்களோ இனிப் பகவத் சமாஶ்ரயணத்தால் அமையு மவற்றைக் காணுங்கோ ளென்கிறார்.

௮. இதர தேவதாசமாஶ்ரயணம் பண்ணினவன்றோ மார்க்கண்டே யாதிகள் ஸ்வாபிலஷிதம் பெற்றதென்ன, ஆகில் திருந்தபடியைக் கேட்க லாகாதோ வென்கிறார்.

௯. அவன் வர்த்திக்கிற திருநகரியை உங்கள் கயார்த்துக்கு விஷயமாகக் வமையு மென்கிறார்

௧0 பொலிந்து நின்ற பிரானுக்கடிமை செய்கையே உசிதமென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார்க்கு பரமபதம் சுலபமென்கி றார்.

௫-ம பத்து.

விரோதியைப் போக்குவானுமவனே யென்றார்

௧-ம். திருவாய்மொழி—கையார்.

பக்தியில்லாமல் பகதன்போல வஞ்சகோக்திகள் சொல்லிப் பாஹ்யவிஷயங்களிலே பரவணனான வெனக்கு, ஸ்வாநு பவத்தை யுபகரித்தானென்று, உபகார ஸ்மருதி பண்ணினதை யருளிச்செய்கிறார்

௧. என்பக்கலுள்ள தஹ்ருதயமான வுக்ததியாயிருக்க இத்தை ஸஹ்ருதய மாகக்கொண்டு விரும்பி, "இனியிதுக்கவவருகில்லை" யென்னும் படியானபேற்றைப் பண்ணித் தந்தானென்கிறார்.

௨. ஸாவஞ்யனவ னத்தை மெய்யாகக்கொண்டு தன்விபூதியோடேகூட நானிட்ட வழக்காக்குனென்கிறார்.

௩. இப்படி வார்மாத்திரத்தாலே உன்னைப்பெற்ற நான உன்னையொழிய வேறொன்றை ஆசைப்பட்டே னென்கிறார்.

௪. நீயேயென் விரோதியைப்போக்கி உன் திருவடிகளிலே அழைத்துக் கொண் டருளவேணு மென்கிறார்.

௫. நீர் "நீர் மலினம்" என்கிற தெத்தையென்ன, இன்னதென்கிறார்.

௬. வடிவழகைக்காட்ட அதைக்கண்டவாறே தம்முடைமை மறந்து பரீத ராய்க் கண்டுகொண்டே னென்கிறார்.

எ. பகவத் க்ருபை நடையாடாநிற்கச் சிலர்க்கு "நானயோக்யன்" என்றிழக்கவேண்டாகிடிகோ ளென்கிருர்.

அ. நான் நித்யஸூரிகளைப்போல நித்யசம்ஸாரத்தை விட்டு அவனையே யெல்லா உறவுமுறையுமாகப்பற்றப் பார்த்தே னென்கிருர்.

௯. என் க்லேசமெல்லாந் தீரும்படி தன் க்ருபையாலே அப்ராக்ருதமான வடிவோடேவந்து கலந்தா னென்கிருர்.

௧0. அவன் தன்பக்கலிலே ருசியைப் பிறப்பித்த மஹோபகாரத்தை அநுசந்தித்த க்ருதஜ்ஞதையே பறருசாகவந்து என்னோடே நிரவதிக ஸம்ஸ்லேஷத்தைப் பண்ணிஞ னென்கிருர்.

௧௧. நிகமத்தில், இதை அப்யஸித்தவர்கள் நிரவதிக ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயையுடையராய் அவன் திருவடிக்கீழே புகப்பெறுவ ரென்கிருர்.

உ-ம். திருவாய்மொழி—பொலிகப்பொலிக.

தம்முடைய உபதேசத்தால் சிக்ஷிதராய், பகவத்பரரான சேதநரையும், தம்முடைய ப்ரபாவத்தைப் பார்க்க வந்த நித்யஸூரிகளையும், பார்த்து, மங்களாஸாஸநம் பண்ணினதை யருளிச்செய்கிருர்.

௧. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியைக்கண்டு மங்களாஸாஸனம் பண்ணுகிருர்.

உ. இவ்வைஷ்ணவ ஸம்ருத்தியை அநுபவிக்கைக்கு அநுகூல ரெல்லாரும் வாருங்கோ ளென்கிருர்.

௩. நித்ய ஸூரிகளுக்குமபுகுந்து பரிமாறலாம்படி ஸம்ஸாரமடைய ஸ்ரீவைஷ்ணவாகளே யாயிற் றெனகிருர்.

௪. அவிசால்லியமான பாஹ்ய ஸமயங்களை வேரோடே அறுப்பாரைப்போலே யெங்கும் வைஷ்ணவர்களே யாய்ப் பகவத் குணாநுபவஜநித ஹர்ஷத்தாலே களித்துத் திரியாநின்ருர்க ளெனகிருர்.

ரு. ஸ்ரீவைஷ்ணவர்கள் அஸுரராக்ஷஸரான உங்களையும் முடித்து யுகத்தையும் போப்பர்க ளென்கிருர்.

௬. ஸகல துக்கங்களையும் போக்குகைக்காக ஸ்ரீவைஷ்ணவர்கள் லோகமடங்கப் பரந்தார்கள், அவர்களோடே நீங்களு மவனை ஆஸ்ரயித்து உஜ்ஜீவியுங்கோ ளெனகிருர்.

எ. நாங்கள் நெடுநாள் தேவதைகளுக்குப் பச்சையிட்டு ஆஸ்ரயித்துப் போந்தோம், அதின் முடிவுகண்டு பின்னைப பகவத் ஸமாஸ்ரயணம் பண்ணுகிறோமென்ன; நீங்கள் ஆஸ்ரயிக்கிற தேவதைகள் உங்களை ரக்ஷிப்பதும் அவன் பக்கலிலே கொண்டு சென்று காட்டிக்கொடுத்ததாயிற்று, ஆன பின்பு அவனையே ஆஸ்ரயிக்கப் பெறி

லழகிது, அதுவும் மாட்டிக்கொள்ளாகில் நீங்கள் அவர்களுக்கு இடுகிற வற்றை "இவர்கள் அவனுக்குத் தந்தார் இவர்கள் முகத்தாலே நாம் பகவத் ஸமாராதனம் பண்ணுகிறோம்" என்று புத்திபண்ணி யாகிலும் இடப்பாருங்கோள் என்கிறார்.

௮. அவனுடைய வசாதாரண விக்ரஹத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் லோகமடங்கப் பரந்தார்கள். அவர்களைப்போலே நீங்களும் அவனை ஆஶ்ரயிக்கப் பாருங்கோள் என்கிறார்.

௯. பகவத்குண நிஷ்டரும் கைங்கர்ய நிஷ்டருமான ஸ்ரீவைஷ்ணவர்கள் பூமியெங்கும் பரந்தார்கள். நீங்களும் அவர்களோடொக்க அநந்ய ப்ரயோஜநராய் ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்

௧0. நீங்களாஶ்ரயிக்கிற தேவதைகள் செய்கிற விதத்தை, நீங்களும் செய்திகோள்ளாகில் யுக்தாயுக்தமான தோஷங்களும் போமென்கிறார்

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார்க்குத் தேவதாந்தரங்கள் பக்கலுண்டான பரத்வசங்கையும், எம்பெருமான் பக்கல் ப்ரயோஜநாந்தர பரதையுமான ஸதோஷம் போமென்கிறார்

௩-ம். திருவாய்மொழி—மாசறுசோதி

எங்கும் பகவத்விஶ்லேஷத்தை ஸ்மரித்துக்கொண்டு அதனாலே நாயகி தன்மையையடைந்து, லோகத்தார் நிந்திக்கும்படியான மடலூரும்படியை, உத்யோகித்ததை யருளிச்செய்கிறார்

௧. "சௌந்தர்யத்தாலும் சீலத்தாலும் மதிப்பாலும் பழிப்பற்றதொரு விஷயமாயிற்று அது. நீ செய்யப்புகுகிறவிது, அவ்விஷயத்திற்குப் பழிப்பை விளைக்கப் புகுகிறாயிடாய்" என்று தோழி சொல்ல, நான் அவ்விஷயத்துக்குப் பழிப்பு விளைக்கப் புகுகிறேனல்லேன், பழிப்பறுக்கப் புகுகிறேன்காண் என்கிறாள்.

௨. கீழே வடிவழகை அநுஸந்தித்த அநந்தரம் பாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து அப்போதே பெறாமையாலே வழியல்லா வழியே மடலூர்ந்தாகிலும் பெறப்பார்க்கிறாள்.

௩. என்செய்யும் "ஊரவர் கவ்வை" என்றாள். அவர்கள் சொல்லுகிறதைச் சொல்லுகிற தோழியான நீதான் எவ்வளவிலே நிற்கிறாயென்கிறாள்.

௪. அவனிப்போது வந்து முகங்காட்டிற்றிலனாகிலும் தான் முகங்காட்டாத போதும் தன்னையொழிய நமக்கு மற்றொன்றால் பொருந்தாதபடி பண்ணினானே! அவன் செய்தபடி பொல்லாதோ வென்கிறாள்.

௫. நீயவனுக்குக் குணஹானி சொல்லுவது என்னை மீட்கைக்காகவிறே அதுவும் நான் அவனைப்பற்றுகைக்கு உறுப்பாகச் சொன்னது யான வித்தனை யெனகிறாள்.

௬. நீயிப்படி வ்யவஸிதையானபடி அறிந்தால் அவள் ஜீவியாள் கிடாய் யென்ன, அவள் ஜீவிக்கிலென முடியிலென் என்கிறாள்.

௭. அவன் குணஹானி சொல்லுகிற ஸ்ரீகள வாயடங்கும்படி நாமவனை வரக்கண்டு அந்த உபகாரத்துக்காகத் தலையாலே வணங்கவல் லோமே யெனகிறாள்.

